மே 2022

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்









| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 01. | NITI ஆயோக் | 03 |
| 02. | கோர்பிவாக்ஸ் | 04 |
| 03. | தேசிய கயிறு வாரிய மாநாடு, கோயம்புத்தூர் | 11 |
| 04. | கீழடி அகழாய்வு | 12 |
| 05. | பத்திரிகை சுதந்திரம் | 17 |
| 06. | உலக இரத்தம் உறையா நாள்<br>உலக பாரம்பரிய நாள் | 20 |
| 07. | 'அசானி' புயல் | 30 |
| 08. | முதன்மை அறிவியல் ஆலோசகர் | 32 |
| 09. | UNEP புவியின் சாம்பியன் விருது | 33 |
| 10. | மயிலாடும்பாறை ஆய்வு முடிவு | 35 |
| 11. | புலிட்சர் விருது | 40 |
| 12. | மொத்தக் கருவுறுதல் விகிதம் | 41 |
| 13. | உலக உணவுப் பரிசு | 41 |
| 14. | அமிர்த நீர்நிலை | 44 |
| 15. | அரசுப் பள்ளிகளில் காலை உணவு | 47 |
| 16. | மாட்ரிட் ஓப்பன் | 47 |
| 17. | தலைமைத் தேர்தல் ஆணையர் – ராஜீவ் குமார் | 49 |
| 18. | உலக நூல் மற்றும் பதிப்புரிமை நாள் | 55 |
| 19. | உலக அருங்காட்சியக நாள் | 56 |
| 20. | இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.4%: ஐநா கணிப்பு | 75 |

**1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'கங்கா வினாடி–வினா – 2022' ஆனது எதன்கீழ் நடைபெறுகிறது?**

அ. தூய்மை இந்தியா திட்டம்

**ஆ. தேசிய தூய்மை கங்கை திட்டம் ☑**

இ. பசுமை இந்தியா இயக்கம்

ஈ. இமயமலைச் சூழலமைப்பை நிலைநிறுத்துவதற்கான தேசிய திட்டம்

✓ தேசிய தூய்மை கங்கை இயக்கமும் (NMCG) டிரீ கிரேஸ் அறக்கட்டளையும் இணைந்து, 'கங்கா குவெஸ்ட்' என்ற இணையவழி வினாடி–வினா போட்டியை கடந்த 2019ஆம் ஆண்டில் தொடங்கின. இந்த ஆண்டு, 'கங்கா குவெஸ்ட் – 2022' வினாடி–வினா போட்டி ஏப்.7ஆம் தேதி முதல் தொடங்கி நடைபெறுகிறது.

✓ வினாடி–வினா போட்டிக்கான கடைசி தேதி மே.22ஆம் தேதி ஆகும். இது உயிரியல் பன்முகத்தன்மைக்கான சர்வதேச நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஜூன்.5, 2022 அன்று உலக சுற்றுச்சூழல் நாளையொட்டி நேரடி வினாடி–வினா போட்டியுடன் வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். இந்தப் போட்டியானது 'விடுதலை அமுதப் பெருவிழாவின்' ஒருபகுதியாக நடத்தப்படுகிறது.

**2. சிறார்களை மையமாகக்கொண்டு, நீடித்த வளர்ச்சி இலக்குகளில் (SDGs) UNICEF இந்தியாவுடன் கூட்டு சேர்ந்துள்ள நிறுவனம் எது?**

அ. மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ. NITI ஆயோக் ☑**

இ. ஸ்மைல் அறக்கட்டளை

ஈ. பிரதம் அறக்கட்டளை

✓ அரசாங்க மதியுரையகமான NITI ஆயோக் மற்றும் UNICEF இந்தியா ஆகியவை சிறார்களை மையமாகக் கொண்டு, நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDGs) குறித்த நோக்கத்திற்கான அறிக்கையில் (SoI) கையெழுத்திட்டன. SoI ஆனது, 'இந்தியாவின் குழந்தைகள் நிலை: பல பரிமாண குழந்தை வளர்ச்சியின் நிலை மற்றும் போக்குகள்' பற்றிய முதல் அறிக்கையை வெளியிட, ஒத்துழைப்புக்கான கட்டமைப்பை முறைப்படுத்த எண்ணுகிறது.

**3. NITI ஆயோக்கின் புதிய துணைத் தலைவராக (2022 ஏப்ரலில்) நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. ஜெயதி கோஷ்

ஆ. அபிஜித் பானர்ஜி

**இ. சுமன் K பெரி ☑**

ஈ. ரமேஷ் சந்த்



✓ NITI ஆயோக்கின் புதிய துணைத் தலைவராக டாக்டர் சுமன் K பெரி நியமிக்கப்பட்டுள்ளார். பணியாளர், பொது மக்கள் குறைதீர் மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின்படி, டாக்டர் இராஜீவ் குமாரை அடுத்து அவர் பதவியேற்பார்.

✓ டாக்டர் சுமன் K பெரி, ஒரு முன்னணி இலாப நோக்கற்ற கொள்கை ஆராய்ச்சி நிறுவனமான தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சி கவுன்சிலின் (NCAER) தலைமை இயக்குநராக பணியாற்றியுள்ளார். அவர் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழு, தேசிய புள்ளியியல் ஆணையம் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கைக்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

**4. சமீபத்தில் பணியில் சேர்க்கப்பட்ட, 'உர்ஜா பிரவாகா', கீழ்காணும் எந்த ஆயுதப் படையின் கப்பலாகும்?**




அ. இந்திய இராணுவம்

ஆ. இந்தியக் கடற்படை

இ. இந்திய வான்படை

**ஈ. இந்தியக் கடலோரக் காவல்படை ☑**

✓ 'உர்ஜா பிரவாகா' என்ற இந்தியக் கடலோரக் காவல்படை கப்பல் (துணைக்கப்பல்) குஜராத்தின் பரூச்சில் உள்ள இந்தியக் கடலோரக் காவல்படையில் சேர்க்கப்பட்டுள்ளது. இது, 2017ஆம் ஆண்டு முதல் அங்கு இயங்கி வரும் 'உர்ஜா ஷிரோதா' என்ற துணைக் கப்பல் தவிர, கடலோரக் காவல்படை மாவட்டத் தலைமையகம்–4 (கேரளா & மாஹே)–இன் செயல்பாட்டுக் கட்டளையின்கீழ் இருக்கும். 36 மீட்டர் நீளங்கொண்ட இந்தக் கப்பல், சரக்குக் கப்பல் எரிபொருளைக் கொண்டு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**5. 5–12 வயது வரையிலான குழந்தைகளுக்கு, இந்தியாவில் அவசரகால பயன்பாட்டு அங்கீகாரம் வழங்கப்பட்ட முதல் தடுப்பூசி எது?**



அ. கோவாக்சின்

ஆ. கோவிஷீல்டு

இ. நோவாவாக்ஸ்

**ஈ. கோர்பிவாக்ஸ் ☑**

✓ 5 முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் செலுத்த 'Corbevax'–க்கு அவசரகால பயன்பாட்டு அங்கீகாரத்தை வழங்க இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளரின் வல்லுநர் குழு பரிந்துரைத்துள்ளது. ஹைதராபாத்தைச் சார்ந்த பயோலாஜிக்கல்–இ நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட, 'Corbevax' என்பது COVID–19–க்கு எதிராக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட RBD புரத துணை அலகு தடுப்பூசி ஆகும். தற்போது, 12 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு 'Corbevax' தடுப்பூசி வழங்கப்படுகிறது. 15–18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 'கோவாக்சின்' தடுப்பூசி வழங்கப்படுகிறது.

**6. 'இந்தியா ஔட் – India Out' பிரச்சாரத்துடன் தொடர்புடைய நாடு எது?**



அ. இலங்கை

ஆ. நேபாளம்

**இ. மாலத்தீவுகள் ☑**

ஈ. வங்காளதேசம்

✓ மாலத்தீவு அதிபர் இப்ராகிம் முகமது சோலி, 'இந்தியா ஔட்' பிரச்சாரத்துக்கு தடை விதித்து உத்தரவு பிறப்பித்தார். முன்னாள் அதிபர் யாமீன் தலைமையில், மாலத்தீவு அரசாங்கம் இந்திய இராணுவத்தை மாலத்தீவு நாட்டில் அனுமதிப்பதாக இந்தப் பிரச்சாரம் குற்றஞ்சாட்டுகிறது. அதிபர் சோலியானவர், 'இந்தியா பர்ஸ்ட்' வெளியுறவுக் கொள்கையைத் தேர்ந்தெடுத்துள்ளார். இந்தியாவுக்கு எதிரான வெறுப்புணர்வைத் தூண்டும் அந்தப் பிரச்சாரம், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று மாலத்தீவு தேசிய பாதுகாப்பு கவுன்சில் தனது முடிவை அறிவித்தது.

**7. உலக தேர்தல் அமைப்புகளின் சங்கம் அமைந்துள்ள நாடு எது?**

அ. இந்தியா ஆ. பிரேசில்

இ. அமெரிக்கா **ஈ. தென் கொரியா ☑**

A WEB
Association of World Election Bodies

✓ உலக தேர்தல் அமைப்புகளின் சங்கம் (A–WEB) 2013–இல் தென் கொரியாவின் சாங்–டோவில் நிறுவப்பட்டது. இது தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் முதல் பன்னாட்டு அமைப்பாகும். மேலும் இது 118 EMB–களை

உறுப்பினர்களாகவும் 20 பிராந்திய சங்கங்களை இணை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா தலைமையிலான குழு தென்னாப்பிரிக்கா மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்று அவர்களின் தேர்தல் ஆணையத்துடனும், இரு நாடுகளிலும் உள்ள பெரிய NRI சமூகத்தினருடனும் உரையாடல்களை நிகழ்த்தியது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டு வாக்காளர்களாக பதிவுசெய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

**8. 'ஹனுமன்ஜி சார் தாம்' திட்டத்தின் இரண்டாவது சிலை திறக்கப்பட்டுள்ள மோர்பி உள்ள மாநிலம் எது?**

அ. மத்திய பிரதேசம்

**ஆ. குஜராத் ☑**

இ. உத்தரப்பிரதேசம்

ஈ. பீகார்



✓ ஹனுமன் ஜெயந்தியை முன்னிட்டு குஜராத்தின் மோர்பியில் 108 அடி உயர ஹனுமன் சிலையை பிரதமர் மோடி திறந்து வைத்தார். 'ஹனுமன்ஜி சார் தாம்' திட்டத்தின் ஒருபகுதியாக, நாடு முழுவதும் 4 திசைகளிலும் கட்டப்படும் நான்கு சிலைகளில் இது 2ஆவதாகும். இந்தத் தொடரின் முதல் சிலை, 2010ஆம் ஆண்டு ஹிமாச்சலப் பிரதேசத்தின் சிம்லாவில் கட்டப்பட்டது. 3ஆவது சிலைக்கான பணி தெற்கே இராமேஸ்வரத்தில் தொடங்கியது.

**9. எந்த மாநிலம்/UT தனது முதல் கடற்கரை திருவிழாவை, 'I Sea PONDY–2022' எனக் கொண்டாடியது?**

அ. கோவா

**ஆ. புதுச்சேரி ☑**

இ. இலட்சத்தீவுகள்

ஈ. அந்தமான் & நிக்கோபார் தீவுகள்



✓ புதுச்சேரியின் முதல் கடற்கரை திருவிழாவான, 'I Sea PONDY–2022'ஐ புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தொடங்கி வைத்தார். புதுச்சேரி காந்தி கடற்கரை, பாண்டி மெரினா மற்றும் பாரடைஸ் பீச் சாண்டூன்ஸ் ஆகிய இடங்களில் நான்கு நாட்கள் இவ்விழா கொண்டாடப்படுகிறது. கடற்கரை திருவிழாவில் பல்வேறு கலாச்சார நிகழ்வுகள் மற்றும் போட்டிகள் நடத்தப்படும்.

**10. 2022 – தேசிய தீயணைப்புச் சேவை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Learn Fire Safety, Increase Productivity ☑**

ஆ. Tribute to Fire Fighters

இ. Fire Safety for Children

ஈ. AI in Fire Service



✓ தேசிய தீயணைப்புச் சேவை நாளானது 1944 ஏப்ரல்.14 அன்று மும்பை கப்பல்துறையில் நிகழ்ந்த ஒரு பெரிய வெடிப்பின்போது உயிரிழந்த 71 தீயணைப்புச் சேவை வீரர்களை நினைவுகூரும் விதமாக அனுசரிக்கப்படுகிறது. இந்திய அரசாங்கம் தேசிய தீயணைப்புச் சேவை நாளன்று வீரதீரமிகு தீயணைப்பு வீரர்களை கௌரவிக்கிறது. "Learn Fire Safety, Increase Productivity" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் தேசிய தீயணைப்புச் சேவை நாளுக்கானக் கருப்பொருளாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. GST வருவாய் ₹1.68 இலட்சம் கோடி: ஏப்ரலில் இதுவரை இல்லாத அளவில் அதிகம்**

கடந்த ஏப்ரல் மாதத்தில் சரக்கு–சேவை வரி (GST) வருவாய், இதுவரை இல்லாத அளவில் அதிகபட்சமாக ₹1.68 லட்சம் கோடி வசூலாகியுள்ளது. GST வசூல் ₹1.50 லட்சம் கோடியைக் கடந்திருப்பது இதுவே முதல் முறை. கடந்த மார்ச் மாதம் வசூலான GST தொகை ₹1,42,095–ஐ விட ஏப்ரலில் ₹25,000 கோடி அதிகமாக வசூலாகியுள்ளது.

இதுகுறித்து நிதியமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: வரிசெலுத்துவது அதிகரித்திருப்பதாலும், வர்த்தக சூழல் மீண்டு வருவதாலும் GST வருவாய் அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் 1.06 கோடி GST கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில், 97 லட்சம் கணக்குகள் மார்ச் மாதத்துக்கானவை. ஏப்ரல் மாதத்தில் வசூலான மொத்த GST ₹1,67,540 கோடியாகும். அதில், மத்திய GSTயாக ₹33,159 கோடியும், மாநில GSTயாக ₹41,793 கோடியும், ஒருங்கிணைந்த GSTயாக ₹81,939 கோடியும் (இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் மூலம் வசூலான ₹36,705 கோடி உள்பட) வசூலானது. செஸ் வரியாக ₹10,649 கோடியும் கிடைத்துள்ளது.

வரி நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக, சரியான நேரத்தில் வரிக் கணக்கு தாக்கல் செய்வதில் தெளிவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தரவுப்பகுப்பாய்வு மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட தவறு செய்யும் வரி செலுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், GST வருவாயாக ₹1.40 லட்சம் கோடி வசூலான நிலையில், 2022–ஆம் ஆண்டு ஏப்ரலில் 20 சதவீதம் அதிகரித்து, ₹1.68 கோடியாக வசூலாகியுள்ளது. ஒருங்கிணைந்த GST வரியிலிருந்து மத்திய GSTக்கு ₹33,423 கோடியும், மாநில GSTக்கு ₹26,962 கோடியும் மத்திய அரசு விடுவித்துள்ளது. ஏப்ரல் மாத GST வசூலில் இறக்குமதி பொருள்களுக்கான GST 30 சதவீதமும், உள்நாட்டுப் பொருள்களுக்கான GST 17 சதவீதமும் அதிகரித்துள்ளது.

---

**2. பத்மாவதி நகர் பிரதான சாலை இனி 'சின்னக்கலைவாணர்' விவேக் சாலை**

நடிகர் விவேக் வீடு அமைந்துள்ள சாலையின் பெயர் சின்னக்கலைவாணர் விவேக் சாலை எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

---

**3. கிழக்குக் கடற்கரை சாலை இனி 'முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி' சாலை: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு**

கிழக்குக் கடற்கரை சாலைக்கு மறைந்த முன்னாள் முதல்வர் மு கருணாநிதியின் பெயர்சூட்டப்படும் என முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

சென்னை கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடைபெற்ற நெடுஞ்சாலைத்துறையின் 75ஆவது ஆண்டு விழாவில், பவள விழா நினைவுத்தூணை திறந்து வைத்த முதல்வர் மு க ஸ்டாலின், சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இலச்சினையையும், பவள விழா மலரையும் வெளியிட்டார்.

**தரைப்பாலங்களே இல்லாத தமிழகம்:** 2026–க்குள் தரைப்பாலங்களே இல்லாத மாநிலமாகத் இந்தத் தமிழகத்தை மாற்றவுள்ளதாக முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

---

**4. இந்தியா – யுஏஇ பொருளாதார கூட்டு ஒப்பந்தம் தொடக்கம்: வர்த்தகம் ₹7.50 லட்சம் கோடியாக உயர வாய்ப்பு**

இந்தியாவிற்கும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு (யுஏஇ) இடையே ஏற்பட்ட விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தம் செயல்பாட்டுக்கு வந்தது. இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தகத்தின்மூலம், அடுத்த ஐந்தாண்டுகளில் இருதரப்பிற்கும் இடையேயான வர்த்தகம் ₹7,50,000 கோடியாக அதிகரிக்கும் என மத்திய அரசு எதிர்பார்க்கிறது.

இந்தியா–ஐக்கிய அரபு அமீரகம் நாடுகளுக்கிடையே வரலாற்றுச் சிறப்புமிக்க விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தத்தில் (சிஇபிஏ) இருதரப்பும் கடந்த பிப்ரவரி, 18–ஆம் தேதி கையொப்பமிட்டன. இந்த ஒப்பந்தம், மே–1ஆம் தேதி அதிகாரப்பூர்வமாக செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி இனி சுங்க வரி விதிக்கப்படமாட்டாது. இந்தியா – யுஏஇ நாடுகளுக்களுக்கிடையே கடந்த நிதியாண்டில் சுமார் ₹1,95,000 கோடி வர்த்தகம் நடைபெற்றது. இந்த ஒப்பந்தம்மூலம் அடுத்த ஓர் ஆண்டில் இது ₹3,00,000 கோடியாக அதிகரிக்கும் என மத்திய அரசு எதிர்பார்க்கிறது. ஐக்கிய அரபு அமீரகத்திற்கு இந்தியாவிலிருந்து அதிக அளவில் நகை, ஆபரணங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த ஒப்பந்தம்மூலம், இந்தப் பொருள்களுக்கு வரி விதிக்கப்படாது என்பதால், இந்தப் பிரிவு ஏற்றுமதியாளர்கள் பயனடைவர்.

---

**5. சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா! ஏற்றுமதியை மேம்படுத்த வாய்ப்பு**

சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா அமைக்கும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. இந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும்பட்சத்தில் ஜவுளி ஏற்றுமதியை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

---

**1. 71ஆவது சீனியர் ஆடவர் தேசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப்பில் பட்டத்தை வென்ற அணி எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. பஞ்சாப்

ஈ. கர்நாடகா



✓ 71ஆவது சீனியர் தேசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவு இறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு அணி பஞ்சாப்பை வீழ்த்தியது. மகளிர் பிரிவில் தெலுங்கானாவை வீழ்த்தி இந்திய இரயில்வே அணி சாம்பியன் பட்டம் வென்றது. ஆடவர் பிரிவில் தமிழ்நாடு 87–69 என்ற புள்ளிக்கணக்கில் நடப்புச் சாம்பியனான பஞ்சாபை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது. மகளிருக்கான அரையிறுதியில் இரயில்வே அணி தமிழ்நாட்டை எதிர்த்து அபார வெற்றியைப் பதிவு செய்தது.

**2. அண்மையில் தொடங்கப்பட்ட, 'ரைசினா பேச்சுவார்த்தை' என்பது எந்தத் துறைசார்ந்த மாநாடு ஆகும்?**

**அ. வெளியுறவுக் கொள்கை ☑**

ஆ. பருவநிலை மாற்றம்

இ. தகவல்தொடர்பு தொழில்நுட்பம்

ஈ. வேளாண்மை

✓ 'ரைசினா பேச்சுவார்த்தை' என்பது இந்தியாவின் முதன்மையான வெளியுறவுக் கொள்கை மற்றும் புவிசார்–பொருளாதார மாநாடு ஆகும். இதன் ஏழாவது பதிப்பை பிரதம விருந்தினரான ஐரோப்பிய ஒன்றிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயனுடன் இணைந்து பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இதில் 90 நாடுகளில் இருந்து 200–க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் பங்கேற்கின்றனர். இந்த மாநாடு வெளியுறவு அமைச்சகம் மற்றும் அப்சர்வர் ரிசர்ச் அறக்கட்டளை ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும். "*Terranova: Impassioned, Impatient, and Imperilled*" என்பது இந்த ஆண்டு ரைசினா பேச்சுவார்த்தைகக்கானக் கருப்பொருளாகும்.

**3. இம்மானுவேல் மக்ரோன், கீழ்காணும் எந்த நாட்டின் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார்?**

அ. UK

**ஆ. பிரான்ஸ் ☑**

இ. ஜெர்மனி

ஈ. தென்னாப்பிரிக்கா



✓ பிரான்ஸ் நாட்டு அதிபர் தேர்தலில் தீவிர வலதுசாரி வேட்பாளர் மரின் லு பென்னிற்கு எதிராக இம்மானுவேல் மக்ரோன் வெற்றிபெற்றுள்ளார். இருபது ஆண்டுகளில் மீண்டும் அதிபர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரெஞ்சு தலைவர் என்ற பெருமையை மக்ரோன் பெற்றார்.

**4. 'அகில–இந்திய குடும்ப நுகர்வோர் செலவின கணக்கெடுப்பை' நடத்துகிற நிறுவனம் எது?**

**அ. தேசிய புள்ளியியல் அலுவலகம் ☑**

ஆ. NITI ஆயோக்

இ. இந்திய ரிசர்வ் வங்கி

ஈ. NABARD

✓ அகில இந்திய குடும்ப நுகர்வோர் செலவின கணக்கெடுப்பானது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேசிய புள்ளியியல் அலுவலகத்தால் நடத்தப்படுகிறது. வறுமை நிலைகளை மதிப்பிட உதவும் இக்கணக்கெடுப்பு, நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்த ஆண்டு மீண்டும் நடத்தப்படவுள்ளது. 2011–12இலிருந்து, இந்தியாவில் தனிநபர் குடும்ப செலவினங்கள் பற்றிய அதிகாரப்பூர்வ மதிப்பீடுகள் ஏதுமில்லை; இது வறுமை நிலைகளின் மதிப்பீடுகள் மற்றும் GDP போன்ற பொருளாதார குறிகாட்டிகளை மதிப்பாய்வு செய்யும். தரவுத்தரச்சிக்கல்களுக்காக அரசாங்கம் கடந்த ஆய்வின் (2017–18) கண்டறிவுகளை இரத்து செய்தது.

**5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'அம்ருத் சரோவர் முன்னெடுப்பின்' முதன்மை நோக்கம் என்ன?**

அ. ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழியை ஒழித்தல்

**ஆ. நீர்நிலைகளுக்குப் புத்துயிரளித்தல் ☑**

இ. கடல் நீரின் உப்புநீக்கம்

ஈ. மழைநீர் சேகரிப்பு



✓ 'அம்ருத் சரோவர்' திட்டத்தின்கீழ், அமுதப்பெருவிழாவின் ஒருபகுதியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 75 நீர் நிலைகள் மேம்படுத்தப்பட்டு புத்துயிர் ஊட்டப்படும். இந்தியாவின் முதல், 'அம்ருத் சரோவர்' உத்தரபிரதேச மாநிலத்தின் இராம்பூரில் உள்ள கிராமப்பஞ்சாயத்து பட்வாய்யில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இராம்பூரில் உள்ள எழுபத்தைந்து குளங்கள் 'அம்ருத் சரோவராக' உருவாக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**6. 2022 ஏப்ரல்–மே மாதங்களில் நடைபெறும், 'கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுக்கள் – 2021' நடைபெறும் இடம் எது?**

அ. வாரணாசி

ஆ. டேராடூன்

**இ. பெங்களூரு ☑**

ஈ. புனே

✓ 'கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுக்கள் – 2021' ஆனது பெங்களூருவில் 24 ஏப்ரல் 2022 முதல் மே 3, 2022 வரை நடத்தப்படுகிறது. நாடு முழுவதும் உள்ள 190 பல்கலைக்கழகங்களிலிருந்து 4,500–க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுகளில் போட்டியிடுகின்றனர். இந்த நிகழ்வின் போது மற்கம்பம் மற்றும் யோகாசனம் போன்ற உள்நாட்டு விளையாட்டுகள் உட்பட 20 வெவ்வேறு விளையாட்டுகளில் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் பங்கேற்பார்கள்.

**7. 'முத்தரப்பு வளர்ச்சிக் கழக நிதியம்' என்பது எந்த நாட்டின் புதிய அரசியல் ரீதியான முன்னெடுப்பாகும்?**

அ. ரஷ்யா

**ஆ. இந்தியா ☑**

இ. சீனா

ஈ. அமெரிக்கா

भारत सरकार

✓ இந்தியாவின் மத்திய வெளியுறவு அமைச்சகம் சமீபத்தில் 'முத்தரப்பு வளர்ச்சிக் கழக நிதியம்' என்ற தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தோ–பசிபிக் பிராந்தியம் மற்றும் பிற பிராந்தியங்களில் முதலீடு செய்வதற்கு அரசு ஆதரவுடன் தனியார் துறைகளை இந்த நிதியம் ஈடுபடுத்தும். இது சீனாவின் பட்டை–பாதை முன்னெடுப்புக்கு மாற்றாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. UK, பட்டை–பாதை முன்னெடுப்புக்காக 5G, அணு மற்றும் அதிவேக இரயில் தொழில்நுட்பங்களை வழங்குகிறது.

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற குரில் தீவுகளுக்கு உரிமைகோரும் நாடுகள் எவை?**




அ. சீனா மற்றும் ரஷ்யா

**ஆ. ஜப்பான் மற்றும் ரஷ்யா ☑**

இ. உக்ரைன் மற்றும் ரஷ்யா

ஈ. இங்கிலாந்து மற்றும் ரஷ்யா

- ✓ கடந்த 1945–இல் சோவியத் யூனியன் குரில் தீவுகளைக் கைப்பற்றியதிலிருந்து, அதனை தற்போது ஜப்பான் உரிமைகோரி சவால் செய்துள்ளது. ஜப்பானிய வெளியுறவு அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 2022 டிப்ளமேட்டிக் புளுபுக்கின் அண்மைய பதிப்பில், வடபகுதிகள், "ஜப்பானின் இறையாண்மையைக்கொண்ட தீவுகள், ஆனால் தற்போது ரஷ்யாவால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன" எனக் கூறப்பட்டுள்ளது.

**9. 2021ஆம் ஆண்டில் உலகளாவிய இராணுவ செலவினங்கள் குறித்த SIPRI தரவுகளில் இந்தியாவின் தரநிலை என்ன?**



அ. இரண்டாவது

**ஆ. மூன்றாவது ☑**

இ. ஐந்தாவது

ஈ. ஆறாவது

- ✓ ஸ்டாக்ஹோம் பன்னாட்டு அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIRPI) வெளியிட்ட உலகளாவிய இராணுவச் செலவு குறித்த புதிய தரவுகளின்படி, 2021ஆம் ஆண்டில் மொத்த உலகளாவிய இராணுவச்செலவு 0.7% அதிகரித்து 2113 பில்லியன் டாலர்களை எட்டியது. இது தொடர்ந்து ஏழாவது ஆண்டாக அதிகரித்துள்ளது. மேலும் $2.1 டிரில்லியன் டாலர்களை கடந்தது இதுவே முதன்முறையாகும். 2021இல் முதல் ஐந்து இடங்களில் முறையே அமெரிக்கா, சீனா, இந்தியா, இங்கிலாந்து மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் உள்ளன. இவை முறையே 62 சதவீத செலவினங்களைக் கொண்டுள்ளன.

**10. ஆசியாவின் மிகப்பெரிய பன்னாட்டு உணவு மற்றும் விருந்தோம்பல் கண்காட்சியான, 'AAHAR – 2022' நடைபெறும் இடம் எது?**

அ. நைனிடால்

**ஆ. புது தில்லி ☑**

இ. காந்தி நகர்

ஈ. மும்பை

- ✓ வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்புடன் (ITPO) இணைந்து ஆசியாவின் மிகப்பெரிய பன்னாட்டு உணவு மற்றும் விருந்தோம்பல் கண்காட்சியான, 'AAHAR–2022'ஐ ஏற்பாடு செய்கிறது. இந்தக் கண்காட்சி புதுதில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, பல்வேறு பிரிவுகளில் இருந்து 80–க்கும் மேற்பட்ட ஏற்றுமதியாளர்கள் இக்கண்காட்சியில் பங்கேற்பார்கள். வடகிழக்கு பிராந்தியம் மற்றும் இமாலய மாநிலங்களைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், பெண் தொழில்முனைவோர், FPO–க்கள், துளிர் நிறுவல்கள் மற்றும் துறைசார் ஏற்றுமதியாளர்களுக்காக APEDA அரங்கங்களை உருவாக்கியுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய கயிறு வாரிய மாநாடு கோவையில் தொடக்கம்: மத்திய அமைச்சர்கள் பங்கேற்பு**

கயிறு தொழிற்சாலை சட்டம் 1953இன்படி மத்திய கயிறு வாரியம் அமைக்கப்பட்டது. நாட்டில் உள்ள கயிறு உற்பத்தி மற்றும் மேம்பாட்டுக்கான இவ்வாரியம், தென்னை உபபொருட்களின் மேம்பாட்டுக்கான அறிவியல், தொழில்நுட்பம், நவீனமயமக்கால், தரமேம்பாடு, மனித வள மேம்பாடு, சந்தை மேம்பாடு மற்றும் தொழிலாளர் நலத்திற்கான அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது. கொச்சியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்த வாரியத்தின்கீழ் நாடு முழுவதும் 48 அமைப்புகள், 29 சந்தை விற்பனையகங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த 60 ஆண்டுகளாக நாட்டின் கிராமப்புற பொருளாதரத்தில் மிக முக்கியப் பங்கு வகித்து வருகிறது. தென்னை நார் தொழிற்சாலைகள் கேரளாவில் அதிக அளவில் உள்ளன. நாட்டின் பிற பாகங்களில் பரவலாக உள்ளன.

இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம், மத்திய, மாநில, யூனியன் பிரதேசங்களுடன் இணைந்து சிறப்பான தென்னை நார், கயிறு மேம்பாட்டுக்கான திட்டங்களை கலந்து ஆலோசனை செய்வதாகும். இந்தத் தொழில் உள்ள சவால்கள், வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்படும். மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்படவும், சிறந்த முறையில் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மாநில அரசுகள் முக்கிய பங்காற்றிடவும் வழி வகுக்கப்படும். மேலும் புதுமையான படைப்புகள் குறித்து மத்திய அமைச்சர்கள், அதிகாரிகளிடம் விளக்க ஒரு தளமாக இது அமையும்.

---

**2. அரசுப்பள்ளிகளில் கலைத்திருவிழா, கல்விச்சுற்றுலா, காய்கறித்தோட்டம்: புதிய முன்னெடுப்புகள் வரும் கல்வியாண்டில் அறிமுகம்**

அரசுப்பள்ளிகளில் கலைத்திருவிழா, மாணவர்களுக்கான தேன்சிட்டு இதழ், ஹேக்கத்தான், நன்னெறி வகுப்புகள் ஆகிவை உள்பட 10க்கும் மேற்பட்ட புதிய முன்னெடுப்புகள் வரும் கல்வியாண்டில் மேற்கொள்ளப்படும் எனப்பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

**இயந்திரனியல் மன்றம்:** மாணவர்களுக்கு தொழில்நுட்பத்திலும் கணினியிலும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் கணினி நிரல் மன்றங்களும் இயந்திரனியல் மன்றங்களும் ஏற்படுத்தப்படும். மேலும் இணையப் பாதுகாப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு மாநில அளவிலான 'ஹேக்கத்தான்' போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

மாணவர்களுக்கு சதுரங்க விளையாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக மாநில அளவில் சதுரங்கப்போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்கள் சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாட ஏற்பாடுகள் செய்யப்படும். அறிவியல் தொழில்நுட்பம் பொறியியல் மற்றும் கணிதம் சார்ந்த புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

**தேன்சிட்டு–ஊஞ்சல் இதழ்கள்:** மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு, 'ஊஞ்சல்' என்கிற இதழும், 6–9ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு, 'தேன்சிட்டு' என்கிற இதழும் வெளிவரவுள்ளன. மேலும், ஆசிரியர்களுக்கென நாட்டிலேயே முதல்முறையாக, 'கனவு ஆசிரியர்' என்ற இதழும் வெளிவரவிருக்கிறது. மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கள் படைப்புத்திறனை வெளிப்படுத்தும் வகையில் இந்த இதழ்களுக்கு தங்கள் ஆக்கங்களை அனுப்பலாம்.

---

**3. ஜூனியர் பளுதூக்குதல்: ஹர்ஷதா சாம்பியன்**

கிரீஸில் நடைபெறும் ஜூனியர் உலக பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் ஹர்ஷதா சரத் தங்கப்பதக்கம் வென்றார். இதன் மூலம் இப்போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். இதே பிரிவில் பங்கேற்ற மற்றொரு இந்தியரான அஞ்சலி படேல் 148 கிலோ (67+81) எடையைத் தூக்கி 5–ஆம் இடம் பிடித்தார். இதற்குமுன் இப்போட்டியில் சாய்கோம் மிராபாய் சானு வெண்கலமும் (2013), அசிந்தா ஷியுலி வெள்ளியும் (2021) வென்றுள்ளது நினைவுகூரத்தக்கது.

---

**4. கீழடி அகழாய்வில் மனித முகம் போன்ற அமைப்புடைய சுடுமண் சிற்பம் கண்டெடுப்பு**

சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்று வரும் எட்டாம் கட்ட அகழாய்வில், மனித முகம் போன்ற அமைப்பு கொண்ட சுடுமண் சிற்பம் அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. திருப்புவனம் அருகே கீழடியில் எட்டாம் கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இதன் அருகே உள்ள கொந்தகை, மணலூர், அகரம் ஆகிய இடங்களிலும் அகழாய்வு விரிவுபடுத்தப்பட்டு இங்கும் அகழாய்வுப் பணிகள் நடந்து வருகிறது.

கீழடி அகழாய்வில் வண்ண பாசி மணிகள், பானை ஓடுகள், கொந்தகையில் முதுமக்கள் தாழிகள் உள்ளிட்ட பல தொன்மையான பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அண்மையில் கீழடியில் எட்டாம் கட்ட அகழாய்வுக்காக தோண்டப்பட்ட குழியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பண்டைய கால தமிழர்கள் பயன்படுத்திய மனித முகம் போன்ற உருவம் கொண்ட சுடுமண் சிற்பம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**1. "புதுமையான வேளாண்மை" என்ற தேசிய அளவிலான பயிலரங்கை ஏற்பாடு செய்த நிறுவனம் எது?**



அ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

**ஆ. NITI ஆயோக் ☑**

இ. NABARD

ஈ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்

✓ NITI ஆயோக், அமுதப்பெருவிழா கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக, புது தில்லி அறிவியல் பவனில், "புதுமையான வேளாண்மை" என்ற தேசிய அளவிலான பயிலரங்கை ஏற்பாடு செய்தது. NITI ஆயோக் தலைமைச் செயல் அதிகாரி அமிதாப் காந்த் கூறுகையில், "இயற்கை விவசாயம் காலத்தின் தேவை மற்றும் இயற்கை விவசாயத்தின்மூலம் விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை உறுதிசெய்வதற்கான அறிவியல் வழிகளைக் கண்டறிவது முக்கியம்" என்றார். மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் புருஷோத்தம் ரூபாலா விவசாயம் & விவசாயிகள் நலன் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் மற்றும் NITI ஆயோகின் துணைத்தலைவர் டாக்டர் இராஜீவ் குமார் ஆகியோர் இப்பயிலரங்கில் கலந்துகொண்டனர்.

**2. புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பரிமாற்றஞ்செய்துகொள்வதற்காக, எந்த நாட்டுடன், '*Transmission Interconnection*'ஐ அமைப்பதாக இந்தியா அறிவித்துள்ளது?**



அ. இலங்கை

ஆ. நேபாளம்

**இ. மாலத்தீவுகள் ☑**

ஈ. வங்காளதேசம்

✓ மாலத்தீவின் ஆற்றல் மாற்றத் திட்டத்தை எளிதாக்கும் வகையில், இரு நாடுகளுக்கு இடையே புதுப்பிக்கத்தக்க ஆற்றலை பரிமாறிக்கொள்வதற்கான 'பரிமாற்ற இடைத்தொடர்பை' அமைக்க இந்தியாவும் மாலத்தீவுகளும் திட்டமிட்டுள்ளன. எரிசக்தி மற்றும் புது மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ஆர் கே சிங் மற்றும் மாலத்தீவு அமைச்சர் ஆகியோருக்கு இடையேயான சந்திப்பின்போது "ஒரு சூரியன், ஓர் உலகு, ஒரே மின்கட்டமைப்பின் (OSOWOG)" கீழ், ஆற்றல் ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றம் இடைத்தொடர்பு ஆகியவற்றை கொண்டுவரும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அவர்கள் முன்மொழிந்தனர்.

**3. ஏழு கயிற்றுப்பாதை திட்டங்களை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் அண்மையில் கையெழுத்திட்ட இந்திய மாநிலம் எது?**



அ. மகாராஷ்டிரா

**ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ. குஜராத்

ஈ. அஸ்ஸாம்

✓ ஹிமாச்சல பிரதேச அரசு மாநிலத்தின் காங்க்ரா, குலு, சம்பா, சிர்மூர் மற்றும் பிலாஸ்பூர் மாவட்டங்களில் ஏழு கயிற்றுப் பாதை திட்டங்களை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் புதுமையான போக்குவரத்து தீர்வாக கயிற்றுப் பாதை திட்டங்களை மேம்படுத்துவதற்காக ரோப்வேஸ் மற்றும் ரேபிட் டிரான்ஸ்போர்ட் சிஸ்டம் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் (ஆர்டிடிசி) ஹெச்பி லிமிடெட் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் லாஜிஸ்டிக் மேனேஜ்மென்ட் லிமிடெட் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**4. 'மருந்து மற்றும் மருத்துவ சாதனங்கள் துறையின் 2022-க்கான சர்வதேச மாநாடு' நடைபெறும் இடம் எது?**

அ. வாரணாசி

**ஆ. புது தில்லி ☑**

இ. காந்தி நகர்

ஈ. புனே




- ✓ வேதி & உரங்கள் மற்றும் சுகாதாரம் & குடும்ப நலத்துறைக்கான மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, 2022ஆம் ஆண்டுக்கான மருந்து & மருத்துவ சாதனங்கள் துறைக்கான சர்வதேச மாநாட்டின் 7ஆவது பதிப்பை தொடக்கி வைத்தார். இம்மாநாடு புது தில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் நடைபெறுகிறது. பிரதமர் மோடியின் அயராத முயற்சிகள் மற்றும் தலைமையின் காரணமாக இந்திய சுகாதாரத்துறை அனைவரும் அணுகக்கூடியதாக மாறிவருகிறது என டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறினார். மருந்து உற்பத்தியைப் பொறுத்தவரை உலகில் ஐந்தாவது இடத்தில் இந்தியா உள்ளது.

**5. 2021-22 நிதியாண்டில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த ஆக்கப்பெற்ற எஃகின் அளவு என்ன?**

அ. ரூ.10 மில்லியன் டன்

**ஆ. ரூ.13.5 மில்லியன் டன் ☑**

இ. ரூ.15 மில்லியன் டன்

ஈ. ரூ.20.5 மில்லியன் டன்



- ✓ இந்தியா ₹1 டிரில்லியன் மதிப்புடைய 13.5 மில்லியன் டன்கள் ஆக்கப்பெற்ற எஃகு மற்றும் ₹46000 கோடி மதிப்புடைய எஃகை இறக்குமதியும் செய்துள்ளதாக மத்திய எஃகு அமைச்சகம் சமீபத்தில் அறிவித்தது. மேலும், 106 மில்லியன் டன்கள் எஃகை இந்தியாவும் பயன்படுத்தியுள்ளது. நம் நாட்டில் சிறப்பு எஃகு தயாரிக்க இந்திய அரசு உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

**6. "எண்டர்பிரைஸ் இந்தியா" என்ற நினைவுகூர் நிகழ்வைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

**ஆ. MSME அமைச்சகம் ☑**

இ. வெளியுறவு அமைச்சகம்

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்




- ✓ அமுதப்பெருவிழாவின்கீழ், MSME அமைச்சகத்தின் மிகப்பெரும் நிகழ்வான, "எண்டர்பிரைஸ் இந்தியா" நிகழ்ச்சியை மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சர் ஸ்ரீ நாராயண் ரானே தொடங்கி வைத்தார். இது தொழில்முனைவோர் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கும் நாடு முழுவதும் MSME அமைச்சகத்தின் திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படும் ஒரு நிகழ்வு ஆகும்.

**7. 'டிஜிட்டல் இந்தியா RISC-V நுண்செயலி (DIR-V) திட்டமானது' எவ்வாண்டுக்குள் நுண்செயலிகளை உருவாக்கி சிலிக்கான் மற்றும் வடிவமைப்பில் வெற்றிகாண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது?**

**அ. 2023 ☑**

ஆ. 2025

இ. 2026

ஈ. 2030



✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், 'டிஜிட்டல் இந்தியா RISC–V நுண்செயலி (DIR–V)' திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது நுண்செயலிகளை உருவாக்குவதையும், தொழிற்முறை தரத்தில் சிலிக்கான் மற்றும் வடிவமைப்பில் வெற்றிகாண்பதை 2023 டிசம்பருக்குள் அடைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஷக்தி & வேகாவின் வணிக சிலிக்கானுக்கான மைல்கற்களை அமைக்கிறது.

### 8. 'PM SVANIdhi' திட்டத்தின் பயனாளிகள் யார்?



அ. SHG உறுப்பினர்கள்

**ஆ. வீதியோர வியாபாரிகள் ☑**

இ. பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகள்

ஈ. வளரிளம்பருவத்தினர்

✓ பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, 'PM SVANIdhi' என்ற திட்டத்தை 2024 டிசம்பர் வரை தொடர்வதற்கு ஒப்புதலளித்துள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம், வீதியோர வியாபாரிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய அடமானம் இல்லாத கடன்கள் வழங்கப்படுகின்றன. 5,000 கோடிக்கு கடன் வழங்குவதை நோக்கமாகக்கொண்ட இந்தத்திட்டம், சமீபத்திய ஒப்புதலை அடுத்து அதன் கடன்தொகை ₹8,100 கோடியாக அதிகரித்துள்ளது.

### 9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற குவார் நீர் மின் திட்டம் அமைந்துள்ள மாநிலம் / UT எது?



அ. அருணாச்சல பிரதேசம்

**ஆ. ஜம்மு மற்றும் காஷ்மீர் ☑**

இ. சிக்கிம்

ஈ. குஜராத்

✓ 540 MW உற்பத்தித் திறன்கொண்ட குவார் நீர்மின் திட்டத்திற்கு ₹4,526.12 கோடி முதலீடு செய்ய பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதலளித்துள்ளது. இது ஜம்மு & காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் செனாப் ஆற்றின்மீது அமைந்துள்ளது. குவார் நீர்மின் திட்டம், NHPC லிமிடெட் மற்றும் ஜம்மு & காஷ்மீர் மாநில பவர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான செனாப் வேலி பவர் புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிட் (CVPPL) மூலம் செயல்படுத்தப்படும்.

### 10. 2022 – உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மாநாடு நடைபெற்ற இடம் எது?



அ. சென்னை

ஆ. கொல்கத்தா

**இ. புது தில்லி ☑**

ஈ. மும்பை

✓ புது தில்லியில் உள்ள உச்சநீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்தியாவின் பல்வேறு உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் பங்கேற்ற 39ஆவது மாநாட்டுக்கு, இந்திய தலைமை நீதிபதி என் வி ரமணா தலைமை தாங்கினார். முதலாவது தலைமை நீதிபதிகள் மாநாடு 1953இல் நவம்பரில் நடைபெற்றது. இதுவரை 38 மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. கடந்த 2016ஆம் ஆண்டு இம்மாநாடு நடைபெற்றது. நீதித்துறை தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வுகாணவும், நீதி வழங்கல் முறையை மேம்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கவும் இம்மாநாடு நடத்தப்படுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வங்கிகளுக்கான வட்டி விகிதம் உயர்வு**

வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதத்தை (ரெப்போ) 4.40 சதவீதமாக ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது. இதனால், தனிநபர்கடன், வீடு, வாகனக்கடன் ஆகியவற்றுக்கான வட்டி அதிகரிக்கவுள்ளது. 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்குப் பிறகு முதன்முறையாக ரெப்போ விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கைக்குழு 2 மாதங்களுக்கு ஒருமுறை கூடி, வட்டி விகித மாற்றம் குறித்த அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. கடந்த ஏப்ரலில் நடந்த கூட்டத்தில் ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை என்று அந்தக் குழு அறிவித்தது.

இந்நிலையில், அந்தக் குழுவின் கூட்டம், ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையில் நடைபெற்றது. முன் திட்டமிடலின்றி நடைபெற்ற இக்கூட்டத்தில், கடந்த 3 மாதங்களாக அதிகரித்துள்ள பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரெப்போ வட்டி விகிதத்தை 4 சதவீதத்தில் இருந்து 40 அடிப்படை புள்ளிகள் உயர்த்தி, 4.40 சதவீதமாக உயர்த்த முடிவுசெய்யப்பட்டது. இந்த வட்டி உயர்வு உடனடியாக அமலுக்கு வருகிறது.

இதுதவிர, ரிசர்வ் வங்கியில் பிற வங்கிகள் இருப்பு வைக்க வேண்டிய விகிதம் (CRR) 4 சதவீதத்தில் இருந்து 4.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், வங்கிகளிடம் இருக்கும் ₹87,000 கோடி ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டுக்குள் வரும். இந்த நடைமுறை, வரும் மே மாதம் 21–ஆம் தேதியில் இருந்து அமலுக்கு வருகிறது.

---

**2. மாநகரப் பேருந்துகள் வருகையை அறிய செயலி: அறிமுகம் செய்தார் அமைச்சர்**

மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயங்கும் இடத்தை பொதுமக்கள் அறிந்திட ஏதுவாக உருவாக்கப்பட்ட 'சென்னை பஸ்' செயலியை சென்னை, தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் அறிமுகம் செய்தார்.

---

**3. வேதாரண்யத்தில் ஔவையாருக்கு ₹1 கோடியில் மணிமண்டபம்**

வேதாரண்யத்தில் ஔவையாருக்கு ₹1 கோடியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி கே சேகர்பாபு அறிவித்தார். தமிழக சட்டப் பேரவையில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் பி கே சேகர்பாபு அறிவிப்புகளை வெளியிட்டு பேசியதாவது:

**ஔவையாருக்கு மணிமண்டபம்:** நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் துளசியாப்பட்டினம் கிராமத்தில் உள்ள ஔவையார் விஸ்வநாத சுவாமி கோயிலில், தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு ₹1 கோடியில் மணிமண்டபம் அமைத்து, அவரது பாடல்கள் கல்வெட்டாகப் பதிக்கப்படும். தற்போது ஔவையாருக்கு பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தன்று 2 நாள்கள் அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது. இனி ஆண்டுதோறும் இந்த விழா மூன்று நாள்களுக்கு வெகு சிறப்பாக நடத்தப்படும்.

**வள்ளலாருக்கு முப்பெரும் விழா:** உயிர்த்திரள் ஒன்றெனக் கூறி தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளலார் தருமசாலை தொடங்கிய 156–ஆவது ஆண்டு தொடக்கமும், வள்ளலார் இந்த உலகுக்கு வருவிக்க உற்ற 200ஆவது ஆண்டு தொடக்கமும், ஜோதி தரிசனம் காட்டுவித்த 152ஆவது ஆண்டும் வரவிருப்பதால் இந்த மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200–ஆவது ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா எடுக்கப்படும். இதற்காக சிறப்புக் குழு அமைக்கப்படும் என்றார்.

---

### 4. பத்திரிகை சுதந்திரம்: 150–ஆவது இடத்தில் இந்தியா

பத்திரிகை சுதந்திரத்துக்கான் சர்வதேச தரவரிசைப் பட்டியலில் இந்தியா 150–ஆவது இடத்துக்கு இறங்கியுள்ளது. இதுகுறித்து இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ள, 'எல்லைகளற்ற செய்தியாளர்கள்' அமைப்பு தெரிவித்துள்ளதாவது: 2022–ஆம் ஆண்டுக்கான பத்திரிகை சுதந்திர தரவரிசைப் பட்டியலில் இந்தியா 150–ஆவது இடத்தை வகிக்கிறது. கடந்த ஆண்டு இந்தப் பட்டியலில் இந்தியா 142–ஆவது இடத்தை வகித்தது.

இந்தியா மட்டுமன்றி, நேபாளத்தைத் தவிர அதன் அனைத்து அண்டை நாடுகளும் பத்திரிகை சுதந்திரத்துக்கான தரவரிசையில் சரிவு கண்டுள்ளன. அந்தப் பட்டியலில் பாகிஸ்தான் 157–ஆவது இடத்திலும் இலங்கை 146–ஆவது இடத்திலும் உள்ளன. வங்கதேசம் மற்றும் மியான்மர் முறையே 162 மற்றும் 176–ஆவது இடங்களில் உள்ளன. பத்திரிகை சுதந்திரத்துக்கான தரவரிசையில் இந்த ஆண்டு முதலிடத்தில் நார்வேயும் இரண்டாவது இடத்தில் டென்மார்க்கும் உள்ளன. ஸ்வீடன், எஸ்டோனியா, பின்லாந்து ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. மொத்தம் 180 நாடுகள் இடம்பெற்றுள்ள இந்தத் தரவரிசைப் பட்டியலில் வட கொரியா கடைசி இடத்தில் உள்ளது.

கடந்த ஆண்டு இந்தப் பட்டியலில் 150–ஆவது இடத்தை வகித்த ரஷியா, இந்த ஆண்டு 155–ஆவது இடத்துக்குக் கீழிறங்கியுள்ளது; சீனா 175–ஆவது இடத்திலிருந்து 177–ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது.

**1. எந்த வங்கியின் சேவைகளை விரிவுபடுத்துவதற்காக ₹820 கோடி கூடுதல் நிதியுதவி அளிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. இந்திய அஞ்சல் கொடுப்பனவு வங்கி ☑

ஆ. யூனிட்டி சிறு நிதி வங்கி

இ. NSDL கொடுப்பனவு வங்கி

ஈ. AU சிறு நிதி வங்கி

✓ நாட்டிலுள்ள அனைத்து அஞ்சல் நிலையங்களுக்கும் அதன் சேவைகளை விரிவுபடுத்துவதற்காக இந்திய அஞ்சல் கொடுப்பனவு வங்கிக்கு (IPPB) ₹820 கோடி கூடுதல் நிதியுதவி அளிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 1.56 இலட்சம் அஞ்சல் நிலையங்களுள், IPPB தற்போது 1.3 இலட்சம் அஞ்சல் நிலையங்களில் இருந்து செயல்படுகிறது. தொடங்கப்பட்டதிலிருந்து தற்போது வரை 5.25 கோடி கணக்குகள் இவ்வங்கி கொண்டுள்ளது. ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக ₹500 கோடி மதிப்பிலான எதிர்கால நிதியை வழங்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**2. தரையிறங்கும்போது, 'GAGAN' செயற்கைக்கோள் அடிப்படையிலான வழிசெலுத்தல் அமைப்பைப் பயன்படுத்திய ஆசியாவின் முதல் வானூர்தி நிறுவனம் எது?**

அ. ஏர் இந்தியா

**ஆ. இண்டிகோ ☑**

இ. ஏர் ஆசியா

ஈ. ஸ்பைஸ்ஜெட்

✓ தரையிறங்கும்போது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட செயற்கைக்கோள் அடிப்படையிலான வழிசெலுத்தல் அமைப்பான, 'GAGAN'ஐப் பயன்படுத்திய ஆசியாவின் முதல் விமான நிறுவனமாக 'IndiGo' ஆனது. இந்த அமைப்பை இந்திய வானூர்தி நிலைய ஆணையமும் (AAI) இந்திய விண்வெளி ஆய்வுமையமும் இணைந்து இதனை உருவாக்கியுள்ளன. இது விமானப் போக்குவரத்து நிர்வாகத்தை மேம்படுத்த உலகளாவிய நிலையறியும் அமைப்பு (GPS) சமிக்ஞைகளில் திருத்தங்களை வழங்குகிறது.

**3. 'காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வறிக்கையை' வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ. NITI ஆயோக்

**ஆ. பணியாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

இ. NASSCOM

ஈ. FICCI

✓ மத்திய பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் மூன்றாவது காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு (QES) அறிக்கையின்படி, 2021 அக்டோபர்–டிசம்பரில், தேர்ந்தெடுக்கப்பட்ட 9 துறைகளில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக்கொண்ட நிறுவனங்களில் 4 இலட்சத்திற்கும் அதிகமான வேலைகள் உருவாக்கப்பட்டன.

✓ அமைச்சகத்தின் இந்த ஆய்வு, 2013–14–க்கு முன் நிறுவப்பட்ட 10,834 அலகுகளை உள்ளடக்கியதாகும். மூன்றாம் சுற்றில், 2021 ஜூலை–செப்டம்பரில் 3.10 கோடியாக இருந்த வேலைவாய்ப்பு அடுத்த காலாண்டில் 3.145 கோடியாக அதிகரித்துள்ளது.

**4. முதன்முதலாக மரபணு வங்கித் திட்டத்தை நிறுவிய இந்திய மாநிலம் எது?**



அ. கேரளா

ஆ. தெலுங்கானா

**இ. மகாராஷ்டிரா ☑**

ஈ. மேற்கு வங்கம்

✓ பூர்வீக மற்றும் அழிந்துவரும் விலங்குகள், பயிர்கள் மற்றும் கடல்சார் உயிரினங்களை பாதுகாக்க, 'மரபணு வங்கித் திட்டத்தை' அமைப்பதாக மகாராஷ்டிரா அறிவித்துள்ளது. இது மகாராஷ்டிர மாநில பல்லுயிர் வாரியத்தால் (MSBB) செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்திற்காக அடுத்த 5 ஆண்டுகளுக்கு ₹172.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ கடல்சார், பயிர், கால்நடை மருத்துவம், நன்னீர், புல்வெளி பல்லுயிர், வன உரிமைப் பகுதிகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மற்றும் காடுகளின் மீட்டுருவாக்கம் ஆகிய ஏழு கருப்பொருள்களின்கீழ் இந்தத் திட்டம் செயல்படும். பருவநிலை மாற்றத்தால் உணவுச் சங்கிலியில் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதில் இந்தத் திட்டம் கவனஞ்செலுத்தும்.

**5. MSME–களுக்காக, 'Open for All' என்ற டிஜிட்டல் சூழலமைப்பை அறிமுகப்படுத்திய இந்திய வங்கி எது?**

அ. பாரத ஸ்டேட் வங்கி

**ஆ. ஐசிஐசிஐ வங்கி ☑**

இ. HDFC வங்கி

ஈ. கனரா வங்கி

✓ ஐசிஐசிஐ வங்கியானது MSME–களுக்காக, 'Open for All' என்ற டிஜிட்டல் சூழலமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSMEs) இந்த டிஜிட்டல் சேவையை மற்ற வங்கிகளின் வாடிக்கையாளர்களும் பயன்படுத்தலாம். இது வழங்கும் புதிய சேவைகளுள் ஒன்றான, 'InstaOD Plus'மூலம் ₹25 இலட்சம் வரை உடனடி மற்றும் காகிதமில்லா மிகைப்பற்று வசதியை அனுமதிப்பதாகும். எந்தவொரு வங்கியின் வாடிக்கையாளர்களும் உடனடியாக மிகைப்பற்றைப்பெற இந்த அம்சம் உதவுகிறது.

**6. தேசிய பாடத்திட்ட கட்டமைப்பிற்காக, 'கட்டாய ஆவணத்தை' அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

அ. பல்கலைக்கழக மானியக் குழு

ஆ. AICTE

**இ. மத்திய கல்வி அமைச்சகம் ☑**


ஈ. தேசியத் தேர்வு முகமை

शिक्षा मंत्रालय
MINISTRY OF
EDUCATION
सत्यमेव जयते

✓ தேசிய பாடத்திட்ட கட்டமைப்புக்கான 'கட்டாய ஆவணத்திட்டத்தை' மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடக்கிவைத்தார். தேசிய கல்விக்கொள்கை – 2020, தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு வளர்ச்சிக்காக பள்ளிக்கல்வி, முன்கூட்டிய குழந்தைப் பருவ கவனிப்பு மற்றும் கல்வி, ஆசிரியர் கல்வி மற்றும் வயதுவந்தோர் கல்வி ஆகிய நான்கு பிரிவுகளை பரிந்துரைத்துள்ளது.

✓ தேசிய பாடத்திட்ட கட்டமைப்பின் வளர்ச்சியானது Dr K கஸ்தூரிரங்கன் தலைமையிலான தேசிய வழிகாட்டுதல் குழுவால் வழிநடத்தப்படுகிறது; மேலும், NCERT உடன் இணைந்து ஆணைக்குழுவால் இது ஆதரிக்கப்படுகிறது.

**7. '2022 – செமிகான் இந்தியா மாநாடு' நடைபெறும் இடம் எது?**



அ. மும்பை ஆ. புது தில்லி

**இ. பெங்களூரு ☑** ஈ. சென்னை

✓ பிரதமர் மோடி பெங்களூருவில், 'செமிகான் இந்தியா மாநாடு–2022'ஐ தொடங்கிவைத்தார். குறைகடத்திகளின் நுகர்வு 2030ஆம் ஆண்டளவில் 110 பில்லியன் டாலர்களைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்தியா உலகின் மிகவேகமாக வளர்ந்துவரும் துளிர் நிறுவனச்சூழலமைப்பைக் கொண்டுள்ளது. இந்திய அரசு அண்மையில் 14 முக்கிய துறைகளில் $26 பில்லியன் டாலர்களுக்கு மேல் சலுகைகளை வழங்கும், 'உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை'த் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

**8. குப்பையில்லா நகரங்களுக்கான தேசிய நடத்தை மாற்ற தகவல் தொடர்பு கட்டமைப்பானது கீழ்காணும் எந்தத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டது?**

அ. தூய்மை இந்தியா இயக்கம் – கிராமப்புறம் 2.0

**ஆ. தூய்மை இந்தியா இயக்கம் – நகர்ப்புறம் 2.0 ☑**

இ. அம்ருத் 2.0

ஈ. HRIDAY 2.0




✓ தூய்மை இந்தியா இயக்கம் – நகர்ப்புறம் 2.0, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின்கீழ், 'குப்பையில்லா நகரங்களுக்கான தேசிய நடத்தை மாற்ற தகவல்தொடர்பு கட்டமைப்பை' அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ தனிநபர்களுக்கிடையேயான தகவல்தொடர்பு பிரச்சாரங்களுடன் பெரிய அளவிலான பல்லூடக பிரச்சாரங்களை மேற்கொள்ள மாநிலங்கள் மற்றும் நகரங்களுக்கு வழிகாட்டு ஆவணமாகவும் செயல்திட்டமாகவும் செயல்படுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. SBM–நகர்ப்புறம் 2.0 ஆனது வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது.

**9. உலகம் முழுவதும், 'உலக இரத்தம் உறையா நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஏப்ரல் 15

**ஆ. ஏப்ரல் 17 ☑**

இ. ஏப்ரல் 19

ஈ. ஏப்ரல் 25




✓ உலக இரத்தம் உறையா நாள், ஆண்டுதோறும் ஏப்ரல்.17 அன்று கொண்டாடப்படுகிறது. இந்த நாள் இரத்தம் உறையா தன்மை மற்றும் பிற பரம்பரை இரத்தக்கசிவு கோளாறுகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இரத்தம் உறையா தன்மை என்பது பரம்பரைக்கோளாறு ஆகும். இதில் இரத்தம் உறையும் திறன் கணிசமாகக் குறைந்து காணப்படும்; இதன் காரணமாக சிறிய காயங்கள் ஏற்பட்டாலும் அதிக இரத்தப்போக்கு ஏற்படுகிறது. உலக இரத்தம் உறையா கூட்டமைப்பு, 1989ஆம் ஆண்டு முதல் அதன் நிறுவனர் பிராங்க் ஷ்னாபெல் அவர்களின் பிறந்தநாளைக்கொண்டாடும் வகையில் உலக ரத்தமுறையா நாளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது.

**10. 2022 – 'உலக பாரம்பரிய நாளுக்கானக்' கருப்பொருள் என்ன?**

**அ. Heritage and Climate ☑**

ஆ. Rural Landscapes

இ. Heritage for Generations

ஈ. Complex Pasts: Diverse Futures



✓ உலக பாரம்பரிய நாளானது ஆண்டுதோறும் ஏப்ரல்.18 அன்று விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்குமான வழிகளை மேற்கொள்ளவுமாகக் கொண்டாடப்படுகிறது. இது நினைவுச் சின்னங்கள் மற்றும் தலங்களுக்கான பன்னாட்டு நாள் என்றும் அழைக்கப்படுகிறது. "மரபு மற்றும் காலநிலை – Heritage and Climate" என்பது நடப்பு 2022இல் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

- ✓ இந்தியாவில், UENSCOஆல் அங்கீகரிக்கப்பட்ட 40 உலக பாரம்பரிய களங்கள் உள்ளன. அண்மையில் அவற்றுள் இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூர் நகரமும் குஜராத் மாநிலத்தில் உள்ள ஹரப்பா தளமான தோலாவிராவும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆட்கடத்தலை தடுக்கும் விதமாக தன்னார்வ அமைப்புடன் இரயில்வே பாதுகாப்புப் படை புரிந்துணர்வு ஒப்பந்தம்**

ஆட்கடத்தலைத் தடுக்கும் விதமாக ரயில்வே பாதுகாப்புப் படை தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. ஆட்கடத்தலைத் தடுக்கும் வகையில் இருநிறுவனங்களிடையே தகவல் பரிமாற்றம், RPF வீரர்கள் மற்றும் இரயில்வே பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், விழிப்புணர்வு மற்றும் குற்றத்தடுப்பு செயல்களில் ஒத்துழைப்பு ஆகியவற்றை இந்த ஒப்பந்தம் முன்னெடுத்து செல்லும். குழந்தைகள் மீட்பு இயக்கம் எனப் பொருள்படும் 'பச்பன் பச்சாவோ அந்தோலன்', கைலாஷ் சத்யார்த்தி குழந்தைகளுக்கான அறக்கட்டளையுடன் இணைந்து கடந்த 1979ஆம் ஆண்டு முதல் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இரயில்வே பாதுகாப்பு படை, ரயில்வே சொத்துக்கள், பயணிகள் பகுதிகள் மற்றும் பயணிகளையும் பாதுகாக்கும் பணியை ஏற்றுள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டு இரயில்வே அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட குழந்தைகள் மீட்பு வழிகாட்டு நெறிமுறைகள்படி உருவான, 'சிறிய தேவதைகள்' எனப் பொருள்படும் 'ஆபரேஷன் நன்னே பரிஷ்டே' மூலம் 50,000 குழந்தைகளை இரயில்வே பாதுகாப்பு படை மீட்டுள்ளது. மேலும், ரயில்களில் நடைபெறும் குழந்தைக் கடத்தலை தடுக்கும் வகையில், "ஆப்ரேஷன் ஆஹட்" திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்மூலம் 298 குழந்தைகள் உள்பட 1400 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற ஆட்கடத்தலைத் தடுக்கும் விதமாக 740–க்கும் மேற்பட்ட இடங்களில் இரயில்வே பாதுகாப்புப் படை, ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவை அமைத்துள்ளது.

---

**2. டெஃப்லிம்பிக்ஸ்: இந்தியாவுக்கு இரு தங்கம்**

பிரேஸிலில் நடைபெறும் காதுகேளாதோருக்கான ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு துப்பாக்கிச் சுடுதல், பாட்மின்டனில் தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது. துப்பாக்கிச் சுடுதலில் ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் தனுஷ் ஸ்ரீகாந்த் 247.5 புள்ளிகளுடன் தங்கம் வெல்ல, தென்கொரியாவின் கிம் வூ ரிம் (246.6), மற்றொரு இந்தியரான செளரியா சைனி (224.3) ஆகியோர் முறையே வெள்ளி, வெண்கலம் பெற்றனர். ஸ்ரீகாந்த் எட்டியிருக்கும் புள்ளி, இறுதிச்சுற்றில் உலக சாதனையாகும்.

அதேபோல், பாட்மின்டன் அணிகள் பிரிவின் இறுதிச்சுற்றிலும் இந்தியா 3–1 என்ற கணக்கில் ஜப்பானை வீழ்த்தி சாம்பியன் ஆனது. போட்டியின் 4–ஆம் நாள் நிறைவில், இந்தியா 2 தங்கம், 1 வெண்கலம் என 3 பதக்கங்களுடன் 8–ஆவது இடத்தில் இருந்தது. இந்த ஆண்டு ஒலிம்பிக்கில் 65 பேர்கொண்ட இந்திய அணி கலந்துகொண்டுள்ளது. கடந்த 2017–ஆம் ஆண்டு இப்போட்டியில் இந்தியா தலா 1 தங்கம், வெள்ளி, வெண்கலம் மட்டும் வென்றிருந்தது.

---

**1. அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம் (FEMA) விதிகள் திருத்தப்பட்டு, LIC–இல் எத்தனை சதவீதத்திற்கு அந்நிய நேரடி முதலீட்டினை அனுமதிக்கும்?**

அ. 10

**ஆ. 20 ☑**

இ. 25

ஈ. 50

✓ LIC–இல் 20 சதவீதம் வரை அந்நிய நேரடி முதலீட்டுக்கு வழிவகுக்கும் அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டத்தின் (FEMA) விதிகளை அரசாங்கம் திருத்தியுள்ளது. முதல் பொதுப்பங்கு வெளியீடு (IPO) மூலம் LIC–இல் உள்ள அதன் பங்குகளை நீர்த்துப்போகச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அமைச்சரவை ஒப்புதலுக்குப் பிறகு, LIC–இல் அந்நிய முதலீட்டை எளிதாக்குவதற்காக, தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை FDI கொள்கையில் திருத்தஞ்செய்தது. LIC–இன் வரைவு ஆவணங்களுக்கு SEBI ஒப்புதல் அளித்தது.

**2. உலகின் முதல் 'கிரிப்டோ அடிப்படையில் இயங்கும்' கொடுப்பனவு அட்டையுடன் தொடர்புடைய உலகளாவிய கொடுப்பனவு நிறுவனம் எது?**

அ. VISA

**ஆ. மாஸ்டர்கார்டு ☑**

இ. ரூபே

ஈ. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்

✓ கிரிப்டோ வழங்கியான நெக்ஸோ, 'கிரிப்டோ அடிப்படையில் இயங்கும்' உலகின் முதல் கொடுப்பனவு அட்டையை அறிமுகப்படுத்துவதற்காக உலகளாவிய கொடுப்பானவு நிறுவனமான மாஸ்டர்கார்டுடன் கூட்டிணைந்துள்ளது. தொடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் கிடைக்கப்பெறும் இந்த அட்டை, பயனர்கள் பிட்காயின் போன்ற டிஜிட்டல் சொத்துக்களை விற்காமல் செலவிட அனுமதிக்கிறது. மாஸ்டர்கார்டைப் பயன்படுத்தி வரும் உலகெங்கிலும் உள்ள 92 மில்லியன் வணிகர்களிடம் இந்த அட்டையைப் பயன்படுத்த முடியும்.

**3. 'மான்டே–கார்லோ மாஸ்டர்ஸ் 2022'ஐ வென்ற ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் என்பவர் எந்த நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் வீரராவார்?**



அ. பிரான்ஸ்

ஆ. சுவிச்சர்லாந்து

**இ. கிரேக்கம் ☑**

ஈ. கியூபா

✓ கிரேக்க டென்னிஸ் வீரரான ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ், மான்டே–கார்லோ மாஸ்டர்ஸில் பட்டத்தை தக்கவைத்துக் கொண்ட ஆறாவது வீரரானார். அவர் 2022 பதிப்பின் இறுதிப் போட்டியில் அலெஜான்ட்ரோ டேவிடோவிச் போகினாவை நேர்செட்களில் தோற்கடித்தார். இந்த வெற்றி அவரது எட்டாவது ATP டூர் பட்டத்தையும் அவரது இரண்டாவது 'மாஸ்டர்ஸ் 1000' பட்டத்தையும் குறிக்கிறது. அவர் தற்போது WTA பட்டியலில் உலகின் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

**4. அண்மையில் காலமான D விஷ்வாவுடன் சார்ந்த விளையாட்டு எது?**



அ. டென்னிஸ்

ஆ. ஸ்குவாஷ்

**இ. டேபிள் டென்னிஸ் ☑**

ஈ. வாள்சண்டை

- ✓ தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 வயதான சிறந்த டேபிள் டென்னிஸ் வீரரான D விஷ்வா, 83ஆவது சீனியர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க ஷில்லாங்கிற்குச் செல்லும் வழியில் சாலை விபத்தில் உயிரிழந்தார். கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடந்த தேசிய தரவரிசைப் போட்டியில், இளையோர் U–19 சிறுவர்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார். மேலும் 2021 டிசம்பரில் தென் மண்டல தரவரிசைப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்தார்.

**5. புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட டர்பன் என்னும் நகரம் அமைந்துள்ள நாடு எது?**



அ. அமெரிக்கா

**ஆ. தென்னாப்பிரிக்கா ☑**

இ. ரஷ்யா

ஈ. எகிப்து

- ✓ தென்னாப்பிரிக்காவின் கீழைப்பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய புயல் தாக்குதலுக்குப் பிறகு அதிக மழை பெய்துள்ளது. கிட்டத்தட்ட 400 பேரின் மரணத்திற்குக் காரணமான இப்புயல், பல்லாயிரக்கணக்கான மக்களை வீடற்றவர்களாக ஆக்கியுள்ளது. 3.5 மில்லியன் மக்கள் வசிக்கும் டர்பன் நகரத்தில் மீட்பு நடவடிக்கைகள் மற்றும் மனிதாபிமான நிவாரணப் பணிகள் நடந்து வருகின்றன. வெள்ளத்தால் 13,500–க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் சுமார் 4,000 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. அவசரகால நிவாரண நிதியாக அந்நாட்டு அரசாங்கம் ஒரு பில்லியன் ராண்ட் ($68 மில்லியன்) நிதியை அறிவித்துள்ளது.

**6. தடையற்ற இணைய இணைப்புடன் டிஜிட்டல் சேவைகளை வழங்கும், 'L–ரூட் சர்வரை'ப் பெற்ற இந்தியாவின் முதல் மாநிலம் எது?**



அ. கேரளா

**ஆ. இராஜஸ்தான் ☑**

இ. குஜராத்

ஈ. தெலுங்கானா

- ✓ L–ரூட் சேவையகத்தைப் பெற்ற நாட்டின் முதல் மாநிலமாக இராஜஸ்தான் மாறியுள்ளது. இது மாநில அரசு தனது டிஜிட்டல் சேவைகளை வழங்கவும், தடையற்ற இணைய இணைப்புடன் மின்–ஆளுகையைச் செயல்படுத்தவும் உதவும். இந்தப் புதிய வசதி இணைய உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதோடு இணைய அடிப்படையிலான செயல்பாடுகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும் உதவும்.

**7. 'பொருளாதார நிலை – State of the Economy' என்பது எந்த நிறுவனத்தின் முதன்மை அறிக்கையாகும்?**




அ. NITI ஆயோக்

**ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ☑**

இ. நிதியமைச்சகம்

ஈ. FICCI

- ✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அதன் முதன்மையான 'பொருளாதார நிலை' அறிக்கையில், பொருட்களின் விலை உயர்வு, அதிகரித்துவரும் இறக்குமதிகளுக்கு இடையே பணவீக்க அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று கூறியுள்ளது. அடிப்படைகளின் வலிமை மற்றும் சர்வதேச இருப்புக்களின் பங்கு ஆகியவை இடையகங்களை வழங்கினாலும், விரைவாக விரிவடையும் வர்த்தகம் மற்றும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறைகள் மூலதன விலகளுடன் இணைந்து இருப்பது வெளிப்புற நிலைத்தன்மைக்கு ஆபத்துகளாகும்.

**8. 'சீர்மிகு நகரங்கள், சீர்மிகு நகரமயமாக்கல்' மாநாட்டை நடத்தும் நகரம் எது?**

அ. சென்னை

ஆ. விசாகப்பட்டினம்

**இ. சூரத் ☑**

ஈ. பாலக்காடு

✓ 'சீர்மிகு நகரங்கள், சீர்மிகு நகரமயமாக்கல்' மாநாட்டை சூரத்தில் உள்ள சூரத் ஸ்மார்ட் சிட்டி கார்ப்பரேஷன் டெவலப்மென்ட் லிட் உடன் இணைந்து மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. இந்தியா சீர்மிகு நகரங்கள் விருதுகள் போட்டி (ISAC) – 2020இல், சூரத் மற்றும் இந்தூர் சிறந்த நகரத்திற்கான விருதைப் பெற்றன. மேலும், உத்தரபிரதேசம், 'சிறந்த மாநில' விருது பெற்றது. நகர்ப்புற விளைவு கட்டமைப்பு – 2022, தரவுத்தளம் – AMPLIFI மற்றும் சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் விளைவுகள் குறித்த தகவல்களை அளிக்கும் தகவல்பலகை உள்ளிட்ட பல்வேறு முன்னெடுப்புகள் அப்போது தொடங்கப்பட்டன.

**9. 'தேசிய இணையவெளிப் பாதுகாப்பு நேர்வு மீட்புப் பயிற்சியை (NCX இந்தியா)' ஏற்பாடு செய்கிற நிறுவனம் எது?**

அ. இந்திய இராணுவம்

**ஆ. தேசிய பாதுகாப்புக் கழகம் ☑**

இ. அதிநவீன கணினி வளர்ச்சிக்கான மையம்

ஈ. NITI ஆயோக்

✓ தேசிய பாதுகாப்புக் கழகச் செயலகமானது அரசு அதிகாரிகளுக்கு தேசிய இணையவெளிப் பாதுகாப்பு நேர்வு மீட்புப் பயிற்சியை (NCX இந்தியா) ஏற்பாடு செய்கிறது. இந்தப் பயிற்சியை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தொடங்கிவைத்தார். தீங்குநிரல் தகவல் பகிர்வு தளம் (MISP), பாதிப்பு கையாளுதல் மற்றும் ஊடுருவல் சோதனை, வலையமைப்பு, டிஜிட்டல் தடயவியல்போன்ற பல்வேறு முக்கிய இணையவெளிப் பாதுகாப்பு சார்ந்த பகுதிகளில் பங்கேற்பாளர்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.

**10. 'அங்கிதா ரெய்னா, ருதுஜா போசலே, ரியா பாட்டியா மற்றும் சௌஜன்யா பவிசெட்டி' ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. ஸ்குவாஷ்

**ஆ. டென்னிஸ் ☑**

இ. டேபிள்-டென்னிஸ்

ஈ. ஹாக்கி



✓ அங்கிதா ரெய்னா, ருதுஜா போசலே, ரியா பாட்டியா மற்றும் சௌஜன்யா பவிசெட்டி ஆகியோர் அடங்கிய இந்திய பெண்கள் டென்னிஸ் அணி பில்லி ஜீன் கிங் கோப்பை–2022இல் மூன்றாவது இடத்தைப் பிடித்தது. முன்னதாக ஜப்பான் மற்றும் சீனாவுக்கு எதிரான குழு ஆட்டங்களில் தோல்வியடைந்த பிறகு, அங்கிதா ரெய்னா தலைமையிலான அணி மீளெழுச்சி பெற்று வெற்றி பெற்றது. இந்தோனேசியா, நியூசிலாந்து மற்றும் இறுதியாக தென்கொரியாவுக்கு எதிராக இது மூன்றாவது–நேரான வெற்றியாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2022 மே 8 – உலக இரத்த அழிவுச்சோகை (தலசீமியா) நாள்**

**கருப்பொருள்:** Be Aware.Share.Care: Working with the Global Community as One to Improve Thalassemia Knowledge.

---

**2. சட்டப்படியான வயதை எட்டுவதற்கு முன்பே திருமணம்: பெண்கள் 25%; ஆண்கள் 15%**

சட்டப்படியான குறைந்தபட்ச திருமண வயதை எட்டுவதற்கு முன்னரே 18 முதல் 29 வயதுவரையுடைய பெண்களில் 25% பேருக்கு திருமணம் நடந்திருப்பது தேசிய குடும்ப சுகாதார கண்காணிப்பு (NFHS) அமைப்பு நடத்திய சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. அதுபோல, 21 முதல் 29 வயதுவரையுடைய 15% ஆண்களுக்கு சட்டப்படியான குறைந்தபட்ச மண வயதை எட்டுவதற்கு முன்பே திருமணம் நடைபெற்றிருப்பதும் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் பெண்களுக்கான சட்டப்படியான குறைந்தபட்ச திருமண வயது 18 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆண்களுக்கு 21 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது, இருதரப்பினருக்கும் குறைந்தபட்ச திருமண வயதை 21–ஆக மாற்றுவதற்கு அரசு திட்டமிட்டு வருகிறது.

இந்தச் சூழலில், சட்டப்படியான வயதை அடைவதற்கு முன்னரே திருமணங்கள் நடைபெறுவது தொடர்பாக 2019 முதல் 2021 வரை NFHS ஆய்வுமேற்கொண்டு, அதன் முடிவை வெளியிட்டது. அதில் கூறியிருப்பதாவது:

சட்டப்படியான குறைந்தபட்ச மண வயதை எட்டுவதற்கு முன்னரே பெண்களுக்கு திருமணம் செய்துவைக்கப்படும் மாநிலங்களில் 42 சவீதத்துடன் மேற்கு வங்கம் முதலிடத்தில் உள்ளது. பிகார் (42%), திரிபுரா (39%), ஜார்க்கண்ட் (35%), ஆந்திரம் (33%), அஸ்ஸாம் (32%), தாத்ரா நாகர் ஹவேலி மற்றும் டாமன் டையு (28%), தெலங்கானா (27%), மத்திய பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்கள் (25%) ஆகியவை இந்த விவகாரத்தில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. அதுபோல, குறைந்தபட்ச மண வயதை எட்டுவதற்கு முன்னரே ஆண்களுக்கு திருமணம் நடைபெறும் மாநிலங்களில் 25 சதவீதத்துடன் பிகார் முதலிடத்தில் உள்ளது.

குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் 24 சதவீதத்துடனும், ஜார்கண்ட் 22 சதவீதத்துடனும், அருணாசல பிரதேசம் 21 சதவீதத்துடனும், மேற்கு வங்கம் 20 சதவீதத்துடனும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இதில் குறைந்தபட்சமாக லட்சத்தீவு, சண்டீகரில் 1 சதவீதத்துக்கும் குறைவான ஆண்களுக்கு திருமண வயதை எட்டுவதற்கு முன்னரே திருமணம் நடைபெறுகிறது. கேரளத்தில் 1 சதவீத ஆண்களுக்கும், கர்நாடகம், தமிழ்நாடு, நாகாலந்து மாநிலங்களில் 4% ஆண்களுக்கும் குறைந்தபட்ச திருமண வயதை எட்டுவதற்கு முன்னரே திருமணம் செய்து வைக்கப்படுகிறது. 11% மணங்கள் ரத்த சொந்தங்களில் நடைபெறுவதும், இது கேரளம் தவிர்த்து பிற தென்மாநிலங்களில் பொதுவான நிகழ்வாக காணப்படுவதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

---

**2. தேசிய ஹாக்கி: தமிழ்நாடு வெற்றி**

சீனியர் மகளிர் தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப்பில் தமிழகம் முதல் ஆட்டத்தில் வெள்ளிக்கிழமை வெற்றியை பதிவு செய்தது. மத்திய பிரதேச மாநிலம் போபாலில் தொடங்கிய இப்போட்டியில் முதல்நாளான வெள்ளிக்கிழமை 5 ஆட்டங்கள் நடைபெற்றன. அதில் தமிழகம் தனது ஆட்டத்தில் 5–0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தபோது அந்தமான் & நிகோபார் 'போர்பெய்ட்' செய்தது. ஆட்டத்தின் விதிகளை ஏதேனும் ஒரு அணி மீறியதாகக் கருதப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அணி 'போர்பெய்ட்' செய்ததாக அறிவிக்கப்படும். அந்த அடிப்படையில் அந்தமான் & நிகோபார் 'போர்பெய்ட்' செய்யப்பட்டதால் தமிழகம் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

இதர ஆட்டங்களில் கர்நாடகம் – அருணாசல பிரதேசத்தையும் (10–0), உத்தர பிரதேசம் – கோவாவையும் (8–0), தில்லி – குஜராத்தையும் (13–0), ஒடிஸா – தெலங்கானாவையும் (14–0) வீழ்த்தின. தமிழ்நாடு தனது அடுத்த ஆட்டத்தில் கர்நாடகத்தைய ஞாயிற்றுக்கிழமை எதிர்கொள்கிறது.

---

### 3. 'UNESCO அரங்கில் திருக்குறள் மாநாடு': தமிழ்நாடு அரசு

பாரிஸில் உள்ள UNESCO அரங்கில் திருக்குறள் மாநாடு நடத்தப்படும் என்று தமிழ் பண்பாடு மற்றும் தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் துறை வாரியாக மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெற்று வருகின்றன. இன்று காலை கேள்வி நேரத்திற்கு பிறகு தொழில்துறை மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறையின் மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழ் பண்பாடு துறையின் கீழ் புதிய அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

1. திருக்குறளுக்கு ஐக்கிய நாட்டு கல்வி அறிவியல் பண்பாடு அமைப்பின் (யுனெஸ்கோ) அங்கீகாரம் கிடைக்கும் வகையில் பாரிசில் உள்ள யுனெஸ்கோ அரங்கில் திருக்குறள் மாநாடு நடத்த ₹1 கோடி நிதியுதவி வழங்கப்படும்.

2. தமிழகம் முழுவதும் 6,218 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் மன்றங்களை மேம்படுத்தி ஆண்டிற்கு மூன்று தமிழ்க் கூடல் நிகழ்வுகளை நடத்த ₹5.60 கோடி வழங்கப்படும்.

3. அனைத்துக் காட்சி ஊடகங்களுக்கும் தமிழ் உச்சரிப்பு சிறப்பு வகுப்புகள் நடத்தப்படும். தமிழைச் சிறப்பாக உச்சரிக்கும் ஊடகங்களுக்கு மாநில அளவில் சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது வழங்கப்படும்.


1. **அண்மையில் வெளியான, "The boy who wrote a constitution" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

**அ. ராஜேஷ் தல்வார் ☑**

ஆ. அருந்ததி ராய்

இ. ரோமிலா தாப்பர்

ஈ. அர்ஜுன் தேவ்




✓ பிரபல நாடக ஆசிரியரும் எழுத்தாளருமான ராஜேஷ் தல்வார் எழுதிய, "The Boy Who Wrote a Constitution" என்ற நூல் அண்மையில் வெளியிடப்பட்டது. அம்பேத்கரின் 131ஆவது பிறந்தநாளையொட்டி, அம்பேத்கரின் குழந்தைப் பருவத்து நினைவுகளை அடிப்படையாகக் கொண்ட இக்குழந்தைகள் நாடகம் வெளியிடப்பட்டது. ஆசிரியரின் பிற நூல்களுள், "The Vanishing of Subhash Bose", "Gandhi, Ambedkar, and the Four-Legged Scorpion", மற்றும் "Aurangzeb" ஆகியவை அடங்கும்.

2. **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஷிங்கு லா கணவாய்" அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. உத்தரகாண்ட்

**ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. சிக்கிம்



✓ ஹிமாச்சல பிரதேசத்தை லடாக்குடன் இணைக்கும் வகையில் 16,580 அடி உயரத்தில் ஷிங்கு லா கணவாயில் உலகின் மிகவுயரமான சுரங்கப்பாதையை எல்லைப்புறச் சாலைகள் அமைப்பு உருவாக்கவுள்ளது. ஷிங்கு லா கணவாயில் அமைந்துள்ள உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த ஹிமாச்சல்-சான்ஸ்கர் சாலையைத் திறந்துவைக்கும் போது BROஇன் தலைமை இயக்குநர் Lt Gen இராஜீவ் சௌத்ரி இவ்வாறு கூறினார். இந்த இலட்சியத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு BRO-இன் 'Project Yojak'ஐ நடுவண் அரசு தொடங்கியுள்ளது.

3. **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'டான்பாஸ்' என்பது எந்த நாட்டில் உள்ள ஒரு பகுதியாகும்?**

**அ. ரஷ்யா ☑**

ஆ. ஜப்பான்

இ. உக்ரைன்

ஈ. இஸ்ரேல்



✓ ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் படைகள் 300 மைல்களுக்கு மேல் முன்னோக்கிச் சென்று தாக்குதல் நடத்தியதுடன், அது டான்பாஸ் பிராந்தியத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்ற முன்னேறியது. சரமாரியான பீரங்கி மற்றும் ஏவுகணை தாக்குதலின் ஆதரவுடன் ஆயிரக்கணக்கான ரஷ்யப் படைகள் டான்பாஸ் பிராந்தியத்தில் முன்னேறின; உக்ரேனிய அதிகாரிகள் அதை 'டான்பாஸ் போர்' என்று அழைத்தனர்.

4. **இந்தியாவின் முதல் கையடக்க சூரிய மேற்கூரை அமைப்பு திறக்கப்பட்ட நகரம் எது?**

அ. மும்பை

ஆ. ஜெய்சால்மர்

**இ. காந்திநகர் ☑**

ஈ. சண்டிகர்



- ✓ இந்தியாவின் முதல் கையடக்க சூரிய மேற்கூரை அமைப்பானது காந்திநகரில் உள்ள சுவாமிநாராயண் அக்ஷர்தாம் கோவில் வளாகத்தில் திறக்கப்பட்டது. ஜெர்மன் மேம்பாட்டு நிறுவனமான Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit மூலம் அக்கோவில் வளாகத்தில் 10 PV போர்ட் அமைப்புகள் நிறுவப்பட்டது. இந்தியா முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நகரங்களை மேம்படுத்துதற்காக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் முன்முயற்சியின்கீழ் இந்த அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

### 5. விண்வெளி செயற்கைக்கோள்களுக்கு எதிரான ஏவுகணை சோதனைகளுக்கு தடை விதித்த முதல் நாடு எது?

அ. ரஷ்யா

**ஆ. அமெரிக்கா ☑**

இ. இஸ்ரேல்

ஈ. ஜப்பான்



- ✓ விண்வெளி செயற்கைக்கோள்களுக்கு எதிரான ஏவுகணை சோதனைகளுக்கு தடை விதித்த உலகின் முதல் நாடு என்ற பெருமையை அமெரிக்கா பெற்றுள்ளது. தேசிய விண்வெளி கவுன்சிலின் தலைவரான அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ், இதுபோன்ற சோதனைகளால் உருவாகும் குப்பைகள் விண்வெளி வீரர்கள் மற்றும் செயற்கைக்கோள்களின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக அறிவித்தார். அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இதுபோன்ற சோதனைகளை மேற்கொண்டு விண்வெளி குப்பைகளை உருவாக்கி உள்ளன.

### 6. 'லா ரோடா பன்னாட்டு ஓப்பன் செஸ் போட்டியில்' வென்ற இந்திய செஸ் வீரர் யார்?

அ. R பிரக்ஞானந்தா

**ஆ. D குகேஷ் ☑**

இ. இனியன்

ஈ. கோனேரு ஹம்பி



- ✓ இளம் இந்திய கிராண்ட்மாஸ்டரான D குகேஷ், 48ஆவது 'லா ரோடா சர்வதேச ஓப்பன் செஸ் போட்டியில்' ஒன்பது சுற்றுகளில் எட்டுப் புள்ளிகளைப் பெற்று வெற்றியைப்பெற்றார். ஒன்பது சுற்றுகளில் ஆட்டமிழக்காமல் இருந்த தமிழ்நாட்டைச்சேர்ந்த 15 வயதான D குகேஷ், இறுதிச்சுற்றில் இஸ்ரேலின் விக்டர் மிகலெவ்ஸ்கியை தோற்கடித்தார். மற்றொரு இளம் இந்திய கிராண்ட்மாஸ்டரான R பிரக்ஞானந்தா மூன்றாமிடத்தைப் பிடித்தார்.

### 7. பூடான் மற்றும் சிங்கப்பூருக்குப் பிறகு, UPI அடிப்படையிலான கொடுப்பனவு சேவைகளை வழங்க, கீழ்காணும் எந்த நாட்டிற்கு NPCI விரிவுபடுத்தப்பட்டுள்ளது?

அ. இலங்கை

ஆ. நேபாளம்

இ. வங்காளதேசம்

**ஈ. ஐக்கிய அரபு அமீரகம் ☑**




- ✓ NPCI–இன் சர்வதேசப் பிரிவான NPCI இன்டர்நேஷனல் பேமெண்ட்ஸ் லிட் (NIPL), Mashreq வங்கியின் கொடுப்பனவு துணை நிறுவனமான 'NeoPay' உடன் கூட்டுசேர்ந்து UAE சந்தையில் நுழைந்துள்ளது. BHIM UPI சேவை 'NeoPay' முனையங்களில் இயக்கப்பட்டுள்ளது. இக்கூட்டாண்மை இந்தப் பிராந்தியங்களுக்கு பயணிக்கும் இந்தியர்களுக்கு ஒருங்கிணைந்த கொடுப்பனவு இடைமுகம் அடிப்படையிலான கொடுப்பனவு சேவைகளை வழங்கும். பூடான் மற்றும் சிங்கப்பூருக்குப் பிறகு NPCI–இன் மூன்றாவது சர்வதேச விரிவாக்கமாக இது உள்ளது.

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'SAANS பிரச்சாரம்' என்பதுடன் தொடர்புடைய நோய் எது?**



அ. COVID-19

**ஆ. நிமோனியா ☑**

இ. நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்

ஈ. நுரையீரல் ஃபைப்ரோஸிஸ்

✓ "**S**ocial **A**wareness and **A**ction to **N**eutralise Pneumonia **S**uccessfully" (**SAANS**) என்பது நடுவண் சுகாதார அமைச்சகத்தால் குழந்தைகளிடையே நிமோனியா குறித்த விழிப்புணர்வு மற்றும் நிமோனியாவை முன்கூட்டியே கண்டறிவதை உறுதிசெய்யும் நோக்கோடு தொடங்கப்பட்டது. சமீபத்தில், கர்நாடக சுகாதாரம் மற்றும் மருத்துவக் கல்வி அமைச்சகம் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நிமோனியாவை முன்கூட்டியே கண்டறிவதை உறுதி செய்வதற்காக மாநிலத்தில் 'SAANS பிரச்சாரத்தை'த் தொடங்கியுள்ளது. நிமோனியா இறப்பு விகிதத்தை 1000–க்கு 3 அல்லது அதற்கும் குறைவாகக் கொண்டு வருதலை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. நிமோனியா என்பது பாக்டீரியா, வைரஸ் அல்லது பூஞ்சையால் ஏற்படும் ஒரு நுரையீரல் தொற்று ஆகும்.

**9. நிர்வாகச் சேவை அதிகாரிகளுக்கு இடையே யார் உரையாற்றியதை நினைவுகூரும் வகையில், இந்தியா, 'குடிமைப் பணிகள் நாளை'க் கொண்டாடுகிறது?**



அ. மகாத்மா காந்தி

ஆ. ஜவஹர்லால் நேரு

இ. B R அம்பேத்கர்

**ஈ. சர்தார் வல்லபாய் படேல் ☑**

✓ 1947ஆம் ஆண்டு விடுதலை இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல், தில்லியில், தகுதிகாண் பருவத்தில் இருந்த நிர்வாகச் சேவைகள் அதிகாரிகளிடையே உரையாற்றிய நாளை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் ஏப்.21 அன்று, இந்திய அரசு, 'குடிமைப் பணிகள் நாளை'க் கொண்டாடுகிறது. புகழ்பெற்ற அவ்வுரையில், அவர் நிர்வாகச் சேவைகள் அதிகாரிகளை, "இந்தியாவின் எஃகுச் சட்டகம்" என்று குறிப்பிட்டார். இதுபோன்ற முதல் கொண்டாட்டம் 2006 ஏப்ரல்.21 அன்று நடந்தது. 'பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்கான பிரதமர் விருதுகள்' ஆண்டுதோறும் இவ்விழாவின்போது வழங்கப்படுகிறது.

**10. சமீப செய்திகளில் இடம்பெற்ற அர்ஜுன் ஹலகுர்கி, சுனில் குமார் மற்றும் நீரஜ் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ. ஹாக்கி

ஆ. டென்னிஸ்

**இ. மல்யுத்தம் ☑**

ஈ. டேபிள் டென்னிஸ்

✓ மங்கோலியாவின் தலைநகர் உலன் பாட்டரில் நடைபெற்று வரும் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில், கிரேக்க–ரோமன் மல்யுத்த வீரர்களான அர்ஜுன் ஹலகுர்கி, சுனில் குமார் மற்றும் நீரஜ் ஆகியோர் வெண்கலப் பதக்கங்களை வென்றனர். இன்னும் ஐந்து கிரேகோ பிரிவுகள், பிரீஸ்டைல் மற்றும் பெண்கள் மல்யுத்தம் போட்டிகள் நடைபெற உள்ளன. எந்த கிரேக்க–ரோமன் மல்யுத்த வீரரும் டோக்கியோவிற்குத் தகுதி பெறாததால், கிரேக்க–ரோமன் பிரிவு இந்திய மல்யுத்தத்தில் தேவையற்ற இணைப்பாகக் கருதப்படுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வங்கக்கடலில் உருவானது 'அசானி' புயல்**

வங்கக்கடலில் 'அசானி' என்ற புயல் உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவிய காற்றழுத்தத்தாழ்வு மண்டலம் அடுத்தடுத்து வலுவடைந்து புயலாக மாறியுள்ளது. இந்தப் புயலுக்கு இலங்கை நாடு 'அசானி' என்று பெயர் வழங்கியுள்ளது. இந்தப் புயல் மேலும் தீவிரமாகி ஒடிஸா கடற்கரை நோக்கி நகரவுள்ளது.

---

**2. நூல் வெளியீடு**

முன்னாள் இகாப அதிகாரி பிரகாஷ் சிங் எழுதிய, "இந்தியாவில் காவல்துறை சீர்திருத்தங்களுக்கான போராட்டம்" என்ற நூலை தில்லியில் வைத்து இந்திய துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா வெளியிட்டார்.

---

**3. புயல்களின் பெயர்களும் பின்னணியும்...**

வங்கக்கடலில் புதிதாக உருவாகியுள்ள புயலுக்கு, 'அசானி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் பெயர் இலங்கையால் அளிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் சிங்கள மொழியில் 'அசானி' என்பதற்கு 'பெருஞ்சினம்' என்று பொருள்.

**ஏன் பெயர் சூட்டப்படுகிறது?**

அதற்கு பதிலளிக்கும் விதமாக உலக வானிலை அமைப்பு விளக்கம் அளித்துள்ளது. அதன்படி, ஒரு குறிப்பிட்ட புவியியல் இடத்தில் அல்லது பூமியின் எந்தவொரு பகுதியிலும் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட புயல்கள் உருவாகக்கூடும். அந்தப் புயல்களை வேறுபடுத்திக் காண்பித்து குழப்பத்தைத் தவிர்க்கவும், பேரிடர் அபாய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பாதிப்பின் தீவிரத்தைக் குறைக்கவும் ஒவ்வொரு புயலுக்கும் பெயர்சூட்டப்படுகிறது.

புயல்களுக்கு சிறிய மற்றும் அழைப்பதற்கு எளிமையாக உள்ள பெயர்கள் சூட்டப்படுகின்றன. இதுபோல் பெயர் சூட்டுவது நூற்றுக்கணக்கான நிலையங்கள், கடலோர தளங்கள் மற்றும் கப்பல்களுக்கு விரைந்தும், திறம்படவும் புயல் குறித்த தகவல்களை அனுப்ப உதவுகிறது.

**பெண் பெயர் வைக்கும் வழக்கம்:**

தொடக்கத்தில் புயல்களுக்குத் தன்னிச்சையாகப் பெயரிடப்பட்டன. 1900-ஆம் ஆண்டுகளின் மத்தியில் இருந்து புயல்களுக்கு பெண் பெயர் வைக்கும் வழக்கம் தொடங்கியது. பின்னர் பெயர் வைப்பதில் மேலும் ஒழுங்கான, ஆற்றல்மிக்க நடைமுறையைக் கொண்டிருப்பதற்குப் பெயர் பட்டியல் தயாரிக்க வானிலை ஆய்வாளர்கள் தீர்மானித்தனர்.

**பெயர்சூட்டலில் ருசிகரம்:**

வானிலை விஞ்ஞானிகள் புயல்களுக்குத் தன்னிச்சையாகப் பெயர்சூட்டி வந்த காலத்தில், தங்களுக்குப் பிடிக்காத பெண்கள், அரசியல்வாதிகள் பெயர்களைச் சூட்டி வந்தார்கள்!

புயல்களுக்குப் பெயர்சூட்டும் வழக்கத்தைத் தொடங்கியவர் பிரிட்டனைச்சேர்ந்த வானியல் விஞ்ஞானி கிளெமென்ட் ராக் (1852-1922) என்பவர். இவர் முதலில் பிரிட்டனிலும் பின்னர் ஆஸ்திரேலியாவிலும் வானிலையை அளவிடுவதற்கான கருவிகளை தனிப்பட்ட முறையில் அமைத்து ஆய்வு செய்துவந்தார். முதலில் கிரேக்க எழுத்துகளைக் கொண்ட பெயர்களையும் கிரேக்க புராணங்களில் காணப்படும் பெயர்களையும் புயல்களுக்குச்சூட்ட அவர் முடிவுசெய்தார். பின்னர் புயல்களின் பெயர்கள் வரிசையில் அவருக்குப் பிடிக்காத ஆஸ்திரேலிய பிரதமர்களின் பெயர்களும் இடம்பிடித்தன!

**ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும்:**

ஒருமுறை சூட்டப்படும் பெயர் மீண்டும் பயன்படுத்தப்படாது. புயல்களுக்கான பெயர்கள் அதிகபட்சம் 8 எழுத்துகளைக் கொண்டிருக்கலாம். அந்தப் பெயர் எந்தவொரு நாட்டுக்கு எதிராகவும், எந்தவொரு இனத்தைச் சேர்ந்தவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும் விதமாகவும் இருக்கக்கூடாது.

கடந்த 2020–ஆம் ஆண்டு புயல்களுக்குச்சூட்ட 13 நாடுகள் வழங்கிய 169 பெயர்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு நாடும் தலா 13 பெயர்களை அளித்தன. அவற்றில் இந்தியா சார்பில் அளிக்கப்பட்ட பெயர்களில் கதி, மேக், ஆகாஷ் ஆகிய பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இந்திய பங்களிப்பு:**

உலக அளவில் 6 சிறப்பு பிராந்திய வானிலை மையங்கள் உள்ளன. அவற்றில் இந்திய வானிலை ஆய்வு மையமும் ஒன்று. வடக்கு இந்தியப் பெருங்கடல் பகுதியில் உருவாகும் புயல் மணிக்கு 62 கிமீ அல்லது அதற்கும் அதிகமான வேகத்தை எட்டும்போது, அதற்குப் பெயர் சூட்டும் பொறுப்பு இந்திய வானிலை ஆய்வு மையத்திடம் வழங்கப்பட்டு உள்ளது. வடக்கு இந்தியப் பெருங்கடல் பகுதியையொட்டியுள்ள 13 நாடுகளுக்கு புயல் குறித்த ஆலோசனைகளை இந்திய வானிலை ஆய்வு மையம் வழங்குகிறது.

வங்கக்கடல் மற்றும் அரபிக்கடலில் புயல்களுக்குப் பெயரிடும் வழக்கம் 2004ஆம் ஆண்டு செப் மாதம் தொடங்கியது.

அகவரிசைப்படி உள்ள நாடுகள் அளிக்கும் பெயர்களுக்கு ஏற்ப பட்டியல் தயாரிக்கப்படுகிறது. அவை பாலினம், அரசியல், மத நம்பிக்கைகள், பண்பாடுகள் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

**தமிழ்ப்பெயர்...**

தற்போது உருவாகியுள்ள 'அசானி' புயலைத் தொடர்ந்து அடுத்து உருவாகும் புதிய புயலுக்கு 'சித்ரங்' எனப் பெயரிடப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்தியா அளித்துள்ள 'குர்மி', 'பிரவாஹோ', 'ஜார்', 'முரசு' போன்ற பெயர்களும் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படவுள்ளன.

---

**1. இந்திய அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகராக (2022–இல்) நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. அஜை குமார் சூட் ☑**

ஆ. K சிவன்

இ. மயில்சாமி அண்ணாதுரை

ஈ. கிரிஸ் கோபாலகிருஷ்ணன்



✓ இந்திய அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகராக மூத்த இயற்பியலாளர் அஜை குமார் சூட் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பணியாளர் அமைச்சகத்தின் ஆணையின்படி, பிரதமரின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆலோசனைக்குழுவின் உறுப்பினரான சூட், 3 ஆண்டுகாலத்திற்கு அந்தப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அவர், தற்போதைய முதன்மை அறிவியல் ஆலோசகராக இருந்து வரும் புகழ்பெற்ற உயிரியலாளர் K விஜய இராகவனைத் தொடர்ந்து இந்தப் பதவிக்கு வரவுள்ளார்.

**2. 'சர்மத்' என்னும் கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணையைப் பரிசோதித்த நாடு எது?**

அ. அமெரிக்கா

ஆ. சீனா

**இ. ரஷ்யா ☑**

ஈ. பிரான்ஸ்



✓ ரஷ்யா சமீபத்தில் தனது புதிய கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணையான 'Sarmat'ஐ பரிசோதனை செய்தது. RS–28 சர்மத் (சதன்–II என்றும் அழைக்கப்படுகிறது) 10 அல்லது அதற்கு மேற்பட்ட வெடியுளைகளை சுமந்து செல்லும் திறன் கொண்டதாகக் கூறப்படுகிறது. இது 11,000 முதல் 18,000 கிமீ வரம்பில் பூமியின் இரு துருவங்களிலும் இயங்கும் திறன்கொண்டது. தற்போதைய தெற்கு ரஷ்யா, உக்ரைன் மற்றும் கஜகஸ்தானில் வாழ்ந்த நாடோடிப் பழங்குடியினரின் நினைவாக 'சர்மத்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**3. விஸ்டனின் 2022ஆம் ஆண்டுக்கான, 'ஆண்டின் சிறந்த ஐந்து கிரிக்கெட் வீரர்கள்' பட்டியலில் எத்தனை இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர்?**

அ. ஒன்று

**ஆ. இரண்டு ☑**

இ. மூன்று

ஈ. ஒருவருமில்லை



✓ இந்திய அணியின் அணித்தலைவர் ரோகித சர்மாவும் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவும் விஸ்டனின் 2022 ஆம் ஆண்டுக்கான 'சிறந்த 5 கிரிக்கெட் வீரர்களுள் இருவராக'க் கௌரவிக்கப்பட்டனர். நியூசிலாந்தின் தொடக்க ஆட்டக்காரர் டெவோன் கான்வே, இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஆலி ராபின்சன் மற்றும் தென்னாப்பிரிக்க மகளிர் அணியின் அணித்தலைவி டேன் வான் நீகெர்க் ஆகியோரும் அந்தப்பட்டியிலில் இடம்பெற்றுள்ளனர். இங்கிலாந்து அணியின் அணித்தலைவர் ஜோ ரூட், 2022ஆம் ஆண்டு விஸ்டன் கிரிக்கெட்டர்ஸ் அல்மனாக் பதிப்பில் உலகின் முன்னணி கிரிக்கெட் வீரராக தேர்வுசெய்யப்பட்டார்.

**4. ஆண்டுதோறும், 'உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. ஏப்ரல்.18 **ஆ. ஏப்ரல்.21 ☑**


இ. ஏப்ரல்.23 ஈ. மே.05




✓ உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஏப்.21 அன்று கொண்டாடப்படுகிறது. மனித வளர்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தின் பங்குபற்றிய விழிப்புணர்வை

ஏற்படுத்துவதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது. ஐநா பொதுச்சபையானது கடந்த 2017ஆம் ஆண்டில் இந்த நாளைக் கொண்டாடுவதற்கான ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. மேலும் 2018ஆம் ஆண்டில் முதல் உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க நாள் கொண்டாடப்பட்டது. 'Collaboration' என்பது இந்த ஆண்டு உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

**5. 'போபோஸ்' என்பது கீழ்காணும் எந்தக் கோளின் இயற்கையான துணைக்கோள்/நிலவு ஆகும்?**



அ. வெள்ளி

**ஆ. செவ்வாய் ☑**

இ. வியாழன்

ஈ. சனி

✓ NASAஇன் செவ்வாய் ஆய்வூர்தியான, 'பெர்ஸிவெரன்ஸ்' செவ்வாய்க்கோள் சம்பந்தப்பட்ட கிரகணத்தை படம் பிடித்துள்ளது. இது செவ்வாய்க்கோளின் உருளைக்கிழங்கு வடிவ நிலவு அல்லது துணைக்கோளான 'போபோஸ்', சூரியனுக்கு நேரெதிராகக் கடந்தபோது படம் பிடித்தது. இக்கிரகணம், 'பெர்ஸிவரன்ஸி'ன் Mastcam–Z கேமராமூலம் படம்பிடிக்கப்பட்டது. பூமியின் நிலவைக் காட்டிலும் 157 மடங்கு சிறியது 'போபோஸ்' என்பதால், 40 வினாடி நேரத்திற்கு மேல் அக்கிரகணம் நீடித்தது.

**6. யாருக்கு, UNEP, 'புவியின் சாம்பியன்' வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது?**



**அ. டேவிட் அட்டன்பரோ ☑**

ஆ. வங்காரி மாத்தாய்

இ. கிரேட்டா துன்பெர்க்

ஈ. ஜோ பிடன்

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP) டேவிட் அட்டன்பரோவுக்கு, 'புவியின் சாம்பியன்' வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கியுள்ளது. மூத்த ஆங்கில ஒலிபரப்பாளரும் உயிரியலாளருமான டேவிட் அட்டன்பரோ, இயற்கையின் பாதுகாப்பு மற்றும் அதன் மறுசீரமைப்புக்கான ஆராய்ச்சி, ஆவணங்கள் மற்றும் வாதிடுவதற்கான அர்ப்பணிப்புக்காக கௌரவிக்கப்பட்டார். BBC–இன் நேச்சுரல் ஹிஸ்டரி அலகில் பணியாற்றியதற்காக அவர் அறியப்படுகிறார்.

**7. நோபல் பரிசாளரான ஜோஸ் ராமோஸ்–ஹோர்டா, கீழ்காணும் எந்த நாட்டின் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார்?**




அ. மங்கோலியா

**ஆ. திமோர்-லெஸ்டே ☑**

இ. புருனே

ஈ. பப்புவா நியூ கினி

✓ திமோர்–லெஸ்டே அல்லது கிழக்கு திமோர் என்பது ஒரு தென்கிழக்காசிய நாடாகும். அது திமோரின் சரிபாதியாகும். திலி அதன் தலைநகராகும். நோபல் பரிசு பெற்ற ஜோஸ் ராமோஸ்–ஹோர்டா அந்நாட்டின் அதிபர் தேர்தலில் அமோக வெற்றிபெற்றுள்ளார். அந்நாட்டுச் செயலகத்தின் இணையதளத்தின்படி, எழுபத்திரு வயதான அவர் தற்போதைய அதிபர் பிரான்சிஸ்கோ குட்டெரெஸுக்கு எதிராக 62.09% வாக்குகளைப் பெற்றார்.

**8. முதலாவது, 'இன்க்ரெடிபிள் இந்தியா இன்டர்நேஷனல் குரூஸ் கான்பரன்ஸ் – 2022' நடைபெறும் நகரம் எது?**

அ. சென்னை ஆ. மதுரை

இ. விசாகப்பட்டினம் **ஈ. மும்பை ☑**

Incredible !ndia

✓ மே மாதத்தில், 'இன்க்ரெடிபிள் இந்தியா இன்டர்நேசனல் குரூஸ் மாநாடு–2022'ஐ இந்தியா நடத்தவுள்ளது. மும்பை துறைமுக ஆணையமானது மே 14–15 ஆகிய தேதிகளில் இந்தியாவின் நிதித்தலைநகரில் இந்நிகழ்வை நடத்தும். இதன் வகையில் முதலான தனித்துவம்மிக்க, 'கடல் பயண முனையம்' 2024 ஜூலை மாதத்துக்குள் மும்பையால் தொடங்கப்படும். மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்தா சோனோவால், நிகழ்வின் இணையதளத்தையும் தொடங்கி வைத்தார். மேலும் நிகழ்வின் இலச்சினை மற்றும் 'கேப்டன் குரூஸோ' என்ற சின்னத்தையும் அவர் வெளியிட்டார்.

**9. மரபணு மாற்றப்பட்ட கொசுக்களின் முதல் திறந்தவெளி சோதனையை நடத்திய நாடு எது?**

அ. சீனா

**ஆ. அமெரிக்கா ☑**



இ. ஜெர்மனி

ஈ. இத்தாலி

✓ தொடக்கத்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட UK–ஐச் சார்ந்த உயிரித்தொழில்நுட்ப நிறுவனமான, 'ஆக்ஸிடெக்', காட்டுக்கொசுக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் முயற்சியின் ஒருபகுதியாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட கொசுக்களை திறந்த வெளியில் பறக்கவிட்டது. 'Oxitec' ஏற்கனவே பிரேசில், பனாமா, கேமன் தீவுகள் மற்றும் மலேசியாவில் உள்ள வயலில் மரபணு மாற்றப்பட்ட கொசுக்களைப் பரிசோதித்துள்ளது. இது, அமெரிக்காவில் மரபணு மாற்றப்பட்ட கொசுக்களின் முதல் திறந்தவெளி பரிசோதனையாகும்.

**10. அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, 2020–இல் ஒரு நாளளவில் அதிக உயிரி மருத்துவக்கழிவுகளை உருவாக்கிய மாநிலம் எது?**

அ. உத்தர பிரதேசம்

**ஆ. கேரளா ☑**



இ. மத்திய பிரதேசம்

ஈ. கர்நாடகா

✓ 2020ஆம் ஆண்டில் நாடு நாளொன்றுக்கு 651.23 டன் உயிரி மருத்துவக்கழிவுகளை (BMW) உற்பத்தி செய்ததாக சுற்றுச்சூழல் அமைச்சகத் தரவு காட்டுகிறது. COVID–19 தொற்றுநோய்க்குப் பிறகு, தினசரி BMW உற்பத்தி இரண்டு ஆண்டுகளில் சுமார் 962.31 டன்கள் உயர்ந்துள்ளது. இக்காலகட்டத்தில் தினசரி உற்பத்தி செய்யப்படும் BMW–இல் 60% COVID தொடர்பானதாகும். கேரளாவில், 2020ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு சுமார் 40.41 டன் BMW மற்றும் 2020–2022 வரை 178.37 டன் COVID தொடர்பான BMW உற்பத்தி செய்யப்பட்டது.

✓ மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு, குஜராத் மற்றும் உத்தரபிரதேசம் ஆகியவை BMW உற்பத்தியில் முன்னணியில் உள்ளன. மகாராஷ்டிராவில் அதிக எண்ணிக்கையிலான பொது உயிரி மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு வசதிகள் (30) உள்ளன. கேரள மாநிலத்தின் ஒன்றே ஒன்றுதான் (1) உள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சிறந்த சேவைக்காக அஸ்ஸாம் காவல்துறைக்கு குடியரசுத் தலைவரின் கலர்ஸ் கொடி விருதை உள்துறை அமைச்சர் அமித்ஷா வழங்கினார்**

சிறந்த சேவைக்காக அஸ்ஸாம் காவல்துறைக்கு குடியரசுத்தலைவரின் கலர்ஸ் கொடி விருதை மத்திய உள்துறை, கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித்ஷா வழங்கினார்.

நாட்டின் உயரிய காவல்துறை விருதைப்பெறும் பத்தாவது காவல்படையாக அஸ்ஸாம் காவல்துறை திகழ்வது குறித்து பெருமிதமடைவதாக உள்துறை அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டார். கடந்த 1826ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சியால் இந்த காவல்துறை ஏற்படுத்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

---

**2. தமிழ்நாட்டில் 4,200 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பின் பயன்பாடு: மயிலாடும்பாறை ஆய்வு முடிவை வெளியிட்டு முதல்வர் பேச்சு**

தமிழ்நாட்டில் 4,200 ஆண்டுகளுக்கு முன்பே, இரும்பின் பயன்பாடு இருந்து வந்துள்ளதை கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகள் தெரிவிப்பதாக முதல்வர் மு க ஸ்டாலின் பேசினார்.

**தமிழக சட்டப்பேரவையில் விதி 110இன்கீழ் அவர் படித்தளித்த அறிக்கை:**

அகழாய்வுகளில் கிடைக்கக்கூடிய தொல்பொருள்களை ஆய்வுசெய்திட தொல் தாவரவியல், தொல் விலங்கியல், தொல் மரபணு ஆய்வு, சுற்றுச்சூழல் தொல்லியல், மண் பகுப்பாய்வு, உலோகவியல், கடல்சார் ஆய்வுபோன்ற பல்துறை வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றிட புகழ்பெற்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அறிவியல்வழி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் கிடைத்த ஆய்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன.

அதன்படி, கீழடிக்கு அருகேயுள்ள அகழாய்வுத் தளத்தில் சேகரிக்கப்பட்ட மண்மாதிரிகளை பகுப்பாய்வு செய்ததில் அங்கே நெற்பயிர்கள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. சிவகளை வாழ்விடப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்ததில், அங்கே நீர்செல்லும் செங்கல் வடிகாலில் நன்னீர் சென்றுள்ளதும், தேக்கிவைக்கப்பட்ட நீர்நிலையிலிருந்து இந்த நீர் கொண்டுவரப்பட்டதும் ஆய்வில் தெரிய வருகிறது.

**மயிலாடும்பாறை ஆய்வு:**

தமிழ்நாடு தொல்லியல் துறையால் கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை என்ற இடத்தில் ஈமச்சின்னங்கள், வாழ்விடப்பகுதிகளில் ஆய்வுகள் செய்யப்பட்டன. பாறை ஓவியங்கள், புதிய கற்காலக்கருவிகள் என அரியவகை தொல்லியல் அடையாளங்களைக் கொண்ட மயிலாடும்பாறையின் வாழ்விடப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டன.

இந்த ஆய்வின் மூலம், தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து வந்தது உறுதியாகியுள்ளது. இரும்பின் பயனை உணரத்தொடங்கிய பிறகே, அடர்ந்த வனங்களை அழித்து வேளாண்மை செய்திடும் போக்கு உருவாகியுள்ளது. அந்த வகையில், வேளாண்மைச் சமூகம் தொடங்கிய காலம் குறித்தான கேள்விகளுக்கு விடை கிடைத்துள்ளது.

மயிலாடும்பாறையில் ஆய்வு முடிவுகள் 4,200 ஆண்டுகளுக்கு முந்தையது என்பது பெருமைதரத்தக்க செய்தியாகும். இதேபோன்று, கருப்பு–சிவப்புப் பானை வகைகளும் 4,200 ஆண்டுகளுக்கு முன்புடையது.

**புதிய இடங்களில் ஆய்வு:** தமிழ்நாட்டின் தொல்லியல் அகழாய்வுப் பணிகள் இத்துடன் நின்றுவிடாது. கேரளத்தின் பட்டணம், கர்நாடக மாநிலம் தலைக்காடு, ஆந்திரத்தின் வேங்கி, ஒடிஸாவின் பாலூர் பகுதிகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றார் முதல்வர் மு க ஸ்டாலின்.

---

**3. சேதி தெரியுமா?**

**ஏப்.29:** தமிழகத்தில் சித்த மருத்துவப் பல்கலைக்கழக வேந்தராகத் தமிழக முதல்வர் இருப்பதற்கான சட்ட மசோதா தமிழகச் சட்டப்பேரவையில் நிறைவேறியது.

**ஏப்.29:** பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவ அனுமதி வழங்க மத்திய அரசை வலியுறுத்தி சட்டப் பேரவையில் தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மே.2:** சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், இறந்த உடலிலிருந்து கல்லீரல் எடுக்கப்பட்டு உறுப்பு மாற்று அறுவைச்சிகிச்சை இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்டது.

**மே.2:** மணிலாவில் நடைபெற்ற ஆசிய பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். ஆசிய சாம்பியன்ஷிப்பில் சிந்து வெல்லும் இரண்டாவது பதக்கம் இது.

**மே.3:** சென்னையில் உள்ள கிழக்குக் கடற்கரை சாலை இனி 'முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை' என்று அழைக்கப்படும் என்று முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

**மே.4:** பேரறிவாளன் வழக்கில், '20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் உள்ளவர்களின் வழக்கில் நகர்வுகள் இல்லாதபட்சத்தில் நீதிமன்றமே அந்த நபர்களின் விடுதலை விவகாரத்தில் முடிவெடுக்க அதிகாரம் உள்ளது' என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

**மே.5:** தமிழக சட்டப்பேரவையில் இரண்டாம் முறையாக நிறைவேற்றப்பட்ட நீட் மசோதாவை நிலுவையில் வைத்திருந்த ஆளுநர் ஆர் என் ரவி அதைக் குடியரசுத்தலைவருக்கு அனுப்பினார்.

**1. டிஜிட்டல் வணிகத்திற்கான திறந்தவெளி வலையமைப்பின் (Open Network for Digital Commerce) சோதனை கட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

**அ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑**

ஆ. MSME அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது டிஜிட்டல் வணிகத்திற்கான திறந்தவெளி வலையமைப்பின் சோதனை கட்டத்தை அறிமுகப்படுத்தியது. நாட்டில் டிஜிட்டல் வணிகத்தின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு டிஜிட்டல் வணிகத்தை மக்கள்மயப்படுத்துவதற்கு வழிவகுக்கும் முயற்சியாகும் இது. மின்னணு வலையமைப்புகள் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பரிமாற்றஞ்செய்வதற்கான திறந்த தளத்தை மேம்படுத்துவதை இந்த முயற்சி தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. 'நாணயம் மற்றும் நிதி' குறித்த அறிக்கையை (Report on Currency and Finance) வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ. நிதி அமைச்சகம்

**ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ☑**

இ. இந்திய தேசிய கொடுப்பனவுக் கழகம்

ஈ. NITI ஆயோக்

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 2021–22ஆம் ஆண்டிற்கான, 'நாணயம் மற்றும் நிதி' குறித்த அறிக்கையை வெளியிட்டது. வலுவான மற்றும் நிலையான வளர்ச்சிக்கு விலை நிலைப்புத்தன்மை அவசியமான முன்நிபந்தனை ஆகும் என இந்த அறிக்கை கூறுகிறது. சீர்திருத்தங்களுக்கான ஏழு அம்ச வரைபடத்தையும் அது முன்மொழிந்தது COVID–19 தொற்றுநோயால் ஏற்பட்ட சுமார் ₹52 இலட்சம் கோடி இழப்பைச் சமாளிக்க இந்தியப் பொருளாதாரத்திற்கு 12 ஆண்டுகள் ஆகலாம் எனவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. பெட்ரோலுடன் 15% மெத்தனால் கலந்து 'M15 பெட்ரோலை' அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

**அ. இந்திய எண்ணெய் நிறுவனம் ☑**

ஆ. பாரத் பெட்ரோலியம்

இ. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்

ஈ. GAIL லிட்

✓ இந்திய எண்ணெய் நிறுவனமானது (IOC) M15 பெட்ரோலை அஸ்ஸாமின் டின்சுகியா மாவட்டத்தில் சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தியது. இதில் பெட்ரோலுடன் 15% மெத்தனால் கலக்கப்பட்டுள்ளது. திக்பாய் சுத்திகரிப்பு ஆலைக்கு அருகில் அஸ்ஸாம் பெட்ரோ கெமிக்கல் லிமிடெட்மூலம் மெத்தனால் தயாரிக்கப்படுகிறது. எத்தனால் தொடர்பான கடன்களை வழங்குதற்கும், திட்டங்களை நிறைவேற்றுதற்கும் அரசாங்கம் முன்னதாக காலக்கெடுவை நீட்டித்திருந்தது. வட்டி மானிய முறையில் அரசு நிதியுதவியும் வழங்குகிறது.

**4. 'RSF 2022 உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில்' இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 87

ஆ. 104

**இ. 150 ☑**

ஈ. 176



✓ RSF 2022 உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டின்படி, கடந்த ஆண்டு 142ஆவது இடத்திலிருந்த இந்தியா, இந்த ஆண்டு 150ஆவது இடத்திற்குச் சரிந்துள்ளது. இந்த ஆண்டு, நார்வே (1ஆவது) டென்மார்க் (2ஆவது) மற்றும் சுவீடன் (3ஆவது) ஆகியவை முதல் மூன்றிடங்களைப் பிடித்தன. 180 நாடுகள் மற்றும் பிராந்தியங்கள் இடம்பெற்றுள்ள இப்பட்டியலில் வடகொரியா கடைசி இடத்தில் உள்ளது. ரிப்போர்ட்டர்ஸ் சான்ஸ் பிராண்டியர்ஸ் (RSF) அல்லது ரிப்போர்ட்டர்ஸ் வித் பார்டர்ஸ் என்ற உலகளாவிய ஊடக கண்காணிப்பு நிறுவனம் ஒவ்வோர் ஆண்டும் இந்த அறிக்கையை வெளியிடுகிறது.

**5. 'பசுமை ஹைட்ரஜன் பணிக்குழு' என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதோடு எந்த நாட்டுடனான AI–துளிர் நிறுவல்களில் பணியாற்ற இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது?**

அ. UK

ஆ. அமெரிக்கா

**இ. ஜெர்மனி ☑**

ஈ. பிரான்ஸ்



✓ இந்தியாவும் ஜெர்மனியும் சமீபத்தில் இந்தோ–ஜெர்மன் பசுமை ஹைட்ரஜன் பணிக்குழுவின் கூட்டுப்பிரகடனத்தில் கையெழுத்திட்டன. இந்தியாவும் ஜெர்மனியும் செயற்கை நுண்ணறிவு (AI) துளிர் நிறுவல்கள் மற்றும் AI ஆராய்ச்சி மற்றும் நிலைத்தன்மை மற்றும் சுகாதாரப்பாதுகாப்பில் அதன் பயன்பாடு ஆகியவற்றில் கவனஞ்செலுத்தி இணைந்து செயல்பட ஒப்புக்கொண்டன. இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் அமைச்சர் ஜிதேந்திர சிங் தனது அதிகாரப்பூர்வ சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக ஜெர்மனி சென்றார்.

**6. இந்தியாவின் முதல் பசுமை வயல் தானிய அடிப்படையிலான எத்தனால் ஆலை தொடங்கப்பட்டுள்ள மாநிலம் / UT எது?**

அ. குஜராத்

ஆ. ஒடிசா

**இ. பீகார் ☑**

ஈ. தெலுங்கானா



✓ பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார், நாட்டின் முதல் பசுமை வயல் தானிய அடிப்படையிலான எத்தனால் ஆலையை பூர்னியாவில் திறந்து வைத்தார். பீகாரின் எத்தனால் உற்பத்தி & ஊக்குவிப்புக்கொள்கை – 2021–க்கு நடுவணரசு ஒப்புதலளித்த பிறகு, ₹105 கோடி செலவில் கிழக்கிந்தியா உயிரி–எரிபொருள் நிறுவனத்தால் உருவா–க்கப்பட்ட முதல் ஆலை இதுவாகும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் குறைந்தது 17 எத்தனால் ஆலைகளை திறக்க பீகார் மாநில அரசு முன்மொழிந்துள்ளது.

**7. உலகின் காடுகளின் நிலை (State of the World's Forests) என்ற அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?**

அ. NABARD

ஆ. சுற்றுச்சூழல், காடு மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**இ. உணவு மற்றும் உழவு அமைப்பு ☑**

ஈ. இயற்கைக்கான உலகளாவிய நிதியம்

✓ 'உலகின் காடுகளின் நிலை' அறிக்கை என்பது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) முதன்மையான வெளியீடாகும். உலக வனவியல் மாநாட்டின்போது வெளியிடப்பட்ட இவ்வறிக்கையின் 2022 பதிப்பின்படி, உலகம் கடந்த 30 ஆண்டுகளில் 420 மில்லியன் ஹெக்டேர்களை (mha) இழந்துள்ளது; அதன் மொத்த காட்டுப்பகுதியில் சுமார் 10.34 சதவீதமாகும். வளர்ந்து வரும் 250 தொற்றுநோய்களில் 15% காடுகளுடன் தொடர்புடையது என்றும் அந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

**8. எம்மாநிலத்தால் இந்தியாவின் முதல் 'பழங்குடியினர் சுகாதார கண்காணிப்பகம் (TriHOb)' அறிவிக்கப்பட்டுள்ளது?**

அ. மத்திய பிரதேசம்

ஆ. ஜார்கண்ட்

இ. குஜராத்

**ஈ. ஒடிஸா ☑**

✓ ஒடிஸா மாநில ST மற்றும் SC மேம்பாட்டுத்துறையானது புவனேசுவரில் உள்ள பிராந்திய மருத்துவ ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து பழங்குடியினர் சுகாதார கண்காணிப்பகத்தை (TriHOb) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. ஒடிஸாவில் பழங்குடியினரின் ஆரோக்கியத்தில் சமத்துவத்தை உறுதிசெய்வதில் இது நாட்டிலேயே முதன்முறையான வசதியாகும். ஒடிசாவின் பழங்குடியின மக்களின் நலங்குறித்த களஞ்சியத்தை 'TriHOb' நிறுவும். ஒடிஸா பழங்குடியினர் குடும்ப நலக்கணக்கெடுப்பும் தொடங்கப்பட்டுள்ளது.

**9. 2022 மே மாத பணவியல் கொள்கைக்குழுவின் கூட்டத்திற்குப் பிறகு, திருத்தப்பட்ட ரெப்போ விகிதம் என்ன?**



அ. 3.75%

ஆ. 4.25%

**இ. 4.40% ☑**

ஈ. 4.50%

✓ 2022 மே மாதத்தில் நடந்த பணவியல் கொள்கைக் குழுவின் திட்டமிடப்படாத கூட்டத்திற்குப்பிறகு, ரிசர்வ் வங்கி ரெப்போ விகிதத்தை 40 அடிப்படை புள்ளிகள் உயர்த்தி 4.40 சதவீதமாக மாற்றியது. அடுத்த கூட்டம் ஜூன் 6–8 ஆகிய தேதிகளில் திட்டமிடப்பட்டுள்ளது. 6 உறுப்பினர்களும் ஒருமனதாக இவ்விகித உயர்வுக்கு வாக்களித்தனர்; அதே நேரத்தில் இணக்கமான நிலைப்பாட்டை கடைபிடித்தனர். கடந்த மூன்று மாதங்களாக 6 சதவீதத்திற்கு மேல் இருந்த பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். ரொக்க கையிருப்பு விகிதமானது மே.21 முதல் 50 அடிப்படை புள்ளிகள் அதிகரித்து 4.5%ஆக உள்ளது.

**10. இந்தியாவின் முதல், 'Flow Chemistry Technology Hub (FCT Hub)' அமைக்கப்பட்டுள்ள நகரம் எது?**



அ. மும்பை

**ஆ. ஹைதராபாத் ☑**

இ. பெங்களூரு

ஈ. புது தில்லி

✓ இந்தியாவின் முதலாவது 'Flow Chemistry Technology Hub (FCT Hub)' ஹைதராபாத்தில் உள்ள டாக்டர் ரெட்டிஸ் இன்ஸ்டிடியூட் ஆப் லைப் சைன்ஸில் அமைக்கப்பட்டுள்ளது. தெலுங்கானா அரசு டாக்டர் ரெட்டிஸ் லேபரேட்டரீஸ் மற்றும் லாரஸ் லேப்ஸுடன் இணைந்து இந்தச் சிறப்பு மையத்தை நிறுவுவதற்கு ஆதரவளித்தது. R&D–இன்போது புளோ வேதியியல் நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் வகையிலான பயிற்சியை வழங்குவதற்கு அதிநவீன புளோ வேதியியல் உபகரணங்களை இந்த மையம் கொண்டுள்ளது.

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மே.11 – தேசிய தொழில்நுட்ப நாள்**

**கருப்பொருள்:** "Integrated Approach in Science and Technology for a Sustainable Future".

**2. 13 பேருக்கு, 'சௌர்ய சக்ர' விருதுகள்: குடியரசுத்தலைவர் வழங்கினார்**

பாதுகாப்பு படையினருக்கு விருது வழங்கும் விழாவில், 13 பேருக்கு 'சௌர்ய சக்ர' விருதுகளை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

தில்லியில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில் பாதுகாப்புப் படையினருக்கு முதலாம் கட்ட விருது வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் 13 பேருக்கு (6 பேருக்கு மரணத்துக்குப் பிறகு) 'சௌர்ய ச்கர' விருதுகளை பாதுகாப்புப் படைகளின் தலைமைத்தளபதியான குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் வழங்கினார். இதில் பணியின்போது மரணம் எய்திய 6 பேருக்கு விருது வழங்கப்படுகிறது. பணிக்காலத்தில் அதிகபட்ச அர்ப்பணிப்புடன் வீரதீரத்துடன் சிறப்பாக பணியாற்றியதை அங்கீகரித்து இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுதவிர, தற்போதைய இராணுவத்தலைமைத்தளபதி மனோஜ் பாண்டே உள்பட 14 பேருக்கு 'பரம் விசிஷ்ட சேவா' பதக்கங்களையும், 4 பேருக்கு 'உத்தம் யுத் சேவா' பதக்கங்களையும், 24 பேருக்கு 'அதிவிசிஷ்ட சேவா' பதக்கங்களையும் குடியரசுத்தலைவர் வழங்கினார்.

---

**3. மோடி எழுதிய புத்தகம் கீதை போன்றது**

புது தில்லியில் பிரதமர் மோடி எழுதிய 'மோடி@20 டிரீம்ஸ் மீட் டெலிவரி' என்ற புத்தகத்தை துணைக்குடியரசுத் தலைவர் வெங்கையா வெளியிட்டார்.

---

**4. 4 இந்திய புகைப்படக் கலைஞர்களுக்கு 'புலிட்ஸர்' விருது**

ஆப்கானிஸ்தானில் கொல்லப்பட்ட தனிஷ் சித்திக்கி உள்பட இந்தியாவைச் சேர்ந்த 4 புகைப்படக் கலைஞர்களுக்கு 'புலிட்ஸர்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைத் துறையில் சிறப்பாகச் செயல்படுவோருக்கும், எழுத்து, இசை, நாடக உலகில் முக்கியப் பங்காற்றுவோருக்கும் 'புலிட்ஸர்' விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டுக்கான விருதுப்பட்டியல் திங்கள்கிழமை அறிவிக்கப்பட்டது.

அதில், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவன புகைப்படக்கலைஞர்களான 4 இந்தியர்களுக்கு 'பீச்சர் போட்டோகிராபி' பிரிவின் கீழ் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. கரோனா பரவல் காலத்தில் இந்தியாவின் நிலைமையைப் புகைப்படங்கள் வாயிலாக வெளிக்கொணர்ந்ததற்காக அவர்களுக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தானிஷ் சித்திக்கி, அத்னான் அபிதி, சன்னா இர்ஷாத் மட்டூ, அமித் தவே ஆகியோர் 'புலிட்ஸர்' விருதைப் பெறுகின்றனர். கடந்த ஆண்டு ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும் அந்நாட்டு ராணுவத்தினருக்கும் இடையே நிகழ்ந்த போரைப் பதிவுசெய்வதற்காக அங்கு சென்றிருந்த தானிஷ் சித்திக்கி, தலிபான்களால் கொல்லப்பட்டார். அவர் 'புலிட்ஸர்' விருதைப் பெறுவது இது இரண்டாவது முறையாகும். ஏற்கனவே ரோஹிங்கியா அகதிகள் நிலை குறித்து பதிவு செய்ததற்காகக் கடந்த 2018–ஆம் ஆண்டில் அவர் 'புலிட்ஸர்' விருதைப் பெற்றிருந்தார். ஹாங்காங் போராட்டம் உள்ளிட்ட ஆசியா, ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளில் நிகழ்ந்த பல்வேறு விவகாரங்களைத் தனது புகைப்படங்கள் வாயிலாக சித்திக்கி பதிவு செய்துள்ளார்.

**சிறப்பு விருது:**

அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடந்த ஆண்டு ஜனவரி 6–ஆம் தேதி நிகழ்த்தப்பட்ட வன்முறையை சிறப்பாகப் பதிவு செய்ததற்காக 'தி வாஷிங்டன் போஸ்ட்' இதழுக்கு 'பொது சேவை' பிரிவின்கீழ் 'புலிட்சர்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்ச்சூழலிலும் மனந்தளராமல் செயல்பட்டுவரும் உக்ரைன் புகைப்படக்கலைஞர்களுக்கு சிறப்பு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. 1917–ஆம் ஆண்டு முதல் 'புலிட்ஸர்' விருதுகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. பத்திரிகையுலகின் புகழ்பெற்ற விருதான 'புலிட்ஸர்' விருதுகளை ஜோசப் புலிட்ஸர் என்னும் பத்திரிகை வெளியீட்டாளர் உருவாக்கினார். நியூயார்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகம் சுதந்திரமான குழு அமைத்து பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்து வருகிறது.

**1. தேசிய குடும்பநல ஆய்வின்படி (NFHS–5) இந்தியாவில் புதிய மொத்தக் கருவுறுதல் விகிதம் என்ன?**

அ. 2.4

ஆ. 2.2

**இ. 2.0 ☑**

ஈ. 1.9




- ✓ மத்திய நலவாழ்வு அமைச்சர் மன்சுக் மாண்டவியா, வதோதராவில் நடைபெற்ற, 'சுவஸ்த்ய சிந்தன் சிவிர்' நிகழ்வில், தேசிய குடும்பநல ஆய்வின் (NFHS–5) 5ஆவது சுற்று தேசிய அறிக்கையை வெளியிட்டார். NFHS–4 மற்றும் 5–க்கு இடையில் தேசிய அளவில் ஒரு பெண் ஈனும் சராசரி குழந்தைகளின் எண்ணிக்கையாக அளவிடப்படும் மொத்த கருவுறுதல் விகிதம் 2.2 இலிருந்து 2.0ஆகக்குறைந்துள்ளது. 2.1 என்ற 'Replacement Level of Fertility' விகிதத்துடன் இந்தியாவில் ஐந்து மாநிலங்கள் மட்டுமே உள்ளன. இதில் பீகார் (2.98), மேகாலயா, உத்தரபிரதேசம், ஜார்கண்ட் மற்றும் மணிப்பூர் ஆகியவை அடங்கும்.

**2. ஜம்மு & காஷ்மீரின் தேர்தல் வரைபடத்தை மாற்றியமைத்த எல்லை நிர்ணய ஆணையத்தின் தலைவர் யார்?**

**அ. நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் ☑**

ஆ. நீதிபதி சதாசிவம்

இ. நீதிபதி ரஞ்சன் கோகாய்

ஈ. சுஷில் சந்திரா



- ✓ ஜம்மு மற்றும் காஷ்மீரின் தேர்தல் வரைபடத்தை மறுவடிவமைப்பு செய்த எல்லை நிர்ணய ஆணையம், உச்சநீதி மன்றத்தின் ஓய்வுற்ற நீதிபதியான ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையிலானது. தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா மற்றும் மாநிலத் தேர்தல் ஆணையர் கே கே சர்மா ஆகியோர் இதன் அதிகாரபூர்வ உறுப்பினர்களாக உள்ளனர். காஷ்மீருக்கு 47 இடங்களும், ஜம்முவுக்கு 43 இடங்களும் ஒதுக்கப்பட்டு, எல்லை நிர்ணய ஆணையம் தனது இறுதி அறிக்கையை வெளியிட்டது.
- ✓ ஐந்து நாடாளுமன்றத் தொகுதிகள் உள்ளன. அதில் ஒவ்வொன்றும் சமமான எண்ணிக்கையிலான 18 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. அதில 9 இடங்கள் பட்டியல் பழங்குடியினருக்கு (ST) ஒதுக்கப்பட்டன.

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற சிந்தியா ரோசன்ஸ்வீக், கீழ்க்காணும் எந்த மதிப்புமிக்க விருதைப் பெற்றார்?**

**அ. உலக உணவு பரிசு ☑**

ஆ. புக்கர் பரிசு

இ. புலிட்சர் பரிசு

ஈ. ஏபெல் விருது



- ✓ NASAஇன் கோடார்ட் இன்ஸ்டிடியூட் பார் ஸ்பேஸ் ஸ்டடீஸின் (GISS) மூத்த ஆராய்ச்சி அறிவியலாளரான சிந்தியா ரோசன்ஸ்வீக், உலக உணவு பரிசு அறக்கட்டளையின் '2022 உலக உணவு பரிசைப்' பெற்றார். உலக உணவு பரிசு என்பது 'உணவு மற்றும் உழவிற்கான நோபல் பரிசு' எனக் கருதப்படும் ஒரு மதிப்புமிக்க விருது. ரோசன்ஸ்வீக், காலநிலை மற்றும் உணவு முறைகளுக்கு இடையேயான உறவைப் புரிந்துகொள்வதற்கும், எதிர்காலத்தில் அவை எவ்வாறு மாறும் என்பதை முன்னறிவிப்பதற்கும் அவர் மேற்கொண்ட ஆராய்ச்சிக்காக இந்தச் சிறப்புமிக்கு விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**4. இந்தியாவில் காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பு முடிவுகளை வெளியிடும் நிறுவனம் எது?**

**அ. தேசிய புள்ளியியல் அலுவலகம் ☑**

ஆ. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

இ. NITI ஆயோக்

ஈ. உலக வங்கி - இந்தியா

✓ காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பின்கீழ், தேசிய புள்ளியியல் அலுவலகமானது வேலையின்மை விகிதம், தொழிலாளர் எண்ணிக்கை விகிதம் (WPR), தொழிலாளர் படை பங்கேற்பு விகிதம் (LFPR) போன்ற தொழிலாளர் குறிகாட்டிகளின் மதிப்பீடுகளை வழங்கும் காலாண்டு அறிக்கையை வெளியிடுகிறது. 2021 அக்டோபர்–டிசம்பர் பதிப்பின்படி, நகர்ப்புறங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆட்களுக்கான வேலையின்மை விகிதம் முந்தைய ஆண்டின் காலாண்டில் 10.3 சதவீதத்திலிருந்து 8.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2021 ஜூலை–செப்டம்பரில், நகர்ப்புறங்களில் இது 9.8 சதவீதமாக இருந்தது.

**5. இந்தியாவின் முதல் 'Regional Rapid Transit System (RRTS)'ஐ வடிவமைத்துள்ள நிறுவனம் எது?**

அ. DRDO

ஆ. HAL

**இ. அல்ஸ்டோம் ☑**

ஈ. சீமென்ஸ்

✓ தில்லி மற்றும் மீரட் இடையேயான இந்தியாவின் முதலாவது பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பு (RRTS), ஹைதராபாத்தில் உள்ள அல்ஸ்டாம் வடிவமைத்து குஜராத்தின் சாவ்லியில் தயாரிக்கப்படுகிறது. இந்த அமைப்பின் முதல் இரயில் பெட்டி தில்லி–காசியாபாத்–மீரட் RRTS கட்டம்–1–க்காக தேசிய தலைநகர மண்டலப் போக்குவரத்து கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தியாவின் முதல் அரை அதிவேக பிராந்திய பயணிகள் இரயிலான இது மணிக்கு 180 கிமீ வேகத்தில் செல்லும்.

**6. நான்காவது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுக்கள் – 2022–க்கான சின்னம் என்ன?**



அ. அப்பு

**ஆ. தாகத் ☑**

இ. வீர்

ஈ. கம்பீர்

✓ மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், 4ஆவது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியின் அதிகாரப்பூர்வ இலச்சினை, அதிகாரப்பூர்வ ஜெர்சி மற்றும் சின்னமான, 'தாகத்'ஐ அறிமுகப்படுத்தினார். ஜூன் 4 முதல் ஜூன் 13 வரை பஞ்ச்குலா மற்றும் பிற நகரங்களில் நான்காவது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளை ஹரியானா நடத்துகிறது. பாரம்பரிய விளையாட்டுகளைப் பாதுகாக்க வலியுறுத்தும் வகையில் கட்கா, களரிபயட்டு, தங்–டா, மல்லகம்பா மற்றும் யோகாசனம் ஆகிய ஐந்து பாரம்பரிய விளையாட்டுகள் வரவிருக்கும் கேலோ இந்தியா போட்டிகளின் ஒருபகுதியாக இருக்கும்.

**7. 'PM மித்ரா' திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

**அ. ஜவுளி அமைச்சகம் ☑**

ஆ. உள்துறை அமைச்சகம்

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. வெளியுறவு அமைச்சகம்

- PM Mega Integrated Textile Regions மற்றும் Apparel Park (PM MITRA) மத்திய ஜவுளி அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'PM MITRA Park' ஆனது ஓர் ஒருங்கிணைந்த ஜவுளி மதிப்புச் சங்கிலியை ஒரே இடத்தில் உருவாக்கி, போக்குவரத்துச் செலவைக் குறைக்கும். PM MITRA பூங்காக்கள் திட்டம்பற்றிய தேசிய மாநாடு ஜவுளி அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. 13 மாநில அரசுகள் அந்தந்த மாநிலங்களில் PM MITRA பூங்காக்கள் அமைப்பதற்கான தங்களது திட்டங்களை முன்வைத்தன.

### 8. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'ராக்கிகர்ஹி' என்ற ஹரப்ப தளம் அமைந்துள்ள மாநிலம் எது?



அ. மத்திய பிரதேசம்

ஆ. ஜார்கண்ட்

இ. குஜராத்

**ஈ. ஹரியானா ☑**

- இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் கூற்றுப்படி, ஹரியானாவின் ஹிசாரில் அமைந்துள்ள ராக்கிகர்ஹியில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய அகழ்வாராய்ச்சியில் தெரு அமைப்பு, பரந்த தளவமைப்புகள்கொண்ட வீடுகள் மற்றும் வடிகால் அமைப்பு ஆகியவை வெளிப்பட்டன. இது 5,000 ஆண்டுகள் பழமையான ஹரப்ப தளமும் 2020 பட்ஜெட் உரையில் அறிவிக்கப்பட்ட ஐந்து தளங்களுள் ஒன்றுமாகும். இத்தளம் ஹரப்ப காலத்தின் மிகப்பெரிய தளமாகவும் கருதப்படுகிறது.

### 9. சமீப செய்திகளில் இடம்பெற்ற ஜான் லீ, எந்த நாட்டின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?



**அ. ஹாங்காங் ☑**

ஆ. தைவான்

இ. தென் கொரியா

ஈ. மலேசியா

- ஜான் லீ என்பவர் ஹாங்காங்கின் அடுத்த தலைவராக, இரகசிய வாக்கெடுப்பில் வாக்களித்த தேர்தல் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்குழுமத்தில் சுமார் 1,500 பேர் பெய்ஜிங்கிற்கு ஆதரவான உறுப்பினர்கள் இருந்தனர். முன்னதாக ஹாங்காங்கின் தலைமைச் செயலாளராக இருந்த லீ, ஓய்வுறும் தலைமை நிர்வாகி கேரி லாம்க்கு அடுத்து தனது ஐந்தாண்டு பதவிக்காலத்தைத் தொடங்குவார். ஹாங்காங் என்பது சீனாவின் ஒரு சிறப்பு நிர்வாகப் பகுதியாகும்; இது 1997–இல் இங்கிலாந்தின் வசமிருந்து சீன ஆட்சியின் வசம் வந்தது.

### 10. 'தலசீமியா' என்பது உடலின் எதனுடன் தொடர்புடைய நோயாகும்?



அ. நுரையீரல்

ஆ. கல்லீரல்

**இ. இரத்தம் ☑**

ஈ. இதயம்

- உலக தலசீமியா நாளானது ஆண்டுதோறும் மே.8 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது, இந்த நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் போராட்டத்தை உணர்த்தவுமாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. தலசீமியா என்பது ஒரு மரபணு இரத்தக்கோளாறு ஆகும்; இது உடலைப் போதுமான ஹீமோகுளோபினை உருவாக்க அனுமதிப்பதில்லை.
- "Be Aware.Share. Care: Working with the global community as one to improve thalassemia knowledge" என்பது இந்த ஆண்டு (2022) உலக தலசீமியா நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கேன்ஸ் படவிழாவில் 'ராக்கெட்ரி' தமிழ்ப்படம் திரையிடப்படுகிறது. மலையாளம், மராத்தி, இந்தி, மிஷிங் மொழித் திரைப்படங்களும் திரையிடப்படவுள்ளன.**

கேன்ஸ் திரைப்படவிழாவில் திரையிடப்படவுள்ள திரைப்படங்களின் பட்டியலை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதில் மாதவன் இயக்கி நடித்துள்ள 'ராக்கெட்ரி' என்னும் படமும் ஒன்றாகும். தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ள 'ராக்கெட்ரி – தி நம்பி எபெக்ட்' என்னும் திரைப்படம் உலக பிரீமியர் காட்சியாக நடைபெறும். மராத்தி மொழிப்படமான கோதாவரி, இந்தி மொழியைச் சேர்ந்த ஆல்பா பீட்டா காமா, மிஷின் மொழியைச் சேர்ந்த பூம்பா ரைட், இந்தி, மராத்தி, மொழியைச் சேர்ந்த துயின், மலையாள மொழிப்படமான 'ட்ரீ புல் ஆப் பேரட்ஸ்' ஆகிய படங்களும் கேன்ஸ் படவிழாவில் திரையிடப்படவுள்ளன.

---

**2. நாட்டின் முதலாவது 'அமிர்த நீர்நிலை'யை மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி நாளை தொடங்கிவைப்பார்**

நாட்டின் முதலாவது 'அமிர்த நீர்நிலை'யை 2022 மே.13 அன்று மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வியும், உத்தரபிரதேச ஜல்சக்தி அமைச்சர் ஸ்வதந்த்ர தேவ் சிங்கும் ராம்பூரின் (உபி) பட்வாய் என்ற இடத்தில் தொடங்கிவைப்பார்கள். பட்வாயின் இந்த 'அமிர்த நீர்நிலை' சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மற்றும் தண்ணீர் சேமிப்புக்கு உதவுவது மட்டுமின்றி அருகிலுள்ள பகுதி மக்களுக்கான ஈர்ப்பு சக்தியாகவும் இருக்கும் என்று நக்வி தெரிவித்தார்.

---

**3. தேசத்துரோக சட்டத்துக்கு இடைக்கால தடை: உச்சநீதிமன்றம் உத்தரவு**

தேசத்துரோக சட்டத்தின்கீழ் வழக்குகள் பதிய இடைக்காலத்தடை விதித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தச் சட்டத்தின்கீழ் விசாரணைகள் தொடர்வதையும், கடும் நடவடிக்கைகள் எடுப்பதையும் மத்திய, மாநில அரசுகள் கைவிட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட தேசத் துரோக சட்டப் பிரிவை மறு ஆய்வு செய்ய உள்ளதாக மத்திய அரசு தெரிவித்ததையடுத்து, இந்த உத்தரவை உச்சநீதிமன்றம் பிறப்பித்தது.

உத்தரவின் முக்கிய அம்சங்கள்

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 124ஏ என்ற தேசத் துரோக சட்டப் பிரிவு தற்போதைய சமூக சூழலுக்கு ஏற்றதாக இல்லை; அந்தக் கடுமையான சட்டப்பிரிவு மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற மத்திய அரசின் கருத்தை ஏற்று உச்சநீதிமன்றம் பிறப்பித்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பின் முக்கிய அம்சங்கள்:

– ஒருபுறம் அரசின் பாதுகாப்பு நலன்கள் மற்றும் ஒருமைப்பாடு; மறுபுறம் குடிமக்களின் சிவில் உரிமைகளைக் கவனத்தில்கொண்டு இரண்டையும் சமநிலைப்படுத்தும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

– இந்த உத்தரவைப் பிறப்பிக்கும்போது, மகாராஷ்டிரத்தில் ஹனுமன் சாலீசா ஓதும் விவகாரத்தில் எடுக்கப்பட்டது போன்று, இச்சட்டப்பிரிவு தவறாகப் பயன்படுத்தப்படும் உதாரணங்களை அட்டர்னி ஜெனரல் கேகே வேணுகோபால் சுட்டிக்காட்டியது கவனத்தில் கொள்ளப்பட்டது.

– சட்டப்பிரிவின் மீதான மறு ஆய்வு முடியும் வரை, மத்திய – மாநில அரசுகள் இந்தச் சட்டப்பிரிவைப் பயன்படுத்தாது என எதிர்பார்க்கிறோம்.

– இந்த விவகாரத்தில் கடந்த 2021 மே 31–ஆம் தேதி சில மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு, அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை தொடரும்.

– 124ஏ சட்டப்பிரிவு மறு ஆய்வு செய்யப்படும் வரை தேசத் துரோக சட்டப் பிரிவின் கீழ் புதிதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவும், விசாரணையைத் தொடரவும், கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவும் மத்திய அரசுக்கு தடை விதிக்கப்படுகிறது.

– ஒருவேளை இந்தச்சட்டப்பிரிவின்கீழ் புதிய வழக்குகள் பதிவு செய்யப்பட்டால், பாதிக்கப்படும் நபர்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற சுதந்திரம் அளிக்கப்படுகிறது.

– இந்தச் சட்டப்பிரிவின்கீழ் நிலுவையில் உள்ள விசாரணைகள், மேல்முறையீடு மற்றும் வழக்குகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன.

– குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எந்தவித பாரபட்சமும் ஏற்படாது என்று நீதிமன்றங்கள் கருதினால், பிற பிரிவுகள் தொடர்பான வழக்கு விசாரணையைத் தொடரலாம்.

– தேசத்துரோக சட்டப்பிரிவு தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில் முன்மொழியப்பட்ட உத்தரவை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு வழங்க மத்திய அரசுக்கு அனுமதிக்கப்படுகிறது என்றும் தனது உத்தரவில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

---

### 4. 12 ஊராட்சிகளுக்கு மத்திய அரசு விருதுகள்: முதல்வர் மு க ஸ்டாலின் பாராட்டு

மத்திய அரசு விருதுகளைப்பெற்ற தமிழகத்தைச்சேர்ந்த 12 ஊராட்சிகளின் தலைவர்களை முதல்வர் மு க ஸ்டாலின் நேரில் அழைத்துப் பாராட்டினார்.

ஒவ்வோர் ஆண்டும் தேசிய அளவில் சிறப்பாகச் செயல்படும் ஊராட்சிகளுக்கு மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் விருதுகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் மூன்றடுக்கு ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றிய விருது திருச்சி மாவட்டம்–மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், ராமநாதபுரம் மாவட்டம்–மண்டபம் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், கிராம ஊராட்சிக்கான விருது திண்டுக்கல் மாவட்டம் அக்கரைப்பட்டி, கரூர் மாவட்டம் மண்மங்கலம், மதுரை மாவட்டம் சின்னப்பட்டி, கன்னியாகுமரி மாவட்டம் அத்திக்காட்டுவிளை, கிருஷ்ணகிரி மாவட்டம் கங்கலேரி, புதுக்கோட்டை மாவட்டம் கட்டாத்தி ஆகிய ஊராட்சிகளுக்கும், சிறந்த கிராம சபைக்கான விருது ராமநாதபுரம் மாவட்டம், சாத்தனூர் கிராம ஊராட்சிக்கும், கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்துக்கான விருது சிவகங்கை மாவட்டம் துவார் கிராம ஊராட்சிக்கும், குழந்தைகள் நேய கிராம ஊராட்சிக்கான விருது நீலகிரி மாவட்டம் குஞ்சப்பனை கிராம ஊராட்சிக்கும் விருதுகள் அளிக்கப்பட்டன.

---

### 5. ஆசிய தேர்தல் ஆணையங்கள் சங்கத்தின் தலைமையாக இந்தியா ஒருமனதாக தேர்வு

2022 –24–ஆம் ஆண்டுகளுக்கான ஆசிய தேர்தல் ஆணையங்கள் சங்கத்தின் தலைமையாக இந்திய தேர்தல் ஆணையம் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது முறையாக இந்தியா இந்தத் தலைமைப் பொறுப்பை ஏற்கிறது. 2011–13–ஆம் ஆண்டுகளில் இந்த அமைப்பின் துணைத் தலைமைப் பொறுப்பையும் இந்தியா ஏற்றிருந்தது.

20 ஆசிய நாடுகளின் தேர்தல் நிர்வாக அமைப்புகள் உறுப்பினர்களாகக் கொண்ட இந்த சங்கத்தின் நிர்வாகக் குழு, பொதுக்குழுக் கூட்டம் கடந்த மே 7– ஆம் தேதி பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்தியா தேர்வு செய்யப்பட்டது. இந்தச் சங்கத்துக்கு தற்போதைய தலைமை ஏற்று இருந்த மணிலா தேர்தல் ஆணையம், இப்பொறுப்பிலிருந்து விலகிச் செல்கிறது. மேலும், இந்தச் சங்கத்தின் நிர்வாகக் குழுவில் ரஷ்யா, உஸ்பெகிஸ்தான், இலங்கை, மாலத்தீவுகள், தைவான் ஆகிய நாடுகள் சங்கத்தில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

மணிலாவில் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் பிரதிநிதிகளாக இந்திய தேர்தல் ஆணையத்தின் துணைத் தேர்தல் ஆணையர் நிதிஷ் வியாஸ், மணிப்பூர் தலைமைத் தேர்தல் அதிகாரி ராஜேஷ் அகர்வால், ராஜஸ்தான் தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீன் குப்தா ஆகிய 3 உறுப்பினர் பிரதிநிதிகள்

குழு பங்கேற்றது. மணிலா கூட்டத்தில் 2022– 23–ஆம் ஆண்டுக்கான பணித் திட்டத்தையும், 2023 –24–ஆம் ஆண்டுக்கான எதிர்கால செயல்திட்டங்களையும் நிர்வாகக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், இக்கூட்டத்தில் இந்தியா சார்பில் தேர்தல்களில் பாலின பிரச்னைகள் என்பதற்கான அறிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

அனைவரையும் உள்ளடக்கிய, பங்கேற்புமிக்க தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல், அரசியல் நடைமுறைகளில் உள்ள தடைகளை நீக்குவதற்கு இந்தியா மேற்கொண்ட பல்வேறு ஒருங்கிணைந்த இலக்குகள் ஆகியவை இந்த அறிக்கையில் உறுப்பு நாடுகள் பயனடையும் வகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைய வட்டாரங்களில் கூறப்பட்டது. பிலிப்பைன்சின் மணிலாவில் 1997 ஜனவரி 26 – 29–இல் நடைபெற்ற 21–ஆம் நூற்றாண்டில் ஆசிய தேர்தல்கள் குறித்த கருத்தரங்கில் இதுபோன்ற ஆசிய சங்கம் அமைப்பதற்கான யோசனைகள் உருவாகி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில், 1998–இல் ஆசிய தேர்தல் ஆணையங்களின் சங்கம் அமைக்கப்பட்டது.

ஆசிய நாடுகளில் தேர்தல்கள் சிறப்பான செயல் முறையைக் கொண்டதாக உருவாக்கும் நோக்கத்துடனும், வெளிப்படையான தேர்தல்களை மேம்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி விவாதித்து செயல்பட, நாடுகளுக்கிடையேயான சிறந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக ஒரு கட்சி சார்பற்ற ஜனநாயக மன்றத்தை வழங்குவதற்காக இது ஏற்படுத்தப்பட்டது. மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் கீழ் உள்ள ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மைக்கான இந்திய சர்வதேச நிறுவனத்தின் (ஐஐஐடிஇஎம்) மூலம் பல்வேறு ஆசிய தேர்தல் ஆணையங்களின் சங்க உறுப்பு நாடுகளுக்கு அவ்வப்போது திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டங்களை நடத்தப்பட்டு வரப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

**1. அண்மையில் மாட்ரிட் ஓப்பன் பட்டத்தை வென்ற கார்லோஸ் அல்கராஸ் சார்ந்த நாடு எது?**



அ. பிரான்ஸ்

**ஆ. ஸ்பெயின் ☑**

இ. சுவிச்சர்லாந்து

ஈ. ரஷ்யா

✓ 19 வயதான ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ், மாட்ரிட் ஓப்பன் உட்பட 2 'மாஸ்டர்ஸ் 1000' பட்டங்களைப் பெற்றுள்ளார். முந்தைய சுற்றுகளில் ரஃபேல் நடால் மற்றும் நோவக் ஜோகோவிச் ஆகியோரை வீழ்த்திய அல்கராஸ், மாட்ரிட் ஓப்பன் இறுதிப்போட்டியில் நடப்புச் சாம்பியனான அலெக்சாண்டர் ஸ்வெரேவை வீழ்த்தினார். ஏப்ரல் மாதம் மியாமி ஓப்பனில் வென்றது உட்பட இந்த ஆண்டில் இது அவரது நான்காவது பட்டமாகும்.

✓ 2007இல் டேவிட் நல்பாண்டியனுக்குப் பிறகு, ஒரே 'மாஸ்டர்ஸ் 1000' நிகழ்வில் மூன்று முதல் நான்கு வீரர்களைத் வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமைக்குரியவராகவும் அவர் ஆனார்.

**2. நாட்டிலேயே அரசுப்பள்ளிகளில் காலை உணவு வழங்கும் முதல் மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு ☑**

ஆ. பஞ்சாப்

இ. கேரளா

ஈ. மேற்கு வங்காளம்

✓ அரசுப்பள்ளிகளில் மதிய உணவுடன் காலைச் சிற்றுண்டியும் வழங்கும் நாட்டின் முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மாநிலத்தில் 1–5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவித்தார். மாநிலத்தில் உள்ள ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள் குறித்த அரசின் பொது சுகாதார ஆய்வின் அடிப்படையில் இச்சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் உள்ளது. மதிய உணவுத்திட்டத்தில் தமிழ்நாடு, இந்தியாவுக்கே முன்னோடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**3. $100 பில்லியன் டாலர் ஆண்டு வருவாயைத் தாண்டிய முதல் இந்திய நிறுவனம் எது?**

அ. அதானி தொழிற்சாலைகள்

**ஆ. ரிலையன்ஸ் தொழிற்சாலைகள் ☑**

இ. TATA தொழிற்சாலைகள்

ஈ. பியூச்சர் நிறுவனங்கள்

Reliance
Industries Limited

✓ முகேஷ் அம்பானியின் ரிலையன்சு தொழிற்சாலைகள் நிறுவனம், $100 பில்லியன் டாலர் வருடாந்திர வருவாயைத் தாண்டிய முதல் இந்திய நிறுவனம் என்ற பெருமையைப் பெற்றது. 2021–22 நிதியாண்டில், ரிலையன்ஸ் ₹7.92 இலட்சம் கோடி ($102 பில்லியன்) வருவாயில் ₹60,705 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது. அதிக எண்ணெய் சுத்திகரிப்பு, தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் சேவைகளின் வளர்ச்சி மற்றும் வலுவான சில்லறை வணிகம் ஆகியவற்றின் காரணமாக வருவாய் அதிகரித்தது. அகலக்கற்றை சந்தாதாரர்களின் உயர்வு, ஆன்லைன் சில்லறை விற்பனை மற்றும் புதிய எரிசக்தி முதலீடு ஆகியவையும் இந்த வருவாய் உயர்வுக்குக் காரணமாகும்.

**4. LIC–இன் 3.5% பங்குகளை விற்பதன்மூலம், அரசு திரட்டும் மொத்தத் தொகையின் அளவு எவ்வளவு?**

அ. ரூ.64,000 கோடி ஆ. ரூ.45,000 கோடி

இ. ரூ.36,000 கோடி **ஈ. ரூ.21,000 கோடி ☑**

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA

✓ ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) வழங்கும் இந்தியாவின் மிகப்பெரிய பொதுப்பங்கீடு வழங்கலின் (IPO) அனைத்து வகைகளின் கீழும் முழுமையாக முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. காப்பீட்டுதாரர்களுக்கான பகுதி 6.11 மடங்கும், ஊழியர்களுக்கான பகுதி 4.39 மடங்கும், சில்லறை முதலீட்டாளர்களுக்கான பகுதி 1.99 மடங்கும், நிறுவனமற்ற முதலீட்டாளர்களுக்கான பகுதி 2.91 மடங்கும், தகுதிவாய்ந்த நிறுவன வாங்குபவர்களுக்கான பகுதி (QIB) 2.83 மடங்கும் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் முன்னணி காப்பீட்டு நிறுவனத்தில் 3.5 சதவீத பங்குகளை விற்பதன்மூலம் அரசாங்கம் ₹21,000 கோடியை திரட்டும். இது அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட அசல் இலக்கில் மூன்றில் ஒருபங்கு மட்டுமே.

**5. NATO சைபர் பாதுகாப்பு குழுவில் இணைந்த முதல் ஆசிய நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. தென் கொரியா ☑**

இ. இலங்கை

ஈ. வங்காளதேசம்

✓ தென் கொரியாவின் தேசிய புலனாய்வு சேவை NATOஇன் இணையவெளிப் பாதுகாப்பு குழுவில் இணைந்த முதல் ஆசிய நாடாகும். தென் கொரியாவானது சீன மற்றும் வட கொரியாவின் சைபர் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டுள்ளது. NATOஇன் Cooperative Cyber Defence Centre of Excellence (CCDCOE)–க்கு பங்களிக்கும் பங்கேற்பாளராக NIS ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது, கடந்த 2008–இல் எஸ்டோனியாவில் நிறுவப்பட்ட இணையவெளிப் பாதுகாப்பு மையமாக இருந்தது. அது இணையவெளிப்பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளில் கவனஞ்செலுத்துகிறது.

**6. சமீப செய்திகளில் இடம்பெற்ற பல்லுயிர் ஈரநிலமான சாவா ஏரி அமைந்துள்ள நாடு எது?**



அ. இந்தியா


ஆ. இலங்கை

**இ. ஈராக் ☑**

ஈ. ஆப்கானிஸ்தான்

✓ ஈராக்கின் சமாவா நகரத்துக்கு அருகில் அமைந்துள்ள சாவா ஏரி, மனித செயல்பாடு மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக அழிந்துவிட்டது. ஐந்து சதுர கிலோமீட்டர் பரப்பளவுகொண்ட இவ்வேரி 2014 முதல் வறண்டு வருகிறது. இதற்கு காலநிலை மாற்றமும் வெப்பநிலை அதிகரிப்பும் காரணமாகும். இந்தப் பகுதியில் வேளாண்மைக்காக சட்ட விரோதமாகத் தோண்டப்பட்ட ஆயிரம் கேணிகளும் ஏரிக்கருகே கட்டப்பட்ட சிமெண்ட் & உப்பு தொழிற்சாலைகளும் குறிப்பிடத்தக்க அளவு ஏரி நீரை அங்கிருந்து வெளியேற்றியுள்ளன.

**7. நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க இராயல் தங்கப்பதக்கமானது கீழ்காணும் எந்த இந்திய கட்டடக் கலைஞருக்கு வழங்கப்பட்டுள்ளது?**



**அ. பாலகிருஷ்ண தோஷி ☑**

ஆ. ஷீலா ஸ்ரீ பிரகாஷ்

இ. பிருந்தா சோமயா

ஈ. ஹபீஸ் காண்ட்ராக்டர்

✓ இராயல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பிரிட்டிஷ் ஆர்கிடெக்ட்ஸ் (RIBA) வழங்கும் உலகின் மிகவுயரிய கட்டடக்கலை விருதுகளுள் ஒன்றான மதிப்புமிக்க இராயல் தங்கப்பதக்கம், நடப்பு 2022ஆம் ஆண்டில் பழம்பெரும் கட்டடக் கலைஞர் பாலகிருஷ்ணா தோஷிக்கு வழங்கப்பட்டுள்ளது. 94 வயதான அவர், இவ்விருதைப் பெறும் ஒரே இந்தியர் ஆவார். "கட்டடக்கலைக்கான நோபல் பரிசு" என்று குறிப்பிடப்படும் 'இராயல் தங்கப்பதக்கம்' மற்றும் 'பிரிட்ஸ்கர் கட்டடக்கலை பரிசு' என இரண்டையும் பெற்ற முதல் நபர் இவராவார்.

**8. யூன் சுக்–யோல் என்பவர் பின்வரும் எந்த நாட்டின் புதிய அதிபராவார்?**



அ. தென் கொரியா ☑

ஆ. பிலிப்பைன்ஸ்

இ. வியட்நாம்

ஈ. தாய்லாந்து

✓ தென் கொரியாவின் புதிய அதிபரான யூன் சுக்–யோல் சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலில் மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார். வழக்கறிஞரான அவர், முன்னாள் அதிபர் பார்க் கியூன்–ஹை அதிகார துஷ்பிரயோகம் செய்ததற்காக அவருக்கு தண்டனை வாங்கித்தருவதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தார். நாட்டின் சில உயர்மட்ட ஊழல்கள் மீதான விசாரணையை அடுத்து அவர் மக்களின் கவனத்தைப் பெற்றார்.

**9. 'டிரோன்கள் பற்றிய எக்ஸ்பீரியன்ஸ் ஸ்டுடியோ' கீழ்காணும் எந்த நிறுவனத்தில் தொடங்கப்பட்டுள்ளது?**

அ. DRDO

ஆ. ISRO



**இ. NITI ஆயோக் ☑**

ஈ. நியூ ஸ்பேஸ் இந்தியா

✓ பொது சேவைகளில் ஒருங்கிணைந்த சூழலை மேம்படுத்த, டிரோன்களை பயன்படுத்தும் NITI ஆயோக்கின் பயன்பாடு மற்றும் பயிற்சி ஸ்டுடியோவை மத்திய சிவில் விமானப்போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தொடங்கிவைத்தார். அப்போது, NITI ஆயோக் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்துடன் இணைந்து நடத்தும் 'Drones for Social Impact Competition' மற்றும் 'Robotics Workshop and Competition' என்ற இரண்டு சவால்களையும் மத்திய அமைச்சர் அறிமுகப்படுத்தினார்.

**10. ஆண்டுதோறும், 'சர்வதேச தாவர நல நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. மே.10



**ஆ. மே.12 ☑**

இ. மே.14

ஈ. மே.15

✓ தாவர நலத்தைப் பாதுகாப்பதில் உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐநா அவை மே.12–ஐ சர்வதேச தாவர நல நாளாக நியமித்தது. ஐநா அவையின் கூற்றுப்படி, தாவர நலத்தைப் பாதுகாப்பது பசியை ஒழிக்கவும், வறுமையைக்குறைக்கவும், பல்லுயிர் மற்றும் சூழலைப் பாதுகாக்கவும், பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கவும் உதவும். நாம் உண்ணும் உணவில் 80% மற்றும் நாம் சுவாசிக்கும் ஆக்ஸிஜனில் 98% தாவரங்களிடமிருந்து பெறப்படுகிறது. ஆண்டுதோறும் தாவர பூச்சிகள் மற்றும் நோய்களால் 40% உணவுப்பயிர்கள் இழக்கப்படுகின்றன.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தலைமைத் தேர்தலாணையராக இராஜீவ் குமார் நியமனம்**

நாட்டின் புதிய தலைமைத் தேர்தலாணையராக இராஜீவ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வரும் 15ஆம் தேதி தலைமைத் தேர்தலாணையராக பதவியேற்கவுள்ளார்.

இந்திய தலைமைத் தேர்தல் ஆணையராக தற்போது இருந்து வரும் சுஷில் சந்திராவின் பதவிக்காலம் வரும் 14ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்த நிலையில், புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக தற்போது மூத்த தேர்தல் ஆணையராக இருக்கும் இராஜீவ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் பிறப்பித்துள்ளார். இதை சட்ட அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

---

**2. மாபெரும் கருந்துளையின் முதல் புகைப்படம் வெளியீடு**

நமது பால்வெளி மண்டலத்தில் காணப்படும் மாபெரும் கருந்துளையின் (பிளாக் ஹோல்) முதல் புகைப்படத்தை வானியலாளர்கள் வெளியிட்டுள்ளனர். சூரியனைவிட 40 லட்சம் மடங்கு பெரிதாக இந்தக் கருந்துளை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, 'தி அஸ்ட்ரோபிசிக்கல் ஜர்னல் லெட்டர்ஸ்' என்ற அறிவியல் இதழில் வெளியான ஆய்வறிக்கையில், நமது பால்வெளி மண்டலத்தின் மையப் பகுதியில் என்ன நடக்கிறது என்பது பற்றிய நமது புரிதலை மேம்படுத்தவும், கருந்துளைகள் எவ்வாறு அவற்றின் சுற்றுப்புறத்துடன் தொடர்புகொள்கின்றன என்பது பற்றிய புதிய நுண் அறிவையும் இந்தக் கண்டுபிடிப்பு வழங்குகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருந்துளைக்கு 'ஸாஜிட்டேரியஸ்–ஏ' (SGR–A) எனப்பெயரிடப்பட்டுள்ளது. உலகளாவிய ஆராய்ச்சிக் குழு இணைந்து, உலகம் முழுவதுமுள்ள வானொலி தொலைநோக்கிகளின் தரவுகளின் அடிப்படையில் இந்தக் கருந் துளையின் புகைப்படத்தை உருவாக்கியுள்ளன. ஓர் இருண்ட மையத்தைச் சுற்றி சிவப்பு, மஞ்சள், வெள்ளை நிறங்களின் தெளிவற்ற ஒளிரும் வடிவத்தை இந்தப் புகைப்படம் காட்டுகிறது. நட்சத்திரங்கள் செயலிழக்கும்போது கருந்துளைகளாக உருமாறுகின்றன. இதன் ஈர்ப்புவிசை மிகவதிகமாகும். ஒளி உட்பட எதுவும் கருந்துளையிலிருந்து தப்பமுடியாது.

---

**1. 2022–2024–க்கான ஆசிய தேர்தல் அதிகாரிகளின் சங்கத்தின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடு எது?**

அ. ரஷ்யா

ஆ. அமெரிக்கா

**இ. இந்தியா ☑**

ஈ. சீனா

✓ 2022–2024–க்கு இடைப்பட்ட ஆண்டிற்கான ஆசிய தேர்தல் அதிகாரிகளின் சங்கத்தின் (AAEA) புதிய தலைவராக இந்தியா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்குமுன் பிலிப்பைன்ஸ் AAEA–இன் தலைவராக இருந்தது. தற்போது, 20 ஆசிய தேர்தல் மேலாண்மை அமைப்புகள் AAEA–இன் உறுப்பினர்களாக உள்ளன. இந்திய தேர்தல் ஆணையமானது AAEA–இன் நிறுவன உறுப்பினராகும். உருசியா, உஸ்பெகிஸ்தான், இலங்கை, மாலத்தீவுகள், தைவான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை இதன் புதிய உறுப்பினர்களாகும்.

**2. கட்டலின் நோவக் என்பார் கீழ்காணும் எந்த நாட்டின் முதல் பெண் மற்றும் இளவயது அதிபராக அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்?**



அ. பின்லாந்து

ஆ. ருமேனியா

**இ. ஹங்கேரி ☑**

ஈ. போலந்து

✓ ஹங்கேரியின் முதல் பெண் அதிபராக கட்டலின் நோவாக்கை ஹங்கேரிய நாடாளுமன்றம் தேர்வுசெய்துள்ளது. 44 வயதான அவர் ஹங்கேரியின் மிகவும் இளவயது அரச தலைவர் ஆவார். நோவக், சமீபத்தில் குடும்பக் கொள்கை அமைச்சராகப் பணியாற்றியவராவார். இளம் இணையர்கள் அதிக குழந்தைகளைப் பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட வரிச்சலுகைகள் மற்றும் கையேடுகள் உள்ளிட்ட அரசாங்கக் கொள்கைகளுக்காக அவர் பிரபலமாக அறியப்பட்டார்.

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'தக்காளிக்காய்ச்சல்' சார்ந்த மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கேரளம் ☑**

இ. கர்நாடகா

ஈ. ஒடிஸா

✓ அண்மையில் கேரள மாநிலத்தில் பரவிவரும், 'தக்காளி காய்ச்சல்' பரவியதை அடுத்து, அண்டை மாநிலங்களில் அந்நோய்ப்பரவாமல் தடுக்க கண்காணிப்பு பணியில் தீவிரங்காட்டி வருகின்றனர். 'தக்காளி காய்ச்சல்' என்பது ஓர் அரியவகை தீநுண்ம நோயாகும்; இது காய்ச்சல், தோலில் எரிச்சல், தடிப்புகள் மற்றும் நீரிழப்பு ஆகியவற்றை ஏற்படுத்துகிறது. இது 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப்பாதிக்கிறது. பெரிய சிவப்புநிற கொப்புளங்களை இந்நோய் ஏற்படுத்துவதால் அதற்கு இப்பெயர் வாய்க்கப்பெற்றது. குறிப்பிட்ட மருந்து என எதுவும் இந்நோய்க்குக் கிடையாது. இது மற்ற காய்ச்சல் வகைகளைப் போலவே தொற்றுந்தன்மை கொண்டதால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை தனிமைப்படுத்துவது கட்டாயமாகிறது.

**4. 2022ஆம் ஆண்டுக்கான 'டெம்பிள்டன்' பரிசைப் பெற்றவர் யார்?**



அ. ரோஜர் பென்ரோஸ்

ஆ. ஜேம்ஸ் பீபிள்ஸ்

இ. ஆர்தர் அஷ்கின்

**ஈ. பிராங்க் வில்செக் ☑**

✓ நோபல் பரிசாளரான கோட்பாட்டு இயற்பியலாளரும் எழுத்தாளருமான பிராங்க் வில்செக், இந்த ஆண்டின் (2022) மதிப்புமிக்க, 'டெம்பிள்டன்' பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்த விருது 1972–இல் மறைந்த கொடையாளி சர் ஜான் டெம்பிள்டனால் நிறுவப்பட்டது. அறிவியல் மற்றும் ஆன்மீகத்தின் இணைவைக்குறிக்கும் நபர்களுக்கு இது வழங்கப்படுகிறது. ஜேன் குடால், அன்னை தெரசா, தலாய் லாமா மற்றும் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு ஆகியோர் இதற்குமுன் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.

**5. எட்டு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, 2022 ஏப்ரலில் மிகவுயர்ந்த புள்ளியை எட்டிய இந்தியாவின் சில்லறை பணவீக்க சதவீதம் என்ன?**

அ. 8.01%

ஆ. 7.85%

**இ. 7.79% ☑**

ஈ. 7.50%



✓ 2022 ஏப்ரலில் இந்தியாவின் சில்லறை பணவீக்கம் 7.79 சதவீதமாக உயர்ந்தது. எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் உந்தப்பட்டு, கடந்த எட்டு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த உச்சத்தை அது எட்டியுள்ளது. இதற்கு முன் அதிகபட்சமாக 2014 மேயில் 8.33 சதவீதமாக அது இருந்தது. மார்ச் மாதத்தில் 6.95 சதவீத பணவீக்கம் பதிவாகியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் சில்லறை பணவீக்கத்திற்கான அதிகபட்ச சகிப்புத்தன்மை வரம்பு 6% ஆகும்.

**6. PMFBY மற்றும் KCC–க்கான தொழில்நுட்ப ஆதரவுக்காக, மத்திய உழவு அமைச்சகம், எந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. FAO

**ஆ. UNDP ☑**

இ. IMF

ஈ. WMO

✓ இந்திய அரசின் உழவு மற்றும் உழவர்கள்நல அமைச்சமும் ஐநா வளர்ச்சித் திட்டமும் (UNDP) அண்மையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, பிரதமர் பசல் பீமா யோஜனா (PMFBY) திட்டம் மற்றும் கிசான் கடனட்டை – மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டத்திற்கு UNDP தொழில்நுட்ப ஆதரவை வழங்கும். UNDP ஆனது கடந்த நான்காண்டுகளாக தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது.

**7. 'BHARAT TAP' திட்டத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?**

அ. ஜல் சக்தி அமைச்சகம்

**ஆ. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்



✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் ஹர்தீப் S பூரி, 'பிளம்பெக்ஸ் இந்தியா' என்ற கண்காட்சியில் 'BHARAT TAP' என்ற முன்னெடுப்பைத் தொடங்கினார். 'BHARAT TAP' என்ற இந்த முன்முயற்சி மூலம் நீர்நுகர்வு கணிசமாகக் குறைக்கப்படும். ஆண்டுக்கு 500 கோடி லிட்டர் தண்ணீரைச்சேமிக்கும், 'நிர்மல் ஜல் பிரயாஸ்' திட்டத்தையும் பூரி அப்போது அறிமுகப்படுத்தினார்.

**8. 'YUVA (இளையோர்) சுற்றுலா மன்றங்கள்' அமைப்பதாக அறிவித்துள்ள நிறுவனம் எது?**

அ. CBSE ☑

ஆ. UGC

இ. ISRO

ஈ. NITI ஆயோக்

✓ மத்திய இடைநிலைக் கல்வி வாரியமானது (CBSE) அனைத்து CBSE இணைப்புப் பள்ளிகளுக்கும், இளையோர் சுற்றுலா மன்றங்களை உருவாக்குவது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. மத்திய சுற்றுலா அமைச்சகம், 'விடுதலையின் அமுதப்பெருவிழா' கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக, 'இளையோர் சுற்றுலா மன்றங்களை'த் தொடங்கியுள்ளது. இந்திய சுற்றுலாவின் இளந்தூதர்களை வளர்ப்பதையும் மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. அவர்கள் இந்திய சுற்றுலாபற்றி அறிந்துகொள்ளவும், நமது வளமான கலாச்சார பாரம்பரியத்தைப் புரிந்துகொள்ளவும் மற்றும் சுற்றுலா மீதான ஆர்வத்தை வளர்க்கவும் இது உதவும்.

**9. 'காமன்வெல்த் பாயின்ட்ஸ் ஆஃப் லைட்' விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிஷோர் குமார் தாஸ் சார்ந்த நாடு எது?**

அ. இந்தியா

ஆ. இலங்கை

**இ. வங்காளதேசம் ☑**

ஈ. நேபாளம்




✓ சிறந்த தனிப்பட்ட தன்னார்வலர்களை அங்கீகரிக்கும், 'காமன்வெல்த் பாயின்ட்ஸ் ஆஃப் லைட்' விருதுக்கு, 'வித்யானந்தோ' என்ற கல்வித் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர், வங்கதேசத்தைச் சார்ந்த கிஷோர் குமார் தாஸ் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். விளிம்புநிலை பின்னணியில் உள்ள குழந்தைகளுக்கு கல்விக்கான அணுகலை வளர்த்தெடுப்பதில் அவராற்றிய சிறப்பான பணிக்காக அவர் இவ்விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று பிரிட்டிஷ் உயராணையரகம் தெரிவித்துள்ளது. கிஷோர் தாஸ், கடந்த 2013ஆம் ஆண்டில் 'பித்யானந்தோ'வை அமைத்தார்; இது பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு இலவசக்கல்வி மற்றும் உணவுத்திட்டத்தை வழங்கும் 5 தொடக்கப்பள்ளிகளை நடத்தி வருகிறது.

**10. எந்த ஆங்கில ஆசிரியரின் நினைவாக, ஐநா, ஆங்கில மொழி நாளை ஏப்.23 அன்று கொண்டாடுகிறது?**

அ. வால்ட் விட்மேன்

**ஆ. வில்லியம் ஷேக்ஸ்பியர் ☑**

இ. R W எமர்சன்

ஈ. இராபர்ட் பிரோஸ்ட்



✓ ஆங்கில நாடக ஆசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் நினைவாக, அவரது பிறந்த நாள் மற்றும் இறந்த நாள் ஆகிய இரண்டையும் குறிக்கும் வகையில், ஐநா அவை ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.23 அன்று ஆங்கில மொழி நாளைக் கொண்டாடுகிறது. பன்மொழி மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையைக் கொண்டாடுவதற்காக, ஐநா தனது ஆறு அதிகாரப்பூர்வ மொழிகள் ஒவ்வொன்றிற்கும் மொழி நாளைக் கடைப்பிடிக்கிறது. சுபானிய எழுத்தாளர் மிகுவல் டி செர்வாண்டஸ் சாவேத்ராவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், ஐநா, சுபானிய மொழி நாளையும் ஏப்ரல்.23 அன்று அனுசரிக்கிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியாவின் 25ஆவது தலைமைத் தேர்தல் ஆணையராக இராஜீவ் குமார் பொறுப்பேற்றார்**

மே 12 தேதியிட்ட இந்திய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தின் அரசிதழ் அறிவிப்பின்படி, புது தில்லியில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்தில் இராஜீவ் குமார் இன்று இந்தியாவின் 25ஆவது தலைமைத் தேர்தல் ஆணையராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

---

**2. திரிபுராவின் புதிய முதல்வர் மாணிக் சாஹா**

திரிபுரா மாநிலத்தின் புதிய முதல்வராக மாணிக் சாஹா தேர்வு செய்யப்பட்டுள்ளார். புதிய முதல்வரான மாணிக் சாஹா தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். விரைவிலேயே, அவர் தனது மாநிலங்களவை எம் பி பதவியை விலக்கிவிட்டு திரிபுராவில் ஏதாவது தொகுதி ஒன்றில் போட்டியிடலாம் எனக் கூறப்படுகிறது. வடகிழக்கு மாநிலமான திரிபுராவில், அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**3. கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை**

உள்நாட்டில் விலை அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. இந்தத் தடை உடனடியாக அமலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சில்லறைப் பணவீக்கத்தின் மதிப்பு கடந்த ஏப்ரலில் 8 ஆண்டுகள் காணாத அளவுக்கு 7.79 சதவீதமாக அதிகரித்தது. முக்கியமாக, உணவுப் பொருள்களின் பணவீக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. கச்சா எண்ணெய் விலை உயர்வும் ஒட்டுமொத்த பணவீக்க மதிப்பு உயர்ந்ததற்கு மற்றொரு காரணமாக அமைந்தது. இதனிடையே, பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக இந்திய ரிசர்வ் வங்கி, வட்டி விகிதங்களை அண்மையில் உயர்த்தியது. இந்நிலையில், உணவுப்பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசும் தொடங்கியுள்ளது.

இதுதொடர்பாக வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் வெளியிட்ட அறிக்கையில், "கோதுமை ஏற்றுமதிக்கு உடனடியாகத் தடை விதிக்கப்படுகிறது. எனினும், அறிவிக்கை வெளியிடப்படுவதற்கு முன்பு வரை ஏற்றுமதி செய்ய அனுமதி பெற்றிருந்தோர், கோதுமையை அனுப்பலாம். உணவுப் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு வெளிநாடுகள் கோரிக்கைவிடுக்கும்பட்சத்தில், மத்திய அரசு அனுமதி அளித்தால் அந்நாடுகளுக்கு கோதுமையை ஏற்றுமதி செய்யலாம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் 1 கோடி டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ள நிலையில், இதுவரை 9,63,000 டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கோதுமை ஏற்றுமதிக்காக மொராக்கோ, துனிசியா, இந்தோனேசியா, பிலிப்பின்ஸ், தாய்லாந்து, வியத்நாம், லெபனான் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. இந்நிலையில், உள்நாட்டு நிலைமையைக் கருத்தில்கொண்டு கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. அதே வேளையில், வெங்காய ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை DGFT நீக்கியுள்ளது.

---

**1. 2022 – உலக நூல் மற்றும் பதிப்புரிமை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Read, so you never feel low ☑**

ஆ. To share a story

இ. Imagine the World: A story of books and festivals

ஈ. Reading, it's my right!



✓ புத்தகங்கள் மற்றும் வாசிப்பின் மகிழ்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், உலக நூல் மற்றும் பதிப்புரிமை நாள் ஏப்.23 அன்று கொண்டாடப்படுகிறது. "Read, so you never feel low" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வந்த உலக புத்தகம் மற்றும் பதிப்புரிமை நாளுக்கானக் கருப்பொருளாகும். ஒவ்வோர் ஆண்டும், UNESCO மற்றும் புத்தகத் துறையின் 3 முக்கிய துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச நிறுவனங்கள் (பதிப்பாளர்கள், நூல் விற்பனையாளர்கள் மற்றும் நூலகங்கள்) ஓராண்டு காலத்திற்கு உலக நூல் தலைநகரத்தைத் தேர்ந்தெடுக்கின்றன. குவாதலஜாரா (மெக்ஸிக்கோ) 2022–க்கான உலக நூல் தலைநகரமாகவும், அக்ரா (கானா) நகரம் 2023–க்கான உலக நூல் தலைநகரமாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.


**2. ஐநா சீன மொழி நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஏப்ரல்.20 ☑**

ஆ. மே.15

இ. ஏப்ரல்.21

ஈ. மே.16




✓ உலக அமைப்பான ஐநாஇன் ஆறு உத்தியோகபூர்வ மொழிகளில் ஒவ்வொன்றின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் சாதனைகள் பற்றிய விழிப்புணர்வையும் மரியாதையையும் ஏற்படுத்த ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பால் (UNESCO) ஒவ்வோர் ஆண்டும் ஏப்.20 அன்று ஐநா சீன மொழி நாள் அனுசரிக்கப்படுகிறது. சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு சீன எழுத்துக்களைக் கண்டுபிடித்ததாகக் கருதப்படும் ஒரு புராண காலத்து பாத்திரமான காங் ஜிக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சீன மொழிக்கான தேதியாக ஏப்.20 தேர்ந்தெடுக்கப்பட்டது. ஐநா அவையின் ஆறு அதிகாரப்பூர்வ மொழிகள் பின்வருமாறு: ஆங்கிலம், பிரஞ்சு, ருஷியம், சீனம், ஸ்பானியம் மற்றும் அரபு.

**3. ஓர் அண்மைய NABARD ஆய்வின்படி, அதிக கடன்பெறும் தனிநபர் விவசாயிகள் உள்ள மாநிலம் எது?**

அ. உத்தர பிரதேசம்

ஆ. பீகார்

இ. ஜார்கண்ட்

**ஈ. பஞ்சாப் ☑**

NABARD

✓ சமீபத்திய ஆய்வின்படி, பஞ்சாபின் ஒரு சராசரி விவசாயி உத்தர பிரதேசத்தில் உள்ள ஒரு விவசாயியைக் காட்டிலும் நான்கு மடங்கும், மகாராஷ்டிராவில் உள்ள ஒரு விவசாயியைக் காட்டிலும் ஐந்து மடங்கும் கடன் வாங்குகிறார். மூன்று மாநில அரசுகளின் சமீபத்திய விவசாயக்கடன் தள்ளுபடி குறித்து பாரத் கிரிஷக் சமாஜுடன் இணைந்து NABARD வங்கி இந்த ஆய்வினை நடத்தியது. உ பி மற்றும் மகாராஷ்டிராவில் முறையே ₹84,000 மற்றும் ₹62,000 என ஒப்பிடும்போது, பஞ்சாபில் உள்ள ஒரு குறு விவசாயி ஆண்டுக்கு ₹3.4 இலட்சம் கடன் வாங்குகிறார்.

**4. 'லாக்டு ஷீல்ட்ஸ் – 2022' சைபர் டிபென்ஸ் பயிற்சியில் வென்ற நாடு எது?**

அ. அமெரிக்கா ஆ. சீனா

**இ. பின்லாந்து ☑** ஈ. ஜெர்மனி

LOCKED SHIELDS 2022

- ✓ இந்த ஆண்டு நிகழ்வில் பங்கேற்ற 24 அணிகளில் இருந்து, உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான சர்வதேச இணையவெளிப் பாதுகாப்பு நேரடித்தீ பயிற்சியான, 'Locked Shields–2022'ஐ பின்லாந்து வென்றது. லித்துவேனியா–போலந்து கூட்டணியும் எஸ்டோனியா–ஜார்ஜியா கூட்டணியும் இரண்டாவது இடத்தைப் பிடித்தன. இந்தப் பயிற்சியை NATO Cooperative Cyber Defense Centre of Excellence (CCDCOE) ஏற்பாடு செய்திருந்தது.

**5. 'Class of Young Global Leaders' என்பதை அறிவிக்கிற நிறுவனம் எது?**

அ. உலக வங்கி

**ஆ. உலக பொருளாதார மன்றம் ☑**

இ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ. NASA

- ✓ 30 முதல் 40 வயதுக்குட்பட்ட ஆராய்ச்சியாளர்கள், புதுமையான தொழில்முனைவோர், ஆர்வலர்கள் மற்றும் நம்பிக்கைக்குரிய அரசியல் தலைவர்களை உள்ளடக்கிய, 'Class of Young Global Leaders (YGLs)' என்பதை உலகப் பொருளாதார மன்றம் அறிவிக்கின்றது. 2022ஆம் ஆண்டுக்கான பட்டியலில், 'ஆம் ஆத்மி' கட்சித் தலைவர் ராகவ் சதா, எடெல்வெய்ஸ் மியூச்சுவல் பண்ட் CEO ராதிகா குப்தா, தடகள வீராங்கனை மானசி ஜோஷி, பாரத்பே CEO சுஹைல் சமீர், Innov8 இணை நிறுவனர் ரித்தேஷ் மாலிக், சுகர் காஸ்மெட்டிக்ஸ் CEO வினீதா சிங் மற்றும் குளோபல் ஹிமாலயன் எக்ஸ்பெடிஷன் CEO ஜெய்தீப் பன்சால் உள்ளிட்ட இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**6. 'தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வு தளத்தை' தொடக்கிய நிறுவனம் எது?**

அ. இந்திய ரிசர்வ் வங்கி

**ஆ. NITI ஆயோக் ☑**

இ. NASSCOM

ஈ. C-DAC

- ✓ NITI ஆயோக் ஆனது பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வு தளத்தை அறிமுகம் செய்துள்ளது. தரவுகளை எளிதில் அணுகக்கூடியதாகவும், கலந்துரையாடக்கூடியதாகவும் பொது அரசாங்கத் தரவுகளுக்கான அணுகலை மக்கள்மயப்படுத்துவதையும் இந்தத் தளம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ✓ இது பல்வேறு அரசு நிறுவனங்களின் அடிப்படை தரவுத்தொகுப்புகளை வழங்குகிறது, அவற்றை ஒத்திசைவாக வழங்குகிறது; மேலும் பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தலுக்கான கருவிகளை வழங்குகிறது. இந்தப்பொது வெளியீடு இயங்குதளத்தின் பீட்டா வெளியீட்டைப் பின்பற்றுகிறது; இது குறைந்த எண்ணிக்கையிலான பயனர்களுக்கு சோதனை மற்றும் கருத்துக்கான அணுகலை வழங்கியது.

**7. 2022 – உலக அருங்காட்சியக நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Bio-restoration in Museums

**ஆ. Power of Museums ☑**

இ. Cultural Exchange

ஈ. Global Co-operation

- ✓ சமூகத்தைக் கட்டியெழுப்புதல், தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் கலாச்சார பரிமாற்றம் ஆகியவற்றில் அருங்காட்சியகங்களின் குறிப்பிடத்தக்க பங்கைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, மே.18 அன்று உலகெங்கிலும் உள்ள அருங்காட்சியகங்களால் உலக அருங்காட்சியக நாள் கொண்டாடப்படுகிறது. புது தில்லியின் தேசிய நவீன கலைக்கூடமானது, இந்த ஆண்டு அருங்காட்சியக நாளை – 'அருங்காட்சியகங்களின் ஆற்றல்' என்ற கருப்பொருளின்கீழ் கல்வி நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சிகளுடன் ஒரு வார கால கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்கிறது.

**8. இந்தியாவின் முதல், 'அமிர்த நீர்நிலை' திறக்கப்பட்ட மாநிலம் எது?**

அ. கோவா

ஆ. ஜம்மு காஷ்மீர்

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. குஜராத்



- ✓ நாட்டின் முதலாவது 'அமிர்த நீர்நிலை'யை உத்தர பிரதேச மாநிலம் இராம்பூரில் உள்ள பட்வாய் என்னுமிடத்தில் மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி தொடங்கி வைத்தார். உள்ளூர் மக்கள் மற்றும் உள்ளூர் பள்ளி மாணாக்கரின் உதவியுடன், அழுக்கான ஒரு குளம் புதிய தடுப்புச்சுவர், எல்லைச்சுவர், உணவரங்கம், நீரூற்றுகள் & விளக்குகளுடன் மீட்டுருவாக்கஞ்செய்யப்பட்டுள்ளது. இந்தியா விடுதலை அடைந்த 75ஆவது ஆண்டில், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 75 நீர்நிலைகள் தூய்மையாக இருக்கவேண்டும் என்று பிரதமர் மோடி அழைப்பு விடுத்திருந்தார்.

**9. கீழ்காணும் எம்மாநிலம் / UT–இல் மட்சோயிடே பாம்பின் புதைபடிவத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்?**

அ. கேரளம்

ஆ. மேற்கு வங்கம்

**இ. லடாக் ☑**

ஈ. இலட்சத்தீவுகள்



- ✓ லடாக்கில் அமைந்துள்ள இமயமலைப்பகுதியில் மட்சோயிடே பாம்பின் புதைபடிவத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். 'Madtsoiidae' என்பது அழிந்துபோன நடுத்தரம் முதல் பிரம்மாண்ட நீளமுடைய பாம்புகளின் குழுவாகும். இந்த ஆராய்ச்சி இந்திய துணைக்கண்டத்தில் அரியவகை பாம்பினங்கள் இருந்ததை எடுத்துக் காட்டுகிறது. அவை 30 அடி நீளம் வரை வளரும் எனக் கருதப்படுகிறது. டேராடூனின் வாடியா இன்ஸ்டிடியூட் ஆப் ஹிமாலயன் ஜியாலஜி, பஞ்சாப் பல்கலைக்கழகம், ஐஐடி ரோபார் மற்றும் சுலோவாக்கியாவின் கொமேனியஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்களால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**10. 'கிராமப்புற பழங்குடியினர் தொழில்நுட்பப் பயிற்சி'த் திட்டமானது எவ்விடத்திலிருந்து தொடங்கப்பட்டது?**

அ. வாரணாசி

ஆ. காந்தி நகர்

**இ. போபால் ☑**

ஈ. புனே



- ✓ மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் இணையமைச்சர் இராஜீவ் சந்திரசேகர், போபாலில் உள்ள ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை பணியாளர்கள் செயல்திறன் மையத்தில், பழங்குடியின இளைஞர்கள் – கிராமப்புற பழங்குடியினர் தொழில்நுட்பப் பயிற்சிக்கான முன்னோடித் திட்டத்தைத் தொடங்கினார்.
- ✓ இந்தியாவின் மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், குஜராத், இராஜஸ்தான், மகாராஷ்டிரா மற்றும் ஒடிஸா ஆகிய ஆறு மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 17 மாவட்டங்களின் சுமார் 250 பயனாளிகளுக்கு பயிற்சியளிக்க இந்தத் திட்டம் எண்ணுகிறது. விரைவில் ஜார்க்கண்டிலும் இது ஏற்பாடு செய்யப்படும். இப்பயிற்சியின்மூலம் இளைஞர்கள் தாங்களாகவே சொந்தமாகத் தொழில் தொடங்க முடியும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தாமஸ் கோப்பை: வரலாறு படைத்தது இந்தியா!**

தாமஸ் கோப்பை பாட்மின்டன் போட்டியின் 73 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக இந்தியா சாம்பியன் ஆகியிருக்கிறது. தாய்லாந்தில் நடைபெற்று வந்த இப்போட்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்தியா 3–0 என்ற கணக்கில், 14 முறை சாம்பியனான இந்தோனேசியாவை வீழ்த்தி வாகைசூடி வரலாறு படைத்திருக்கிறது.

இந்திய அணி, கடந்த 1979–க்குப் பிறகு இப்போட்டியில் அரையிறுதி, இறுதி ஆட்டங்களுக்கு முன்னேறியதும் இதுவே முதல் முறையாகும். இந்த முன்னேற்றத்தின்போது முக்கிய அணிகளான மலேசியா, டென்மார்க்கை இந்திய அணி சாய்த்தது குறிப்பிடத்தக்கது.

---

**2. ஆஸி. முன்னாள் கிரிக்கெட் வீரர் சைமண்ட்ஸ் மரணம்**

ஆஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் (46) கார் விபத்தில் உயிரிழந்தார். ஆஸ்திரேலியாவுக்காக 26 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள சைமண்ட்ஸ் 1,462 ரன்கள் எடுத்துள்ளார். பேட்டிங் சராசரி 40.61. பந்துவீச்சில் 24 விக்கெட் வீழ்த்தியுள்ளார். ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட்டில் அதிகம் ஆதிக்கம் செலுத்திய இவர் 198 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடி 5,088 ரன்கள் குவித்துள்ளார். பேட்டிங் சராசரி 39.75. பந்துவீச்சில் 133 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

14 டி20 ஆட்டங்களில் விளையாடி 8 விக்கெட் வீழ்த்தியுள்ளார். பேட்டிங்கில் சராசரி 48.14 உடன் 337 ரன்கள் விளாசியுள்ளார் சைமண்ட்ஸ். பேட்டிங், பந்துவீச்சு மட்டுமின்றி பீல்டிங்கிலும் தலைசிறந்த வீரர் சைமண்ட்ஸ். ஐபிஎல் கிரிக்கெட்டில் டெக்கான் சார்ஜர்ஸ் ஹைதராபாத், மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகளுக்காக சைமண்ட்ஸ் விளையாடியுள்ளார்.

---

**3. இத்தாலியன் ஓபன்: ஜோகோவிச், ஸ்வியாடெக் சாம்பியன்**

இத்தாலியன் ஓபன் டென்னிஸ் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், போலந்தின் இகா ஸ்வியாடெக் ஆகியோர் சாம்பியன் ஆகினர். இதன்மூலம் இப்போட்டியில் 6ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றிருக்கிறார் ஜோகோவிச்.

**தக்கவைத்த ஸ்வியாடெக்:** இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், நடப்புச் சாம்பியனான போலந்தின் இகா ஸ்வியாடெக் கோப்பையை தக்கவைத்துக் கொண்டார். இது, இப்போட்டியில் அவர் வெல்லும் 5–ஆவது பட்டமாகும்.

---

**4. நேட்டோவில் இணைகிறது பின்லாந்து: அதிகாரபூர்வ அறிவிப்பு**

நேட்டோ அமைப்பில் இணைய உள்ளதாக பின்லாந்து நாடு அதிகாரபூர்வமாக அறிவித்தது. ஜெர்மனி தலைநகர் பெர்லினில் நடைபெற்ற நேட்டோ கூட்டத்துக்குப் பின்னர், பின்லாந்து அதிபரும் பிரதமரும் கூட்டாக இதனை அறிவித்தனர். ரஷியாவின் அண்டை நாடான உக்ரைன் நேட்டோவில் இணைய விருப்பம் தெரிவித்தது. அதையடுத்து, அந்த நாட்டின் மீது ரஷியா கடந்த பிப்ரவரி 24–ஆம் தேதி படையெடுத்தது.

இந்த நிலையில், ரஷியாவின் மற்றொரு அண்டை நாடான பின்லாந்தும் நேட்டோவில் இணைய விருப்பம் தெரிவித்து வந்தது. உக்ரைனைப் போல தங்கள் மீதும் ரஷியா படையெடுப்பதைத் தடுப்பதற்காக அந்த முடிவை பின்லாந்து எடுக்கலாம் என்று கூறப்பட்டது. பின்லாந்தின் விருப்பத்துக்கு ரஷியா எதிர்ப்பு தெரிவித்தது.

ஆனால், அதைப் பொருட்படுத்தாமல், நேட்டோவில் இணைவதற்கான விண்ணப்பத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும் எனவும், அதற்கான நடைமுறைகள் உடனடியாகத் தொடங்கப்படும் எனவும் பின்லாந்து அதிபர் சாவ்லி நினிஸ்டோ, பிரதமர் சனா மரீன் ஆகியோர் அறிவித்தனர்.

---

**5. வெம்பக்கோட்டை அகழாய்வில் யானை தந்தத்தாலான அணிகலன் கண்டெடுப்பு**

வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் அகழாய்வில் யானை தந்தத்தாலான அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அணிகலன் மற்றும் சுடுமண்ணாலான காதணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே வெம்பக்கோட்டை அடுத்த விஜயகரிசல்குளம் ஊராட்சிக்குட்பட்ட வைப்பாற்றின் வடகரையில் அமைந்துள்ள உச்சிமேட்டில் 25 ஏக்கர் பரப்பளவிலான தொல்லியல்மேட்டில், கடந்த மார்ச்.16 ஆம் தேதி முதல் அகழ்வாராய்ச்சிப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இந்த அகழாய்வில் முன்னதாக, சுடுமண்ணாலான பகடைக்காய், தக்களி, ஆட்டக்காய்கள், முத்துமணிகள், சங்கு வளையல்கள், சுடுமண்ணால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருள்கள், அழகிய வேலைப்பாடுகளுடன்கூடிய சுடுமண் அகல்விளக்கு உள்ளிட்டவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், அகழாய்வில் அழகிய வேலைப்பா–டுகளுடன் கூடிய யானை தந்தால் செய்யப்பட்ட அணிகலன் மற்றும் சுடுமண்ணாலான காதணிகள் ஆகியவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. யானை தந்ததால் செய்யப்பட்ட அணிகலன் 5 செமீ நீளமும், 0.8 செமீ விட்டமும், 61 கிராம் எடையும் கொண்டதாக உள்ளது. அதேபோல், சுடுமண் காதணி 2.2 செமீ நீளமும், 1.01 செமீ சுற்றளவும் 65 கிராம் எடையும் கொண்டதாக உள்ளது.

கண்டெடுக்கப்பட்டுள்ள இந்த இரு அணிகலன்கள் மூலம் தொன்மையான மனிதர்கள் சுடுமண் பொருள்களை பல்வேறு வகையில் பயன்படுத்தி உள்ளதும், பெண்கள் அணிகலன்களை அழகிய வடிவில் பயன்படுத்தி உள்ளதும் தெரியவந்துள்ளது.

---

**1. 2022–இல் நடைபெற்ற முதல் வியத்தகு இந்தியா சர்வதேச கப்பல் மாநாடு நடந்த இடம் எது?**

அ. கோவா

ஆ. விசாகப்பட்டினம்

**இ. மும்பை ☑**

ஈ. கொல்கத்தா

✓ மத்திய சுற்றுலாத்துறை அமைச்சரான ஜி கிஷன் ரெட்டி, மும்பையில் முதலாவது வியத்தகு இந்தியா சர்வதேச கப்பல் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். அவர் உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளை, 'வாருங்கள், இந்தியாவில் பயணஞ்செய்யுங்கள்' என்று அழைப்பு விடுத்தார். இது துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம், இந்திய அரசு மற்றும் FICCI ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாநாட்டின்போது எட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற சிட்டகாங் துறைமுகம் அமைந்துள்ள நாடு எது?**




அ. இந்தியா

**ஆ. வங்காளதேசம் ☑**

இ. நேபாளம்

ஈ. மியான்மர்

✓ 'சிட்டகாங்' அல்லது 'சாட்டோகிராம்' துறைமுகம் வங்காளதேசத்தின் முக்கியமான துறைமுகங்களுள் ஒன்றாகும். வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசீனா, டாக்காவில் வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கரைச் சந்தித்தபோது, சிட்டகாங் துறைமுகத்தைப் பயன்படுத்திக்கொள்ள இந்தியாவுக்கு அனுமதியளித்தார். துறைமுகப்பட்டினம் அருகாமையில் இருப்பதால், அஸ்ஸாம், மேகாலயா மற்றும் மிசோரம் உள்ளிட்ட வடகிழக்கு இந்திய மாநிலங்களில் பொருளாதார நடவடிக்கையை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**3. 2022 – இத்தாலிய ஓப்பன் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்ற டென்னிஸ் வீராங்கனை யார்?**



அ. ஆஷ்லே பார்ட்டி

**ஆ. இகா ஸ்விடெக் ☑**

இ. நவோமி ஒசாகா

ஈ. சிமோனா ஹாலெப்

✓ உலகின் நம்பர்.1 வீராங்கனையான இகா ஸ்விடெக், 2022ஆம் ஆண்டு இத்தாலிய ஓப்பன் டென்னிஸ் தொடரை உலகின் ஏழாம் நிலையில் உள்ள வீராங்கனையை நேர் செட்களில் தோற்கடித்து தனது ஐந்தாவது WTA டூர் பட்டத்தை வென்றார். 20 வயதான இப்போலந்து வீரங்கனை, 2013–இல் செரீனா வில்லியம்ஸுக்குப் பிறகு (5) ஒரே சீசனில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட 'WTA 1000' வென்ற இரண்டாவது வீராங்கனை என்ற பெருமையைப் பெறுகிறார். நோவக் ஜோகோவிச், 2022 – இத்தாலிய ஓப்பன் ஆடவர் பட்டத்தையும் சீசனின் முதல் ATP டூர் பட்டத்தையும் வென்றார்.

**4. 'தொழில்நுட்ப முன்னோடி சமூகம்' என்பது கீழ்காணும் எந்த நிறுவனத்தின் முன்னெடுப்பாகும்?**

அ. NITI ஆயோக்

**ஆ. WEF ☑**

இ. IMF

ஈ. உலக வங்கி

- ✓ இந்தியாவைச் சேர்ந்த ஐந்து துளிர் நிறுவனங்கள் உட்பட 100 புதிய துளிர் நிறுவல்கள் அதன் தொழில்நுட்ப முன்னோடி சமூகத்தில் இணைந்துள்ளதாக உலகப் பொருளாதார மன்றம் தெரிவித்துள்ளது. துளிர் நிறுவல்களில் நல்வாழ்வு மற்றும் நிதிச்சேவைகள் முதல் மெட்டாவர்ஸ் வரையுள்ள நிறுவனங்களும் அடங்கும்.
- ✓ உலகப் பொருளாதார மன்றமானது 2022 தொழில்நுட்ப முன்னோடிகளின் குழுவை தாவோசில் அதன் வருடாந்திர கூட்டத்திற்கு முன்னதாக வெளியிட்டது. ஐந்து இந்திய நிறுவனங்களில் வாகன், ஸ்மார்ட் காயின் பைனான்சியல்ஸ், புரோயான், பாண்டோகார்ப் மற்றும் ரெசைகல் ஆகியவை அடங்கும்.

**5. அமைதியாகக் கூடியிருத்தலுக்கான உலக நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. மே.12

ஆ. மே.14

**இ. மே.16 ☑**

ஈ. மே.18



- ✓ ஐநா பொதுச்சபையானது கடந்த 2017ஆம் ஆண்டில் மே.16ஆம் தேதியை அமைதியாகக் கூடியிருத்தலுக்கான உலக நாளாக அறிவிக்க ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. மக்கள் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ வலியுறுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2000ஆம் ஆண்டு, 'அமைதி கலாச்சாரத்திற்கான சர்வதேச ஆண்டாக' அங்கீகரிக்கப்பட்டது. 2001 முதல் 2010 வரையிலான பத்தாண்டு காலத்தை, 'உலகின் குழந்தைகளுக்கான அமைதி மற்றும் அகிம்சை கலாச்சாரத்திற்கான சர்வதேச தசாப்தம்' என்று ஐநா அறிவித்தது.

**6. இந்தியாவின் முதல் குழு வானொலி நிலையமான, 'தூத் வாணி' தொடங்கப்பட்ட மாநிலம் எது?**

அ. பஞ்சாப்

**ஆ. குஜராத் ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. மகாராஷ்டிரா



- ✓ கால்நடை வளர்ப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்ட, 'தூத் வாணி' என்ற குழு வானொலி நிலையத்தைப் பிரதமர் திறந்து வைத்தார். பனஸ்கந்தா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தால் (பனாஸ் பால் பண்ணை) அமைக்கப்பட்டுள்ள இந்த வானொலி நிலையம், மாநிலத்தில் உள்ள 1,700 கிராமங்களில் உள்ள ஐந்து லட்சத்திற்கும் அதிகமான பால் உற்பத்தியாளர்களை இணைக்கும். கால்நடை வளர்ப்போருக்காக அர்ப்பணிக்கப்பட்ட நாட்டின் முதல் குழு வானொலி நிலையமும் இதுதான்.

**7. தென்கிழக்காசிய பிராந்தியத்தில் மலேரியாவினால் 82% இறப்புக்கள் நிகழ்ந்த நாடு எது?**

அ. சீனா

**ஆ. இந்தியா ☑**

இ. இலங்கை

ஈ. வங்காளதேசம்



- ✓ உலக நலவாழ்வு அமைப்பின் (WHO) "உலக மலேரியா அறிக்கை–2021" ஆனது தென்கிழக்காசிய பிராந்தியத்தில் மலேரியாவால் நிகழ்ந்த இறப்புகளில் சுமார் 82% இந்தியாவில் நிகழ்ந்தாகக் காட்டுகிறது. இருப்பினும், மலேரியா நோயின் பாதிப்பைக் குறைக்கும் ஒரே நாடு இந்தியாவாகும். 2022 – உலக மலேரியா நாளானது, "Harness Innovation to Reduce the Malaria Disease Burden and Save Lives" என்ற கருப்பொருளின் கீழ், ஏப்ரல்.25 அன்று அனுசரிக்கப்பட்டது.

**8. 'பிராணஹிதா புஷ்கரலு' என்பது எந்த மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு புகழ்பெற்ற விழாவாகும்?**



அ. மேற்கு வங்கம்

**ஆ. தெலுங்கானா ☑**

இ. கேரளா

ஈ. ஒடிஸா

✓ 'பிராணஹிதா புஷ்கரலு' என்பது தெலுங்கானாவில் உள்ள கோதாவரி நதியின் கிளை நதியான பிராணஹிதாவை வழிபடுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு திருவிழாவாகும். தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டதைத்தொடர்ந்து முதன்முறையாக இவ்விழா கொண்டாடப்பட்டது. இது பிராணஹிதா ஆற்றங்கரையில் உருவாக்கப்பட்ட அரங்குகளில் தொடங்கியது. தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், கர்நாடகா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 6 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் 12 நாட்கள் நடந்த இவ்விழாவில் பங்கேற்றனர்.

**9. மாநில பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமிப்பதில் ஆளுநரின் அதிகாரத்தை மாநில அரசிற்கு மாற்றுவதற்கான மசோதாக்களை நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. மேற்கு வங்கம்

இ. கேரளா

ஈ. சத்தீஸ்கர்

✓ 13 மாநில பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்கும் ஆளுநரின் அதிகாரத்தை மாநில அரசுக்கு மாற்றும் வகையிலான 2 மசோதாக்கள் தமிழ்நாட்டின் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு அரசின் கூற்றுப்படி, துணைவேந்தர்கள் நியமனங்குறித்த மாநில அரசின் கருத்தை ஆளுநர் புறக்கணிப்பதால் இந்தப் புதிய மசோதாக்கள் தேவைப்படுகின்றன. கடந்த காலத்தில் மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களும் இந்த வாதத்தை முன்வைத்தன.

**10. 2022 – 'லாரஸ் உலக விளையாட்டு வீரர்' மற்றும் 'ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை' விருதுகளை வென்றவர் யார்?**



**அ. மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் மற்றும் எலைன் தாம்சன்-ஹேரா ☑**

ஆ. லூயிஸ் ஹாமில்டன் மற்றும் எலைன் தாம்சன்-ஹேரா

இ. ரபேல் நடால் மற்றும் ஆஷ்லே பார்ட்டி

ஈ. லூயிஸ் ஹாமில்டன் மற்றும் ஆஷ்லே பார்ட்டி

✓ F1 உலக சாம்பியனான மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் மற்றும் ஜமைக்கா ஒலிம்பிக் குறுவிரையோட்ட வீராங்கனையான எலைன் தாம்சன்–ஹேரா ஆகியோர் முறையே 2022ஆம் ஆண்டுக்கான லாரஸ் உலக விளையாட்டு வீரராகவும், லாரஸ் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இத்தாலிய ஆடவர் கால்பந்து அணி இரண்டாவது முறையாக, 'லாரஸ் ஆண்டின் சிறந்த அணி' விருதை வென்றது. டென்னிஸ் வீராங்கனை எம்மா ராடுகானு, இந்த ஆண்டின் லாரஸ் திருப்புமுனை விருதைப் பெற்றார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பாங்க் ஆஃப் இங்கிலாந்து நிதிக்குழுவில் இந்தியப் பெண்**

பிரிட்டனின் மத்திய வங்கியான பாங்க் ஆஃப் இங்கிலாந்தின் நிதிக்குழுவில் இந்தியப் பெண்ணும், பொருளாதார பேராசிரியருமான ஸ்வாதி திங்ரா இடம்பெற்றுள்ளார். லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் துணைப் பேராசிரியராக பணியாற்றும் ஸ்வாதி, தில்லி பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளநிலைப் பட்டம் பெற்றவர். தொடர்ந்து தில்லி ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் பொருளாதாரத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றார். பின்னர் பிரிட்டன் சென்று உயர்கல்வி பயின்ற அவர் பொருளாதாரத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்; இவர் சர்வதேச பொருளாதாரத்தில் நிபுணத்துவம் பெற்றவர். இந்நிலையில், பிரிட்டனில் வட்டி விகிதத்தை நிர்ணயம் செய்யும் முக்கியத்துவம் வாய்ந்த பாங்க் ஆஃப் இங்கிலாந்தின் நிதிக்குழுவில் அவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழுவில் இடம்பெறும் முதல் இந்தியப் பெண் ஸ்வாதி திங்ரா என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டன் நிதியமைச்சராக இந்திய வம்சாவளியைச்சேர்ந்த ரிஷி சுனக் பதவி வகிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

**2. பிரான்ஸின் புதிய பிரதமராக எலிசபெத் போர்ன் நியமனம்**

பிரான்ஸின் புதிய பிரதமராக எலிசபெத் போர்ன் (61) நியமிக்கப்பட்டார். இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் 2–ஆவது பெண் இவர். பிரான்ஸ் அதிபராக இமானுவல் மேக்ரான் கடந்த மாதம் 2ஆவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதையடுத்து, அப்போது பிரதமராக இருந்த ஜீன் காஸ்டெக்ஸ், ராஜிநாமா செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி, ஜீன் காஸ்டெக்ஸ் ராஜிநாமா செய்தார். அவருக்குப் பதிலாக புதிய பிரதமராக எலிசபெத் போர்னை அதிபர் மேக்ரான் நியமித்துள்ளார்.

---

**1. 2022 – ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்பில், இந்தியா, எத்தனை பதக்கங்களை வென்றது?**

அ. 10

ஆ. 12

இ. 15

ஈ. 17 ☑




✓ 2022 – ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்திய அணி ஒரு தங்கம், ஐந்து வெள்ளி மற்றும் 11 வெண்கலம் என மொத்தம் 17 பதக்கங்களுடன் போட்டியை நிறைவு செய்தது. இறுதி நாளில், இந்தியாவின் 'பிரீஸ்டைல்' மல்யுத்த வீரர்களான தீபக் புனியா மற்றும் விக்கி முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர். கிரீகோ ரோமன், பெண்கள் பிரீஸ்டைல், ஆண்கள் பிரீஸ்டைல் என அனைத்துப்பிரிவுகளிலும் இந்திய அணி வென்றது.

**2. 2022 – உலக அறிவுசார் சொத்துரிமை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. IP and Youth innovating for a better future. ☑**

ஆ. IP during Pandemic.

இ. Plagiarism and its effects.

ஈ. Awareness on IPR.




✓ காப்புரிமைகள், பதிப்புரிமை, வர்த்தக முத்திரைகள் மற்றும் வடிவமைப்பு ஆகியவை நமது அன்றாட வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஏப்.26 அன்று 'உலக அறிவுசார் சொத்துரிமை நாள்' கொண்டாடப்படுகிறது. ஜெனீவாவைச் சார்ந்த உலக அறிவுசார் சொத்து அமைப்பு ஐநா சபையின் 15 சிறப்பு நிறுவனங்களுள் ஒன்றாகும். "IP and Youth innovating for a better future" என்பது இந்த ஆண்டுக்கான (2022) உலக அறிவுசார் சொத்துரிமை நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**3. 2022–இல் 21ஆவது உலக கணக்காளர்கள் மாநாட்டை நடத்துகிற நாடு எது?**

அ. சீனா

ஆ. ரஷ்யா

**இ. இந்தியா ☑**

ஈ. வங்காளதேசம்




✓ இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமானது (ICAI) 118 ஆண்டுகளில் முதன்முறையாக 21ஆவது உலக கணக்காளர்கள் மாநாட்டை நடத்தவுள்ளது. இந்த மாநாடு, 1904இல் அந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. இந்நிகழ்வு மும்பையில் புதிதாக கட்டப்பட்ட, 'ஜியோ உலக மாநாட்டு மையத்தில்' 2022 நவம்பரில் நடைபெறும். 130 நாடுகளைச் சார்ந்த சுமார் 6000 உயர்மட்ட கணக்காளர்கள் இதில் நேரடியாக பங்கேற்பார்கள் மற்றும் 10000–க்கும் மேற்பட்டவர்கள் மெய்நிகராக இணைவார்கள். இந்நிகழ்வின் கருப்பொருள், "Building Trust Enabling Sustainability" என்பதாகும்.

**4. உலக நோய்த்தடுப்பு வாரமாக எந்த வாரம் கொண்டாடப்படுகிறது?**

**அ. ஏப்ரல் நான்காவது வாரம் ☑**

ஆ. மே மாதம் நான்காவது வாரம்

இ. ஜனவரி நான்காவது வாரம்

ஈ. செப்டம்பர் நான்காவது வாரம்



✓ ஏப்ரல் நான்காவது வாரம் உலக நோய்த்தடுப்பு வாரமாக கொண்டாடப்படுகிறது. இது உலக நலவாழ்வு அமைப்பின் அனைத்து உறுப்புநாடுகளாலும் கடைப்பிடிக்கப்படுகிறது. நோய்த்தடுப்பு ஊசிமூலம் தடுக்கக்கூடிய நோய்கள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அதன்மூலம் தடுப்பூசி செலுத்துதலை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும். "Long Life for All" என்பது இந்த ஆண்டு உலக நோய்த்தடுப்பு வாரத்தின் கருப்பொருளாகும்.

**5. NASSCOM–இன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. அனந்த் மகேஸ்வரி

**ஆ. கிருஷ்ணன் இராமானுஜம் ☑**

இ. கிரிஸ் கோபாலகிருஷ்ணன்

ஈ. நந்தன் நிலேகனி

✓ மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் தேசிய சங்கம் (NASSCOM), 2022–23ஆம் ஆண்டிற்கான அதன் தலைவராக கிருஷ்ணன் இராமானுஜத்தை நியமிப்பதாக அறிவித்துள்ளது. அவர் தற்போது TATA கன்சல்டன்சி சர்வீசஸில் எண்டர்பிரைஸ் குரோத் குழுமத்தின் தலைவராகவும், NASSCOM–இன் துணைத்தலைவராகவும் பணியாற்றி வருகிறார். அக்சென்ச்சர் இந்தியாவின் தலைவரும் மூத்த நிர்வாக இயக்குநருமான ரேகா எம் மேனனைத் தொடர்ந்து அவர் இப்பதவிக்கு வரவுள்ளார். மைக்ரோசாப்ட் இந்தியாவின் தலைவர் அனந்த் மகேஸ்வரி, 2022–23–க்கான NASSCOM துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**6. அண்மையில், ஐநாஇன் உலக சுற்றுலா அமைப்பிலிருந்து விலகுவதாக அறிவித்த நாடு எது?**

அ. சீனா

**ஆ. ரஷ்யா ☑**

இ. உக்ரைன்

ஈ. பெலாரஸ்

UNWTO
World Tourism Organization

✓ ஸ்பெயினைச் சார்ந்த ஐநாஇன் உலக சுற்றுலா அமைப்பில் இருந்து தங்கள் இடைநீக்கம் குறித்த திட்டமிடப்பட்ட வாக்கெடுப்புக்கு முன்னதாகவே வெளியேற முடிவுசெய்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் தொடர்ச்சியான போர்த்தொடுப்பு காரணமாக, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) தெளிவுபடுத்தியுள்ளது. இந்த அமைப்பிலிருந்து ரஷ்யாவை விலக்கும் செயல்முறை முடிய ஓர் ஆண்டுகாலம் ஆகும்.

**7. ஓர் அண்மைய ஆய்வின்படி, கடந்த 2019ஆம் ஆண்டில் குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினரிடையே ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை என்ன?**



அ. 8 இலட்சம்

ஆ. 18 இலட்சம்

**இ. 86 இலட்சம் ☑**

ஈ. 118 இலட்சம்

✓ லான்செட் இதழில் வெளியிடப்பட்ட குழந்தை மற்றும் இளம்பருவத்தினர் நலம் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவது குறித்த புதிய தொடரின்படி, 2019ஆம் ஆண்டில் குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினரிடையே (0–20 வயது) 86 இலட்சத்திற்கும் அதிகமான இறப்புகள் பதிவாகியுள்ளன. இந்த இறப்புகளில் பாதிக்கும் மேலான இறப்புகள் இறந்து பிறந்த குழந்தைகளின் இறப்பு மற்றும் பச்சிளங்குழந்தைகளின் இறப்பு ஆகும். இறப்புகளில் மூன்றில் ஒரு பங்கு ஒரு மாதம் முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகளில் நிகழ்ந்தது.

**8. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகமானது எந்த OTT தளத்துடன் இணைந்து, 'ஆசாதி கி அம்ரித் ககானியா'வை அறிமுகப்படுத்தியது?**

அ. அமேசான் பிரைம்

**ஆ. நெட்ஃபிளிக்ஸ் ☑**

இ. சோனி லிவ்

ஈ. டிஸ்னி+ ஹாட்ஸ்டார்

✓ OTT தளமான 'Netflix'உடன் இணைந்து உருவாக்கப்பட்ட, 'ஆசாதி கி அம்ரித் ககானியா' என்ற குறுங்காணொளித் தொடரை தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம் அறிமுகப்படுத்தியது. இந்த முயற்சியானது இந்தியர்களின் எழுச்சியூட்டும் கதைகளை வெளிக்கொணர்வதையும், அவர்களின் இலக்குகளை அடைய மக்களை ஊக்குவிப்பவதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தக் காணொளிகள் அமைச்சகம் மற்றும் Netflix–இன் பல்வேறு சமூக ஊடக அலைவரிசைகளிலும், தூர்தர்ஷன் நெட்வொர்க் முழுவதும் ஒளிபரப்பப்படும்.

**9. 2022 – உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மாநாடு நடைபெறும் இடம் எது?**

அ. சென்னை

ஆ. கொல்கத்தா

**இ. புது தில்லி ☑**

ஈ. திருவனந்தபுரம்



✓ இந்தியாவின் பல்வேறு உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் பங்கேற்கும் 39ஆம் மாநாடானது, இந்தியத் தலைமை நீதிபதி N V இரமணா தலைமையில், புது தில்லியில் உள்ள உச்சநீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. முதலாவது தலைமை நீதிபதிகள் மாநாடு 1953 நவம்பரில் நடைபெற்றது; இதுவரை இதுபோன்று 38 மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. கடந்த 2016ஆம் ஆண்டில் இம்மாநாடு நடைபெற்றது. நீதித்துறை தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகாணவும், நீதி வழங்கல் முறையை மேம்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கவும் இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

**10. 'பணியின்போது பாதுகாப்பு மற்றும் நலத்திற்கான உலக நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஏப்ரல்.24

ஆ. ஏப்ரல்.26

**இ. ஏப்ரல்.28 ☑**

ஈ. ஏப்ரல்.30




✓ பணியின்போது பாதுகாப்பு & நலத்திற்கான உலக நாளானது ஆண்டுதோறும் ஏப்.28 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் நல மேலாண்மைகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பானது (ILO) கடந்த 2003ஆம் ஆண்டில், பணியின் போதான விபத்துக்கள் மற்றும் நோய்களைத்தடுக்கும் நோக்கில் இந்த உலக நாளைக் கடைப்பிடிக்கத்தொடங்கியது. "Act together to build a positive safety and health culture" என்பது நடப்பாண்டில் (2022) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உள்நாட்டு வடிவமைப்பில் உருவான போர்க் கப்பல்கள்: அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடக்கி வைத்தார்**

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ள 2 போர்க்கப்பல்களை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடக்கிவைத்தார். பாதுகாப்புத் துறைக்குத் தேவையான போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியவற்றைத் தயாரித்து தரும் மசகான் கப்பல் கட்டும் நிறுவனம், இந்த இரு கப்பல்களையும் வடிவமைத்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: 'ஐஎன்எஸ் சூரத்', 'ஐஎன்எஸ் உதய்கிரி' ஆகிய இரு போர்க்கப்பல்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் 2 போர்க்கப்பல்கள் அறிமுகம் செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.

சூரத் போர்க்கப்பல், 15பி டெஸ்ட்ராயர்ஸ் திட்டத்தின்கீழ் தயாரிக்கப்படும் நான்காவது கப்பலாகும். இந்தக் கப்பலுக்கு மேற்கு இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய வர்த்தக நகரமான சூரத்தின் பெயர்சூட்டப்பட்டுள்ளது.

17ஏ பிரிகேட்ஸ் திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ள 3–ஆவது கப்பல் 'உதய்கிரி'. இந்தக் கப்பலுக்கு ஆந்திர மலைத் தொடரின் பெயர்சூட்டப்பட்டுள்ளது. பி17 பிரிகேட்ஸ் (ஷிவாலிக்) வகை போர்க்கப்பலின் மேம்பட்ட வடிவமாக கூடுதல் சிறப்பம்சங்களுடன் இந்தக் கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 1976–ஆம் ஆண்டு முதல் 2007–ஆம் ஆண்டு வரை 30 ஆண்டுகள் ராணுவத்தில் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட 'உதய்கிரி' போர்க்கப்பலின் மறுபடைப்பாக புதிய போர்க்கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. தமிழகத்தில் எவருக்கெல்லாம் 'கோவோவேக்ஸ்' தடுப்பூசி? பொது சுகாதாரத் துறை இயக்குநர் தகவல்**

தமிழகத்தில் 12 முதல் 17 வயது வரை உள்ளவர்களுக்கு, 'கோவோவேக்ஸ்' கரோனா தடுப்பூசியை வழங்கலாம் என்று பொது சுகாதாரத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

---

**3. ஜமைக்கா நாட்டின் சாலைக்கு அம்பேத்கர் பெயர்: குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் திறப்பு**

அரசுமுறைப்பயணமாக ஜமைக்கா நாட்டுக்கு சென்றுள்ள குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், அந்நாட்டு தலைநகரில் இந்திய சட்ட மேதை அம்பேத்கர் பெயரிட்ட சாலையை திறந்து வைத்தார். மேலும், அம்பேத்கரின் பணிகளை எடுத்துரைக்கும் வகையில் நினைவுச் சின்னத்தையும் அந்நாட்டு உள்ளாட்சித் துறை அமைச்சா் டெஸ்மண்ட் மெக்கன்ஸி திறந்து வைத்தார்.

---

**4. மும்பை பங்குச்சந்தையின் தலைவராக எஸ் எஸ் முந்த்ரா நியமனம்**

மும்பை பங்குச்சந்தையின் (BSE) தலைவராக எஸ் எஸ் முந்த்ரா நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து BSE, தேசிய பங்குச்சந்தையிடம் தெரிவித்ததாவது: பொது நல இயக்குநரான எஸ் எஸ் முந்த்ராவை மும்பை பங்குச் சந்தையின் தலைவராக நியமிப்பதற்கு நிறுவனத்தின் இயக்குநர் குழு அனுமதி வழங்கியுள்ளது. இதையடுத்து, நீதிபதி விக்ரமஜித் சென்னுக்குப் பதிலாக முந்த்ரா BSE தலைவர் பொறுப்பை ஏற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக இருந்த முந்த்ரா மூன்று ஆண்டு பணிக்குப் பிறகு கடந்த 2017 ஜூலையில் ஓய்வுற்றார். அதற்கு முன்பாக, பாங்க் ஆப் பரோடாவின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக பணியாற்றியவர்.

---

**1. 'Not Just a Nightwatchman: My Innings in the BCCI' என்ற நூலின் ஆசிரியர் யார்?**



அ. சௌரவ் கங்குலி

**ஆ. வினோத் ராய் ☑**

இ. ஜக்மோகன் டால்மியா

ஈ. N சீனிவாசன்

✓ இந்தியாவின் 11ஆவது கணக்குத் தணிக்கைத் தலைவரான வினோத் ராய், 'Not Just a Nightwatchman: My Innings in the BCCI' என்ற நூலை எழுதியுள்ளார். இந்திய உச்சநீதிமன்றம் 2017–இல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (BCCI) இடைக்காலத் தலைவராக வினோத் ராயை நியமித்தது. இந்தப் புத்தகம் நிர்வாகிகள் குழுவின் வழிகாட்டுதலின்கீழ் BCCI–இன் செயல்பாடுகள்பற்றிய வெளிப்படையான வர்ணனை என்று கூறப்படுகிறது.

**2. 2022 – டைம்ஸ் உயர்கல்வி (THE) தாக்க தரவரிசையில், இந்தியாவில் உள்ள அனைத்து பொதுப் பல்கலைக் கழகங்களிலும் முதலிடத்தைப் பிடித்துள்ள பல்கலைக்கழகம் எது?**

அ. அண்ணா பல்கலைக்கழகம்

ஆ. மெட்ராஸ் பல்கலைக்கழகம்

**இ. கல்கத்தா பல்கலைக்கழகம் ☑**

ஈ. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்

✓ 2022 – டைம்ஸ் உயர்கல்வி (THE) தாக்க தரவரிசையில் கல்கத்தா பல்கலைக்கழகம் நாட்டிலுள்ள அனைத்து மத்திய மற்றும் மாநில அரசு உதவிபெறும் பொதுப்பல்கலைக்கழகங்களிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

✓ ஒட்டுமொத்தமாக, அமிர்தா விஸ்வ வித்யாபீடம் 41ஆவது இடத்தில் உள்ளது. துருக்கியுடன் இணைந்து மொத்தம் 64 பல்கலைக்கழகங்களுடன், தரவரிசையில் அதிக பிரதிநிதித்துவம் பெற்ற நான்காவது நாடாக இந்தியா உள்ளது. ஆஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகம் 1,406 கல்வி நிறுவனங்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்தத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது.

**3. மிஷன் சாகர் – IXஇன் ஒருபகுதியாக, INS கரியால், அண்மையில் எந்த நாட்டுக்கு முக்கியமான மருந்துகளை கொண்டுசென்று வழங்கியது?**



அ. மாலத்தீவுகள்

**ஆ. இலங்கை ☑**

இ. நேபாளம்

ஈ. ஆப்கானிஸ்தான்

✓ INS கரியால், மிஷன் SAGAR – IXஇன் ஒருபகுதியாக, 760 கிலோகிராமிற்கும் அதிகமான 107 வகையான உயிர்க் காக்கும் மருந்துகளை இலங்கைக்கு வழங்கியது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின்போது மருத்துவ உதவிகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. SAGAR – Security and Growth for All in the Region என்ற அரசாங்கத்தின் பார்வைக்கு இணங்க, நட்பு நாடுகளுக்கு உதவுவதற்காக மிஷன் SAGAR என்ற தலைப்பில் இந்தியக் கடற்படை பல்வேறு மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

**4. 'இந்திய பில்டிங் காங்கிரஸ்' 'சிறந்த உட்கட்டமைப்புத் திட்டம்' விருது வென்ற உட்கட்டமைப்புத் திட்டம் எது?**



அ. Dr சியாமா பிரசாத் முகர்ஜி சுரங்கப்பாதை

**ஆ. அடல் சுரங்கப்பாதை ☑**

இ. ரோஹ்தங் லா கணவாய்

ஈ. சொஜி லா கணவாய்

✓ எல்லைப்புறச் சாலைகள் அமைப்பால் (BRO) ஹிமாச்சல பிரதேசத்தின் ரோதங்கில் கட்டப்பட்ட அடல் சுரங்கப்பாதை, இந்திய கட்டட மாநாட்டின் 'சிறந்த உட்கட்டமைப்புத் திட்ட' விருதைப்பெற்றது. இம்மாநாட்டின் நடுவர் குழு, 2021ஆம் ஆண்டில், 'கட்டமைக்கப்பட்ட சூழலில் சிறந்து விளங்குவதற்கான சிறந்த திட்டமாக' இந்தச் சுரங்கப்பாதையைத் தேர்ந்தெடுத்தது. புதிய ஆஸ்திரிய சுரங்கப்பாதை முறையை (NATM) பயன்படுத்தி கட்டப்பட்ட இது, 2020 அக்டோபர். 3 அன்று பிரதமர் மோடியால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

**5. மருந்து ஏற்றுமதியின் அளவு அடிப்படையில், உற்பத்தியில், உலகளவில் இந்தியா பெற்றுள்ள இடம் எது?**

அ. 1ஆவது

ஆ. 2ஆவது

**இ. 3ஆவது ☑**

ஈ. 5ஆவது

3

✓ மருந்து ஏற்றுமதியின் அளவு அடிப்படையில், உற்பத்தியில், இந்தியா உலகளவில் மூன்றாமிடத்தையும், மதிப்பின் அடிப்படையில் 14ஆமிடத்தையும் பெற்றுள்ளது. உள்நாட்டு மருந்துத் துறையின் தற்போதைய சந்தை அளவு சுமார் $50 பில்லியன் டாலர்களாகும். உலகளாவிய ஏற்றுமதியில் இந்திய மருந்துகளின் பங்கு 5.92 சதவீதமாக உள்ளது. 2021–22இல் மருந்து ஏற்றுமதி ₹1,83,422 கோடியை தொட்டுள்ளதாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது. உலக தடுப்பூசிகளில் 60 சதவீதமும், ஜெனரிக் மருந்துகளில் 20 சதவீதமும் இந்தியாவில் இருந்து வந்தவை.

**6. இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சரானவர் 2ஆவது கேலோ மாஸ்டர்ஸ் விளையாட்டு – 2022ஐ, கீழ்காணும் எந்த இடத்தில் தொடங்கிவைத்தார்?**

அ. மும்பை

ஆ. மைசூரு

இ. பெங்களூரு

**ஈ. புது தில்லி ☑**




✓ இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் புது தில்லியில் 2ஆவது கேலோ மாஸ்டர்ஸ் விளையாட்டு – 2022–ஐ தொடங்கிவைத்தார். இந்த விளையாட்டில், 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து 30 முதல் 95 வயதுக்குட்பட்ட 3000–க்கும் மேற்பட்ட மாஸ்டர் விளையாட்டு வீரர்கள் எட்டு வகை விளையாட்டுகளில் பங்கேற்கின்றனர். இது மே.3ஆம் தேதி அன்று நிறைவடைகிறது.

**7. AAHAR உணவுக்கண்காட்சியில், 'பசையமற்ற' தினை தயாரிப்புகளை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?**

அ. NABARD

**ஆ. APEDA ☑**

இ. FICCI

ஈ. NITI ஆயோக்

✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) புது தில்லியில் நடைபெறும் AAHAR உணவுக்கண்காட்சியில் அனைத்து வயதினருக்கும் மலிவு விலையில் பல்வேறு தினை பொருட்களை அறிமுகப்படுத்தியுள்ளது. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, APEDAஆல் தொடங்கப்பட்ட அனைத்து தினை தயாரிப்புகளும் பசையமற்றவை, 100% இயற்கை மற்றும் காப்புரிமை பெற்றவை. AAHAR–இன் 36ஆவது பதிப்பானது APEDA மற்றும் இந்திய வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது.

**8. கீழ்காணும் எந்த மாதத்தில், 'சர்வதேச இருண்ட வான வாரம்' கொண்டாடப்படுகிறது?**

**அ. ஏப்ரல் ☑**

ஆ. மே

இ. ஜூன்

ஈ. ஜூலை



✓ 'சர்வதேச இருண்ட வான வாரம்' என்பது சர்வதேச இருண்ட வான சங்கம் நடத்தும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும். இந்த ஆண்டு, வானியலாளர்கள் மற்றும் வானியல் ஆர்வலர்கள் ஏப்ரல் 22–30 வரை 2022 சர்வதேச இருண்ட வான வாரத்தைக் கடைப்பிடித்தனர். அதுசமயம் உலகெங்கிலும் நூற்றுக்கணக்கான நிகழ்வுகள் நடத்தப்பட்டன; இதில் பங்கேற்பாளர்கள் வானியற்பியல் குறித்து கற்றல், இரவில் நடைப்பயிற்சி மேற்கொள்வது மற்றும் ஒளி மாசு இல்லாமல் இரவு வானத்தை கூர்நோக்குதல் உள்ளிட்டவற்றில் ஈடுபட்டனர்.

**9. 2022 – ஆசிய சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் P V சிந்து எந்தப் பதக்கம்/நிலையை பெற்றார்?**

அ. தங்கம்

ஆ. வெள்ளி

**இ. வெண்கலம் ☑**

ஈ. 4ஆவது இடம்



✓ இந்தியாவின் P V சிந்து, மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் ஜப்பானின் அகானே யமாகுச்சியிடம் வீழ்ந்து, தனது இரண்டாவது ஆசிய சாம்பியன்ஷிப் வெண்கலப் பதக்கத்தை வென்றார். சிந்து முதல் ஆட்டத்தில் 21–13 என்ற கணக்கில் வெற்றிபெற்றாலும், ஜப்பானின் முதல்நிலை வீரரும் நடப்புச் சாம்பியனுமான அகானே யமாகுச்சியிடம் தோல்வியைச்சந்தித்தார். லீ ஜி ஜியா ஜொனாதன் கிறிஸ்டியை வீழ்த்தி ஆடவர் பட்டத்தை வென்றார்; வாங் ஜி யி பெண்கள் ஒற்றையர் பிரிவில் அகானே யமாகுச்சியை தோற்கடித்தார்.

**10. 'ஜிவ்ஹாலா' என்பது கீழ்காணும் எந்த மாநில அரசால் தொடங்கப்பட்ட ஒரு சிறப்பு கடன் திட்டமாகும்?**

அ. ஆந்திர பிரதேசம்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. பஞ்சாப்

ஈ. மத்திய பிரதேசம்




✓ மகாராஷ்டிர மாநிலா சிறைத்துறையானது அம்மாநிலம் முழுவதும் உள்ள சிறைகளில் உள்ள கைதிகளுக்கு இதன் வகையில் முதலான ஒரு சிறப்பு கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 'ஜிவ்ஹாலா' என்ற இந்தக் கடன் திட்டம் மகாராஷ்டிர மாநில கூட்டுறவு வங்கியால் 3 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகளுக்கு வழங்கப்படுகிறது. புனேவில் உள்ள எரவாடா மத்திய சிறையில் சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு, கிட்டத் தட்ட 60 சிறைகளில் இது நீட்டிக்கப்படும். கைதிகள் தங்கள் குழந்தைகளின் கல்வி, குடும்ப உறுப்பினர்களின் மருத்துவச் சிகிச்சை, சட்டக் கட்டணம் அல்லது பிற செலவுகளுக்கு இக்கடன்களைப் பயன்படுத்தலாம்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சுரேஷ் பாய் கோட்டக் தலைமையில் இந்திய பருத்தி கவுன்சில்: அமைச்சர் பியூஷ் கோயல் அறிவிப்பு**

ஜவுளி அமைச்சகம், வேளாண்மை அமைச்சகம், வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம், நிதி அமைச்சகம், இந்திய பருத்தி கழகம் மற்றும் பருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதிநிதியாய் புகழ்பெற்ற மூத்த பருத்தி நிபுணரான சுரேஷ் பாய் கோட்டக் தலைமையில் இந்திய பருத்தி கவுன்சில் அமைக்கப்படும் என்று மத்திய ஜவுளி, வர்த்தகம் மற்றும் தொழிற்துறை, நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் அறிவித்துள்ளார். இந்தத் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை ஏற்படுத்த விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதுடன் விவாதங்களையும் கவுன்சில் நடத்தும்.

---

**2. தமிழகத்தில் நிகழாண்டில் 34,239 பேருக்கு காசநோய் பாதிப்பு**

தமிழகத்தில் நிகழாண்டில் 34,239 பேர் காசநோயால் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர். காசநோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமன்றி, 2025–க்குள் அந்நோயை முற்றிலும் ஒழிக்கவேண்டும் என்ற இலக்குடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை காசநோயைக் குணப்படுத்தும் விகிதம் கணிசமாக உயர்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த நோயின் தாக்கத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளில் 84% பேரை முதல் சிகிச்சையிலேயே குணப்படுத்துவதாகவும், தொடர் சிகிச்சைகள்மூலம் மீதமுள்ளவர்களையும் பூரண குணமாக்குவதாகவும் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

**3. கேரளத்தில் இந்தியாவின் முதல் அரசு OTT தளம்**

இந்தியாவின் முதலாவது அரசு OTT தளத்தை கேரள அரசு தொடங்கியுள்ளது. நவம்பர்.1–ஆம் தேதிமுதல் இந்த OTT தளம் செயல்படத் தொடங்கும். 'சி ஸ்பேஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த OTT தளம், அமேசான், நெட்ஃபிளிக்ஸ் உள்ளிட்ட இத்துறையில் கோலோச்சும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் OTT தளங்களுக்கு போட்டியளிக்கும் வகையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநில உருவாக்கப்பட்ட தினமான நவ.1 முதல் இந்த OTT தளம் செயல்படத்தொடங்கும். இந்தியாவில் அரசு சார்பில் தொடங்கப்படும் முதல் OTT தளமும் இதுவாகும்.

---

**4. நகர்ப்புறத்திலும் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம்: பிரதமருக்கு பொருளாதார கவுன்சில் பரிந்துரை**

கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் செயல்படுத்தப்படுவதைப்போல் நகர்ப்புறங்களில் வேலை இல்லாதவர்களுக்கும் திட்டம் தொடங்க வேண்டும் என்றும், அனைத்துப் பகுதிகளிலும் ஒரே மாதிரியான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் பொருளாதார ஆலோசனை கவுன்சில் பிரதமர் மோடிக்கு பரிந்துரை செய்துள்ளது.

'இந்தியாவில் சமத்துவமின்மை' என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில், 'சமூக சேவை திட்டங்களுக்கு மத்திய அரசு அதிகப்படியான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்போதுதான் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் மேலும் வறுமையில் சிக்கமாட்டார்கள். ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையேயான ஊதிய வேறுபாடு அதிகமாக உள்ளது. நகர்ப்புறங்களில் தேவைக்கு அதிகமான பணியாளர்கள் உள்ளதால், அவர்களுக்கு பணிகளை வழங்க திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். குறைந்தபட்ச ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும்.

2019–20–இல் நாட்டில் 45.78 சதவீதம் பேர் சுயதொழில் செய்யும் ஊழியர்களாகவும், 33.5 சதவீதம் பேர் மாதாந்திர தொடர் ஊதிய ஊழியர்களாகவும், 20.71% பேர் ஒப்பந்த ஊழியர்களாகவும் இருந்துள்ளனர். அந்தக் காலகட்டத்தில் நாட்டின் வேலையின்மை 4.8 சதவீதமாக இருந்தது. வேலை செய்யும் ஊழியர்களின் சதவீதம் 46.8–ஆக இருந்தது. 95% பள்ளிகளில் கழிப்பறை வசதிகளும், 80.16% பள்ளிகளில் மின் இணைப்புகளும் இருந்தன. தமிழ்நாடு, கோவா, சண்டீகர், தில்லி, தாத்ரா நாகர் ஹவேலி, டாமன் டையு, லட்சத்தீவு, புதுச்சேரியில் பள்ளிகளில் 100 சதவீதம் மின் இணைப்பு உள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. பேரறிவாளன் விடுதலை: உச்சநீதிமன்றத் தீர்ப்பில் கூறியிருப்பது என்ன?**

முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் 7 பேரில் ஒருவரான பேரறிவாளனை விடுதலை செய்து இந்திய உச்சநீதிமன்றம் இன்று (2022 மே.18) உத்தரவிட்டது.

இந்த வழக்கில் ஆயுள்தண்டனை அனுபவித்து வரும் 7 பேரையும் விடுதலை செய்ய மாநில அரசு 2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிவுசெய்து மாநில ஆளுநருக்கு பரிந்துரை அனுப்பிய நிலையில், அந்தப் பரிந்துரையை ஆளுநர் இரண்டரை ஆண்டுகள் கழித்து குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பிவைத்தார். அப்படி அனுப்பியது அரசமைப்புச்சட்டத்தின்படி செல்லுபடியாகும் நடவடிக்கை அல்ல என உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்து உள்ளது.

பேரறிவாளன் தொடர்ந்த இந்த வழக்கை விசாரித்து, நீதியரசர்கள் எல் நாகேஸ்வரராவ், பி ஆர் கவாய், ஏ எஸ் போபன்னா ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு வழங்கிய தீர்ப்பு:

"மாநில அமைச்சரவையின் அறிவுரைக்கு கட்டுப்பட்டே, மாநில ஆளுநர், அரசமைப்புச் சட்டத்தின் 161ஆம் பிரிவின்கீழ் தனது அதிகாரத்தை செயல்படுத்த முடியும் என்பது முன்பு இந்த நீதிமன்றம் வழங்கிய பல தீர்ப்புகளின் மூலம் நன்கு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

**பேரறிவாளன் விடுதலை:** வழக்கின் திசையை மாற்றிய 3 சம்பவங்கள்ஒரு சிறைவாசியை விடுதலை செய்ய மாநில அமைச்சரவை முடிவெடுத்து அதனை பரிந்துரையாக ஆளுநருக்கு அனுப்பிய பிறகு, 161ஆவது பிரிவின்கீழ் ஆளுநர் தனது அதிகாரத்தை செயல்படுத்தாமல் இருப்பது அல்லது அப்படி செயல்படுத்துவதில் விவரிக்க முடியாத தாமதத்தை ஏற்படுத்துவது நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு உரியது.

மாநில அமைச்சரவையின் பரிந்துரையை இரண்டரை ஆண்டு காலம் கழித்து குடியரசுத் தலைவருக்கு மாநில ஆளுநர் அனுப்பியிருக்கும் செயலை அரசமைப்புச் சட்டம் ஆதரிக்கவில்லை; அரசமைப்புச் சட்டத்தின் செயல்பாட்டுக்கும் அது விரோதமாக இருக்கிறது. இதன்மூலம் மாநில அரசின் கருத்தை ஆளுநர் பிரதிபலிக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

வேறு ஒரு வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, இந்திய தண்டனை சட்டத்தின் 302ஆவது பிரிவின்கீழ் தண்டனை குறைப்பு வழங்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளதாக குறிப்பிட்டிருக்கிறது என்று புரிந்து கொள்ளப்பட்டிருப்பது தவறானது. அரசமைப்புச் சட்டமோ, இந்திய தண்டனைச் சட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வேறு சட்டங்களோ அப்படி தண்டனை குறைக்கும் வெளிப்படையான நிர்வாக அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கவில்லை. குறிப்பாக அப்படி மத்திய அரசுக்கு எந்த அதிகாரமும் வழங்கப்படாத நிலையில், இ த ச 302இன் கீழ் மாநில அரசுக்கே நிர்வாக அதிகாரம் உள்ளது.

மனுதாரரின் (பேரறிவாளனின்) நீண்ட கால சிறைவாசத்தையும், சிறையிலும், சிறை விடுப்பிலும் அவரது திருப்தி அளிக்கும் நடத்தையையும், நாள்பட்ட உடல் நலக் கோளாறுகளையும், சிறைவாசத்தில் அவர் பெற்ற கல்வித் தகுதிகளையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இந்தக் கோரிக்கையை மீண்டும் ஆளுநரின் பரிசீலனைக்கே அனுப்புவது பொருத்தமற்றது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

அரசமைப்புச் சட்டத்தின் 142 பிரிவின்கீழ் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, மனுதாரர் 1991ஆம் ஆண்டு பதிவான குற்ற எண் 329இன் கீழ் தண்டனையை அனுபவித்துவிட்டதாக கருதப்படவேண்டும் என்று உத்தரவிடுகிறோம். ஏற்கெனவே பிணையில் உள்ள பேரறிவாளன் விடுதலை செய்யப்படுகிறார்" என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

**1. உலக டுனா நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ. ஏப்ரல்.30

**ஆ. மே.02 ☑**

இ. ஜூன்.03

ஈ. மே.13

✓ ஆண்டுதோறும் மே.2 அன்று உலக டுனா நாள் கொண்டாடப்படுகிறது. கடந்த 2016 டிசம்பரில் ஐநா பொதுச் சபையால் இந்த நாள் நிறுவப்பட்டது; இது, அழிந்துவரும் இவ்வகை மீனினத்தைப் பாதுகாப்பதற்கும் நீடித்த மீன்பிடி நடைமுறைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்குமாக கடந்த 2017 மே 2 அன்று, முதல் முறையாக அனுசரிக்கப்பட்டது. ஐநா சபையின் கூற்றுப்படி, ஒவ்வோர் ஆண்டும் சுமார் 7 மில்லியன் மெட்ரிக் டன் சூரை மீன் இனங்கள் பிடிக்கப்படுகின்றன. "Our Tuna, Our Heritage" என்பது இந்த ஆண்டு (2022) கொண்டாடப்பட்ட உலக சூரை மீன்கள் (டுனா) நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**2. ஆண்டுதோறும், 'உலக கால்நடை நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஏப்ரல் மாதத்தில் வரும் கடைசி சனிக்கிழமை ☑**




ஆ. மே மாதத்தில் வரும் கடைசி சனிக்கிழமை

இ. ஜூன் மாதத்தில் வரும் கடைசி சனிக்கிழமை

ஈ. டிசம்பர் மாதத்தில் வரும் கடைசி சனிக்கிழமை

✓ 'உலக கால்நடை நாளானது' ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் வரும் கடைசி சனியன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2022), ஏப்ரல்.30 அன்று இந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டது. உலகம் முழுவதும் உள்ள கால்நடை மருத்துவர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளை முன்னிலைப்படுத்தவும் மேம்படுத்தவும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. கடந்த 1959ஆம் ஆண்டில், உலக கால்நடை சங்கம் ஸ்பெயினின் மாட்ரிட்டில் நிறுவப்பட்டது. "Strengthening Veterinary Resilience" என்பது நடப்பாண்டில் (2022) கடைப்பிடிக்கப்பட்ட உலக கால்நடை நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**3. இந்திய ஆய்வறிஞர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கியூப்சாட் லக்ஷ்யாSAT என்ற நானோ செயற்கைக்கோள், கீழ்காணும் எந்த நாட்டிலிருந்து விண்ணில் ஏவப்பட்டது?**

அ. அமெரிக்கா



**ஆ. ஐக்கிய இராச்சியம் (UK) ☑**

இ. இஸ்ரேல்

ஈ. ஆஸ்திரேலியா

✓ ஆந்திர பிரதேசத்தைச்சேர்ந்த செயற்கைக்கோள் தொலைத்தொடர்பு ஆய்வறிஞர் சாய் திவ்யா, கியூப்சாட் லக்ஷ்யாசாட் என்ற ஆராய்ச்சி நானோ செயற்கைக்கோளை உருவாக்கியுள்ளார். அவர் தனது கியூப்சாட்டின் முன்மாதிரியை ஐக்கிய இராச்சியத்திற்கு (UK) அனுப்பியதை அடுத்து, B2ஸ்பேஸ் நிறுவனம் அச்செயற்கைக்கோளை ஏவியது. ஸ்பேஸ் பாக்ஸ் பிளாட்ஃபார்மிற்குள் வைக்கப்பட்ட, 'கியூப்சாட்' மாதிரியானது, உயரமான பலூனைப் பயன்படுத்தி அடுக்கு மண்டலத்தின் பல்வேறு அளவுருக்களை சேகரிக்கும் நோக்கோடு அடுக்கு மண்டலத்திற்கு அனுப்பப்பட்டது.

**4. 'Zhongxing 6D' என்ற தகவல் தொடர்பு செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?**



அ. இஸ்ரேல் **ஆ. சீனா ☑**

இ. ஜப்பான் ஈ. தென் கொரியா

✓ சீனத்தின் தேசிய விண்வெளி நிர்வாகம் தனது நீண்ட விண்வெளிப் பயணத்தை வெற்றிகரமாக தரையிறக்கிய அதே நாளில், இரண்டு திட்டங்களைத் தொடங்கியுள்ளது. வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான சிறப்பு தகவல் தொடர்பு செயற்கைக்கோளான, 'Zhongxing 6D'ஐ சுமந்துகொண்டு லாங் மார்ச் 3B ஏவுகணை புறப்பட்டது. இந்தச் செயற்கைக்கோள் தென்சீனக்கடல், தென்கிழக்காசியா மற்றும் பசிபிக் தீவு நாடுகளில் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவைகள் மற்றும் உயர் துல்லிய காணொளிகளை வழங்கும்.

**5. அண்மையில் ஏவப்பட்ட, 'NROL–85' என்பது கீழ்காணும் எந்த நாட்டின் உளவுத்துறை செயற்கைக்கோளாகும்?**

**அ. அமெரிக்கா ☑**

ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

இ. இஸ்ரேல்

ஈ. பிரான்ஸ்



✓ ஸ்பேஸ்X ஆனது அமெரிக்க தேசிய உளவு அலுவலகத்திற்காக (NRO) உளவு செயற்கைக்கோளை ஏவியது. NROL–85 விண்கலத்தை ஏற்றிச்செல்வதற்கு இரண்டு–நிலை பால்கன்–9 ஏவுகணை பயன்படுத்தப்பட்டது.

**6. சமீப செய்திகளில் இடம்பெற்ற ஹர்ஷதா ஷரத் கருட் என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. குத்துச்சண்டை

**ஆ. பளு தூக்குதல் ☑**

இ. ஸ்குவாஷ்

ஈ. ஹாக்கி



✓ ஹர்ஷதா ஷரத் கருட், கிரேக்கத்தில் ஹெராக்லியோனில் நடந்த IWF ஜூனியர் உலக சாம்பியன்ஷிப் போட்டியில், பளு தூக்குதலில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையைப் படைத்தார். அவர் 45–கிலோகிராம் எடைப்பிரிவில் 153–கிலோகிராம் தூக்கி முதலிடம் பிடித்தார். 18 வயதான ஹர்ஷதாவுக்கு முன், IWF ஜூனியர் உலக சாம்பியன்ஷிப்பில், இரண்டு இந்தியர்கள் பதக்கம் வென்றுள்ளனர். 2013–இல் மீராபாய் சானு வெண்கலமும், கடந்த ஆண்டு 2021–இல் அச்சிந்தா ஷூலி வெள்ளிப்பதக்கமும் வென்றிருந்தனர்.

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சஜன் பிரகாஷ் மற்றும் வேதாந்த் மாதவன் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

**அ. நீச்சல் ☑**

ஆ. மட்டைப்பந்து

இ. குத்துச்சண்டை

ஈ. பூப்பந்து



✓ டென்மார்க்கின் கோபன்கேகனில் நடைபெற்ற டேனிஷ் ஓப்பன் நீச்சல் போட்டியில் இந்தியாவின் முன்னணி நீச்சல் வீரர் சஜன் பிரகாஷ் ஆடவருக்கான 200 மீட்டர் பட்டர்பிளை தங்கப்பதக்கத்தையும், ஆண்களுக்கான 1500 மீட்டர் பிரீஸ்டைல் போட்டியில் வேதாந்த் மாதவன் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர். கேரளாவைச் சேர்ந்த 28 வயது நீச்சல் வீரரான சஜன் பிரகாஷ், பிரீஸ்டைல், பட்டர்பிளை மற்றும் மெட்லி போட்டிகளில் நிபுணத்துவம் பெற்றவர். 16 வயதான வேதாந்த் மாதவன், 2021 மார்ச்சில் லாட்வியா ஓப்பனில் வெண்கலப்பதக்கம் வென்றிருந்தார். கடந்த ஆண்டு ஜூனியர் தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப்பில் ஏழு பதக்கங்களை வென்றார்.

**8. பேரிடர் தாங்கும் உட்கட்டமைப்புக்கான சர்வதேச மாநாட்டை நடத்திய நாடு எது?**

அ. பிரான்ஸ்

ஆ. ஐக்கிய இராச்சியம் (UK)

**இ. இந்தியா ☑**

ஈ. நியூசிலாந்து

✓ பேரிடர் தாங்கும் உட்கட்டமைப்புக்கான கூட்டணியானது (CDRI) புது தில்லியில் பேரிடர் தாங்கும் உட்கட்டமைப்பு (ICDRI) பற்றிய சர்வதேச மாநாட்டை நேரடி மற்றும் இணையவழி முறைமைகளில் நடத்தியது. இது அமெரிக்க அரசாங்கத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் பிரதமர்கள் மற்றும் கானா மற்றும் மடகாஸ்கர் அதிபர்கள் கலந்துகொண்டனர். இந்தியா, COP26 2021–இல், 'நெகிழ்திறன்மிக்க தீவு நாடுகளுக்கான உட்கட்டமைப்பு' என்ற முன்னெடுப்பைத் தொடங்கியது.

**9. 2022–இல் நடைபெற்ற இரண்டாவது 'இந்தியா–நார்டிக் உச்சிமாநாட்டை' நடத்திய நாடு எது?**



அ. பின்லாந்து

ஆ. நெதர்லாந்து

**இ. டென்மார்க் ☑**

ஈ. பெல்ஜியம்

✓ டென்மார்க் தலைநகரம் கோபன்கேகனில் நடைபெற்ற இரண்டாவது இந்தியா–நார்டிக் உச்சிமாநாட்டில் பிரதமர் மோடி கலந்துகொண்டார். இந்த மாநாட்டின்போது டென்மார்க், சுவீடன், பின்லாந்து, நார்வே மற்றும் ஐஸ்லாந்து பிரதமர்களுடன் உக்ரைன் நிலவரங்கள் குறித்து அவர் விவாதித்தார். இந்தியாவும் டென்மார்க்கும் சுமார் ஒன்பது ஒப்பந்தங்களில் அப்போது கையெழுத்திட்டன. அவற்றுள் பசுமை உத்திகள், இடம்பெயர்வு மற்றும் நகர்வு, கலாச்சார பரிமாற்றத்திட்டம் போன்றவை அடங்கும்.

**10. 2022–இல் FIFA U–17 மகளிர் உலகக்கோப்பையை நடத்தும் நாடு எது?**

அ. பிரேசில்

**ஆ. இந்தியா ☑**

இ. கனடா

ஈ. கிரேக்கம்

✓ நடப்பு 2022ஆம் ஆண்டில், FIFA U–17 மகளிர் உலகக்கோப்பையை இந்தியா நடத்துகிறது. இந்த நிகழ்வானது புவனேசுவரம், கோவா மற்றும் நவி மும்பை ஆகிய மூன்று இடங்களில் நடைபெறும். போட்டிக்கான டிரா, ஜூன்.24 அன்று சூரிச்சில் நடைபெறும். இப்போட்டியை நடத்தும் இந்தியா மற்றும் பிரேசில், சிலி, சீனா PR, கொலம்பியா, ஜப்பான் மற்றும் நியூசிலாந்து ஆகிய ஆறு நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்வதை உறுதி செய்துள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆ இரா வேங்கடாசலபதிக்கு இயல் விருது**

கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பின் 2021ஆம் ஆண்டுக்கான, 'இயல் விருது' தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வாளரான ஆ இரா வேங்கடாசலபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதைப்போல கட்டுரை பிரிவில் நீதிபதி சந்துருவுக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பின் சார்பில் ஆண்டுதோறும் தமிழ் இலக்கியத்துக்குப் பங்களிப்பைச் செலுத்தியவர்களுக்கு 'இயல் விருது' என்ற பெயரில் வாழ்நாள் தமிழ் இலக்கியச் சாதனை விருது வழங்கப்பட்டு வருகிறது. இது தமிழின் மிக முக்கியமான விருதாகப் பார்க்கப்படுகிறது. அந்த வகையில், ஆ இரா வேங்கடாசலபதிக்கு 2021–ஆம் ஆண்டுக்கான 'இயல் விருது' அறிவிக்கப்பட்டுள்ளது. புனைவு இலக்கியப் பிரிவில் பா அ ஜயகரன், கவிதைப்பிரிவில் ஆழியாள், கட்டுரைப்பிரிவில் நீதிபதி சந்துரு, மொழிபெயர்ப்புப்பிரிவில் மார்த்தா ஆன் செல்பி ஆகியோருக்கும் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

'இயல் விருதை' ஏற்கெனவே, சுந்தரராமசாமி, அம்பை, ஐராவதம் மகாதேவன், நாஞ்சில் நாடன், ஜெயமோகன், சுகுமாரன், எஸ் இராமகிருஷ்ணன், இமையம், வண்ணதாசன், சு வெங்கடேசன் உள்ளிட்டோர் பெற்றுள்ளனர்.

---

**2. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.4%: ஐநா கணிப்பு**

உக்ரைன்–ரஷியா இடையேயான போர்ச்சூழல் காரணமாக நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.4 சதவீதம் அளவுக்கே இருக்கும் என ஐநா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஐநாவின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை வெளியிட்ட பொருளாதாரம் குறித்த ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பெருந்தொற்றின் பாதிப்பிலிருந்து மீண்டுவரும் உலக பொருளாதாரத்தை உக்ரைன்–ரஷியா இடையே நீடித்து வரும் போர் நிலைகுலையச் செய்துள்ளது. உணவு மற்றும் இதர பொருள்களின் விலை அதிகரிப்புக்கு காரணமாகியுள்ளதுடன் பணவீக்கத்தைத் தூண்டி உலக நாடுகளை அழுத்தத்துக்கு உள்ளாக்கியுள்ளது. மேலும், ஐரோப்பாவில் நெருக்கடிகளை தூண்டிவிட்டுள்ளது.

2022 ஜனவரியில் வெளியிடப்பட்ட மதிப்பீட்டில் சர்வதேச பொருளாதாரம் 4.0 சதவீதம் அளவுக்கு வளர்ச்சிகாணும் எனக் கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது சர்வதேச நிலவரங்கள் முற்றிலும் மாறியுள்ளதால் உலகப் பொருளாதாரம் 3.1 சதவீத வளர்ச்சியை மட்டுமே எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவைப் பொருத்தவரையில், அதிக பணவீக்கம், வேலைவாய்ப்பு சந்தையில் காணப்படும் சமச்சீரற்ற மீட்சி நிலையால் தனியார் நுகர்வு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் பாதிப்பு ஆகியவற்றுக்கிடையிலும் வேகமாக வளர்ச்சி கண்டு வரும் மிக முக்கிய பொருளாதார நாடாக இன்னும் உள்ளது.

கடந்த ஆண்டில் இந்தியா 8.8 சதவீத பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்த நிலையில், நடப்பாண்டில் 6.4 சதவீத வளர்ச்சியை மட்டுமே எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2023 நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி மேலும் சரிந்து 6 சதவீதமாகும். உணவு மற்றும் எரிபொருள்களின் விலை அதிகரிப்பால், உலக பணவீக்கம் 2022–இல் 6.7 சதவீதமாக அதிகரிக்கும். இது, 2010–2020 ஆண்டுகளுக்கிடையில் காணப்பட்ட சர்வதேச பணவீக்கமான 2.9 சதவீதத்தைக் காட்டிலும் இருமடங்கு அதிகம் என ஐநா ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. உலக சாம்பியன் நிகாத் ஜரீன்**

இஸ்தான்புல்லில் நடைபெற்ற உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் நிகாத் ஜரீன் வாகை சூடினார். இப்போட்டியில் சாம்பியன் ஆன 5–ஆவது இந்திய வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். 52 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற அவர், இறுதிச்சுற்றில் 5–0 என்ற கணக்கில் தாய்லாந்தின் ஜித்போங் ஜூடாமப்ஸ தோற்கடித்து தங்கப்பதக்கம் வென்றார். நிகாத் ஜரீனுக்கு முன், மேரி கோம் (2002, 2005, 2006, 2008, 2010, 2018), சரிதா தேவி (2006), ஜெனி R L (2006), லேகா K C (2006) ஆகியோர் மட்டுமே உலக சாம்பியன் பட்டம் வென்ற இந்திய வீராங்கனைகளாவர். இந்த ஆண்டு போட்டியில் நிகாத் ஜரின் தவிர்த்து, மனீஷா மௌன் (57 கிலோ), பர்வீன் ஹூடா (63 கிலோ) ஆகியோர் வெண்கலம் வென்றிருந்தனர்.

---

**4. துப்பாக்கி சுடுதல்: இந்தியா முதலிடம்**

சர்வதேச துப்பாக்கி சுடுதல் சம்மேளனம் (ISSF) நடத்திய ஜூனியர் உலகக்கோப்பை போட்டியில் இந்தியா 33 பதக்கங்கள் வென்று முதலிடம் பிடித்து நிறைவுசெய்துள்ளது. ஜெர்மனியில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியாவின் பதக்க வரிசையில் 13 தங்கம், 15 வெள்ளி, 5 வெண்கலம் அடங்கும்.

---

**5. காற்று மாசு உயிரிழப்பு: முதலிடத்தில் இந்தியா**

அனைத்து விதமான மாசுபாடு காரணமாக உலகிலேயே அதிகபட்சமாக இந்தியாவில் 23.5 இலட்சம் பேர் உயிர் இழந்திருப்பது தெரியவந்துள்ளது. உலக அளவில் இந்த எண்ணிக்கை 90 இலட்சமாக உள்ளது. இதில் காற்று மாசு முக்கியப்பங்கு வகிக்கிறது. அமெரிக்காவைச் சேர்ந்த "தி லான்செட்" மருத்துவ இதழ் உலகம் முழுவதும் மாசுபாடுகள் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் குறித்து ஆய்வு நடத்தி, அது தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் வாகனப்போக்குவரத்து மற்றும் தொழில் நிறுவனங்கள் அதிகரித்துள்ள நிலையில், அவற்றால் ஏற்படும் காற்று மாசுவும் அதிகரித்து வருவதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முதலிடத்தில் இந்தியா:** உலக அளவில் 2019ஆம் ஆண்டில் அனைத்து வகையான மாசுபாட்டுக்கு 90 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். அதில் வீடுகளிலிருந்து ஏற்படும் காற்று மாசு மற்றும் சுற்றுப்புற காற்று மாசு காரணமாக மட்டும் 66.7 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். இதில் இந்தியா 23.5 இலட்சம் உயிரிழப்புகளுடன் முதலிடத்தில் உள்ளது. அதில் சுற்றுப்புறச்சூழல் மாசுபாடு காரணமாக 9.8 இலட்சம் உயிரிழப்புகளும், வீடுகளினால் ஏற்படும் காற்று மாசு காரணமாக 6.1 இலட்சம் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

**இந்தியாவில் காரணம் என்ன?** இந்தியாவைப் பொருத்தவரை வீடுகளில் விறகுகள் உள்ளிட்ட உயிரிக்கழிவுகள் எரிக்கப்படுவதே காற்று மாசுவுக்கு மிக முக்கியக் காரணமாக உள்ளது. அதற்கு அடுத்தபடியாக, நிலக்கரி எரிப்பது, பயிர்க்கழிவுகளை எரிப்பது உள்ளிட்ட காரணங்களால் காற்று மாசு ஏற்படுகிறது.

காற்று மாசு அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய தூய்மை காற்று திட்டம் அறிமுகம், தேசிய தலைநகர பிராந்திய பகுதியில் காற்று தர மேலாண்மை ஆணையம் அமைத்தது, மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியங்கள் மூலமான நடவடிக்கைகள் எனப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இருந்தபோதும், காற்று மாசுவைக் கட்டுப்படுத்த வலுவான மையப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதன் காரணமாக, ஒட்டுமொத்த காற்றின் தரத்தின் மேம்பாடு குறைவாகவும், சீரற்றதாகவும் உள்ளது.

**₹357 லட்சம் கோடி இழப்பு**

மாசுபாட்டால் ஏற்பட்டிருக்கும் கூடுதல் உயிரிழப்புகள் காரணமாக உலக அளவில் 2019ஆம் ஆண்டில் ₹357 லட்சம் கோடி (4.6 டிரில்லியன் டாலர்) மதிப்பில் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. இது மொத்த உலகப் பொருளாதாரத்தில் 6.2 சதவீதமாகும். இந்தியாவில் காற்று மாசு, ஓசோன் மாசு, தொழில்சார் புற்றுநோய்கள் உள்ளிட்ட நவீன வடிவ மாசுபாடு காரணமாக ஏற்படும் பொருளாதார இழப்பு 2000–2019ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் அதிகரித்துள்ளது. இது ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**நீர்நிலை மாசுபாடு**

காற்று மாசுவுக்கு அடுத்தபடியாக நீர்நிலை மாசுபாடு காரணமாக உலக அளவில் 13.6 இலட்சம் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

---

**1. புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்ட, 'இராம்கர் விஷதாரி சரணாலயம்' அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. குஜராத்

ஆ. மத்திய பிரதேசம்

**இ. இராஜஸ்தான் ☑**

ஈ. பஞ்சாப்

✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ் அறிவித்தபடி, இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள இராம்கர் விஷதாரி சரணாலயம் இந்தியாவின் 52ஆவது புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ராந்தம்போர், சரிஸ்கா மற்றும் முகுந்த்ராவுக்குப் பிறகு இராஜஸ்தானின் நான்காவது புலிகள் காப்பகம் இதுவாகும். தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையமானது கடந்த ஆண்டு இராம்கர் விஷதாரி வனவுயிரி சரணாலயத்தை புலிகள் காப்பகமாக மாற்றுவதற்கு தனது ஒப்புதலை அளித்தது.

**2. பாதுகாப்பு அமைச்சரால் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'சூரத்' மற்றும் 'உதயகிரி' என்பவை என்ன?**



**அ. போர்க்கப்பல்கள் ☑**

ஆ. எறிகணைகள்

இ. விண்வெளி ஏவூர்திகள்

ஈ. போர் வானூர்திகள்

✓ உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'சூரத்' என்ற 15B வகையைச் சேர்ந்த போர்க்கப்பலையும், 'உதயகிரி' என்ற 17A வகை போர்க்கப்பலையும் மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் மும்பையில் வைத்து அறிமுகப்படுத்தினார். இந்த இரு போர்க்கப்பல்களையும் மசகான் கப்பல்கட்டும் நிறுவனம் காட்டியுள்ளது. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இரண்டு போர்க்கப்பல்கள் ஒன்றாக அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல்முறையாகும்.

**3. XV உலக வனவியல் கூட்டத்தை நடத்தும் நாடு எது?**

அ. ஜப்பான்

ஆ. அமெரிக்கா

**இ. தென் கொரியா ☑**

ஈ. அர்ஜென்டினா

✓ தென் கொரியாவின் சியோலில் நடைபெற்ற XV உலக வனவியல் கூட்டத்தின்போது, 'சியோல் பிரகடனம்' ஏற்றுக் கொள்ளப்பட்டது. பங்கேற்ற 141 நாடுகளால் கையெழுத்திடப்பட்ட பிரகடனம், மனிதகுலத்தின் பல நெருக்கடிகளைச் சமாளிக்க உதவும் முக்கிய பகுதிகளை அடையாளங்காண்பதில் கவனஞ்செலுத்துகிறது. 2030–ஆம் ஆண்டுக்குள் பாழ்நிலங்களை மீட்டெடுப்பதற்கான முதலீடுகளை மும்மடங்காக உயர்த்த வேண்டியதன் அவசியத்தையும் இது சிறப்புற எடுத்துரைத்தது.

**4. 'SRESTHA' திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, கீழ்காணும் எந்த மாநிலத்திற்கு, உலக வங்கி, $350 பில்லியன் டாலர்களை வழங்கியது?**

அ. அஸ்ஸாம்

**ஆ. குஜராத் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. தென் கொரியா

✓ குஜராத் மாநிலத்தில், Systems Reform Endeavours for Transformed Health Achievement in Gujarat (**SRESTHA–G**) முன்னெடுப்புகளைச் செயல்படுத்த உலக வங்கி $350 பில்லியன் டாலர்களை குஜராத் மாநிலத்திற்கு வழங்கியது. SRESTHA–G திட்டத்தின்கீழ், கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு சுகாதார சேவைகளை விரிவுபடுத்துவதற்கும், மாநிலத்தின் தொற்றுநோய் தடுப்புமுறையை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

**5. 2021–இல் அயல்நாடுகளிலிருந்து தாய்நாட்டிற்கு அதிகம் பணமனுப்பிய நாடுகளில் முதலிடம் பிடித்த நாடு எது?**




**அ. இந்தியா ☑**

ஆ. எகிப்து

இ. இந்தோனேசியா

ஈ. மெக்ஸிக்கோ

✓ 2021–இல் அயல்நாடுகளிலிருந்து தாய்நாட்டிற்கு அதிகம் பணமனுப்பிய முதல் 5 நாடுகளாக இந்தியா, மெக்ஸிக்கோ, சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் உள்ளன. உலக வங்கியின் சமீபத்திய இடம்பெயர்வு மற்றும் வளர்ச்சி குறித்த சுருக்கமான அறிக்கையின்படி, குறைந்த மற்றும் நடுத்தர வருமானங்கொண்ட நாடுகளுக்கு அனுப்பப்படும் பணம் இந்த ஆண்டு 4.2 சதவீதம் அதிகரித்து $630 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**6. 'இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு'டன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

அ. நிதியமைச்சகம்

**ஆ. வெளியுறவு அமைச்சகம் ☑**

இ. அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (ITEC) திட்டம் என்பது வெளியுறவு அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும். இதில், ITECஇன் உறுப்பினர்களின் பங்கேற்பாளர்கள் பயிற்சிபெறுகின்றனர். இந்தியக்குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்தின் ஜமைக்கா பயணம், வரலாற்றில் இந்தியக்குடியரசுத்தலைவரொருவர் ஜமைக்கா நாட்டுக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாகப் பார்க்கப்படுகிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் ரீதியான உறவுகள் நிறுவப்பட்ட 60ஆவது ஆண்டு நிறைவும் இதோடு ஒத்திசைகிறது.

**7. சமீபத்திய அறிக்கையின்படி, காற்று மாசு காரணமாக நிகழ்ந்த இறப்புகளில் அதிகபட்ச எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ள நாடு எது?**



அ. அமெரிக்கா

ஆ. ரஷ்யா

**இ. இந்தியா ☑**

ஈ. சீனா

✓ லான்செட் இதழில் வெளியிடப்பட்ட மாசு மற்றும் நலம் குறித்த அண்மைய அறிக்கையின்படி, 2019ஆம் ஆண்டில், இந்தியாவில் நிகழ்ந்த 16.7 இலட்சம் இறப்புகளுக்கு காற்று மாசுபாடு காரணமாக அமைந்துள்ளது. இது அந்த ஆண்டு நாட்டில் நிகழ்ந்த மொத்த இறப்புகளில், 17.8 சதவீதம் ஆகும். இந்தியாவில் காற்று மாசு தொடர்பான இறப்புகளில் பெரும்பாலானவை PM2.5 மாசுபாட்டால் ஏற்படுகின்றன. உலக அளவில், காற்று மாசுபாடு மட்டும் 66.7 இலட்சம் இறப்புகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

**8. வாட்நகர் சர்வதேச மாநாட்டை நடத்தும் மாநிலம் எது?**



அ. இராஜஸ்தான்

**ஆ. குஜராத் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. மத்திய பிரதேசம்

✓ மத்திய கலாச்சார விவகார அமைச்சகத்துடன் இணைந்து காந்திநகரில் வாட்நகர் சர்வதேச மாநாட்டை குஜராத் மாநில முதலமைச்சர் பூபேந்திர படேல் தொடங்கிவைத்தார். சர்வதேச அருங்காட்சியக நாளன்று, குஜராத் மாநில அரசு வாட்நகர் நகரத்தை உலகத்தரம்வாய்ந்த பாரம்பரிய சுற்றுலாத் தலமாக மாற்றுவதாக அறிவித்தது. வாட்நகர் அதன் நினைவுச்சின்னங்கள், கலைப்படைப்புகள் மற்றும் தொல்பொருள் மற்றும் வரலாற்று பாரம்பரியத்திற்காக பிரபலமாக அறியப்படுகிறது. வாட்நகர், பிரதமர் நரேந்திர மோதியின் சொந்த ஊராகும்.

**9. கீழ்காணும் எந்த நாட்டின் அடுத்த அதிபராக ஹசன் ஷேக் முகமது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்?**




அ. தென்னாப்பிரிக்கா

ஆ. பிரான்ஸ்

**இ. சோமாலியா ☑**

ஈ. அர்ஜென்டினா

✓ ஆப்பிரிக்க நாடான சோமாலியாவின் அடுத்த அதிபராக அந்நாட்டுச் சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னாள் தலைவர் ஹசன் ஷேக் முகமதுவைத் தேர்ந்தெடுத்துள்ளனர். 2012 முதல் 2017 வரை சோமாலியாவின் அதிபராக பதவி வகித்த ஹசன் ஷேக் முகமது, தலைநகரம் மொகடிஷுவில் நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்றார்.

**10. பன்னிரண்டாவது ஹாக்கி இந்தியா சீனியர் மகளிர் தேசிய சாம்பியன்ஷிப் – 2022இல் சாம்பியன் பட்டம் வென்ற மாநிலம் எது?**




அ. கர்நாடகா

ஆ. ஜார்கண்ட்

**இ. ஒடிஸா ☑**

ஈ. மேற்கு வங்கம்

✓ 12ஆவது ஹாக்கி இந்தியா சீனியர் மகளிர் தேசிய சாம்பியன்ஷிப் – 2022இல் ஒடிஸா சாம்பியன் பட்டம் வென்றது. மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற இந்தச் சாம்பியன்ஷிப்பின் இறுதிப்போட்டியில் கர்நாடகாவை 2–0 என்ற கோல் கணக்கில் ஒடிஸா வென்றது. ஹரியானாவை வீழ்த்தி ஜார்கண்ட் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நிதியாண்டு 2021–22–இல் $83.57 பில்லியன் அமெரிக்கன் டாலர் என்ற அளவுக்கு மிக அதிகமான வருடாந்திர அயல்நாட்டு நேரடி முதலீட்டை இந்தியா பெற்றுள்ளது**

நிதியாண்டு 2021–22–இல் $83.57 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவுக்கு மிக அதிகமான வருடாந்திர அயல்நாட்டு நேரடி முதலீட்டை இந்தியா பெற்றுள்ளது. இது 2014–2015–இல் வெறும் $45.15 பில்லியன் டாலராக இருந்தது. உக்ரைனில் இராணுவ நடவடிக்கை, COVID–19 பெருந்தொற்று ஆகியவை இருந்தபோதும், 2020–21ஐ விட வெளிநாட்டு நேரடி முதலீட்டு வரவு 1.60 பில்லியன் அமெரிக்க டாலர் அதிகமாக வரப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

பொருள் உற்பத்தித் துறையில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு உகந்த நாடாக இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தத் துறையில் 2020–21 நிதியாண்டுடன் ($12.09 பில்லியன் டாலர்) ஒப்பிடுகையில், 2021–22 நிதியாண்டில் 76% உயர்வு ($21.34 பில்லியன் டாலர்) இருந்தது. இந்தியாவில் கொவிடுக்கு முந்தைய காலத்தில் (2018 பிப்ரவரி முதல் 2020 பிப்ரவரி வரை) $141.10 பில்லியன் டாலராக இருந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு வரவு கொவிடுக்கு பிந்தைய காலத்தில் (2020 மார்ச் முதல் 2022 மார்ச் வரை) 23% அதிகரித்து $171.84 பில்லியன் டாலராக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அயல்நாட்டு நேரடி முதலீட்டு வரவில் 2021–22 நிதியாண்டில் முதன்மை நாடாக 27 சதவீதத்துடன் சிங்கப்பூரும், 18 சதவீதத்துடன் அமெரிக்கா இரண்டாவது இடத்திலும், 16 சதவீதத்துடன் மொரீஷியஸ் மூன்றாவது இடத்திலும் இருந்தன.

---

**2. 2022 மே.20 – உலக தேனீக்கள் நாள்.**

**கருப்பொருள்: Bee Engaged: Celebrating the Diversity of Bees and Beekeeping Systems.**

---

**3. 2022 மே.20 – உலக எடை அளவியல் நாள்.**

**கருப்பொருள்: Metrology in the Digital Era.**

---

**4. விவசாய மற்றும் கிராமப்புற தொழிலாளர்களுக்கான அகில–இந்திய நுகர்வோர் விலைக்குறியீட்டு எண் – ஏப்ரல், 2022 அதிக புள்ளிகளுடன் தமிழ்நாடு முதலிடம்**

ஏப்ரல், 2022 மாதத்திற்கான விவசாய மற்றும் கிராமப்புற தொழிலாளர்களுக்கான அகில–இந்திய நுகர்வோர் விலைக்குறியீட்டு எண் (அடிப்படை: 1986/87=100) 10 புள்ளிகள் அதிகரிக்கப்பட்டு 1,108 மற்றும் 1,119 புள்ளிகளாக உள்ளது. அரிசி, கோதுமை–ஆட்டா, சோளம், கம்பு, கேழ்வரகு, காய்கறி & பழங்கள் போன்றவற்றின் விலை உயர்வே, விவசாய மற்றும் கிராமப்புற தொழிலாளர்களுக்கான பொதுக்குறியீடு உயர்வுக்கு முக்கியக்காரணமாக அமைந்து உள்ளது. இந்தக் குறியீடு உயர்வு / வீழ்ச்சி, மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். விவசாயத் தொழிலாளர்களைப் பொருத்தவரை, 19 மாநிலங்களில் 1 புள்ளி முதல் 20 புள்ளிகள் வரை உயர்ந்துள்ள வேளையில், தமிழ்நாட்டைப் பொருத்தவரை 7 புள்ளிகள் வீழ்ச்சியடைந்துள்ளது.

நுகர்வோர் விலைக்குறியீட்டுப்பட்டியலில் 1,275 புள்ளிகளுடன் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது; அதேவேளையில் ஹிமாச்சல பிரதேசம் 880 புள்ளிகளுடன் கடைசியில் உள்ளது. கிராமப்புறத் தொழிலாளர்களைப் பொருத்தவரை, 19 மாநிலங்களில் 2 முதல் 19 புள்ளிகள் அதிகரித்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் 7 புள்ளிகள் குறைந்துள்ளது. இந்தக் குறியீட்டில், 1263 புள்ளிகளுடன் தமிழ்நாடு முதலிடத்திலும், 931 புள்ளிகளுடன் ஹிமாச்சல பிரதேசம் கடைசி இடத்திலும் உள்ளன. தமிழ்நாட்டில் அரிசி, மீன், வெங்காயம், காய்கறி & பழங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்ததே, இந்த சாதனைக்குக் காரணமாகும்.

---

**5. உதகையில் 124ஆவது மலர்க்காட்சி**

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் அமைந்துள்ள அரசு தாவரவியல் பூங்காவில் 124ஆவது மலர்க்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

---

**6. சுதந்திரத்துக்குப் பிறகு முதல் முறை...**

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, முதல்முறையாக கோடைக்காலத்தில் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதற்கு முன்பாக, 1942, 1943, 1944 மற்றும் 1945 ஆகிய ஆண்டுகளில் மேட்டூர் அணையில் இருந்து கோடைக்காலமான மே மாதத்தில் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

**1. 'நகராட்சி திட மற்றும் திரவக்கழிவுகள் மீதான சுற்றுப்பொருளாதாரம்' என்ற அறிக்கையை வெளியிட்ட நடுவண் அமைச்சகம் எது?**

**அ. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

ஆ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்



✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது நகராட்சி திட மற்றும் திரவக்கழிவுகள் மீதான சுற்றுப்பொருளாதாரம்' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. தற்போது, இந்தியாவில் நாடோறும் 1.4 இலட்சம் டன் திடக்கழிவுகள் உருவாகின்றன; அதில் 35 சதவீதம் உலர் கழிவுகளாம். ஈர, திட மற்றும் கட்டுமானக் கழிவுகளை சுத்திகரிப்பதன்மூலம் ஒரு நகராட்சி ஆண்டுக்கு ₹30,000 கோடியை வருவாயாக ஈட்டமுடியும் என இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது.

**2. 2022–இல் நடந்த 'BRICS வெளியுறவு அமைச்சர்கள்' கூட்டத்திற்கு தலைமைதாங்கிய நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. ரஷ்யா

ஈ. பிரேசில்

✓ 2022–இல் BRICS வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை சீனா நடத்தியது. இந்தியாவின் வெளியுறவு அமைச்சகம் சார்பாக S ஜெய்சங்கர் இக்கூட்டத்தில் பங்கேற்றார்; அங்கு வெளியுறவு அமைச்சர்கள் உக்ரைன் நிலைமை குறித்து விவாதித்தனர். மேலும் ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான பேச்சுவார்த்தைகளை ஆதரித்தனர். வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் நாடுகள் குறித்த BRICS வெளியுறவு அமைச்சர்களின் பேச்சுவார்த்தையிலும் இந்திய வெளியுறவு அமைச்சர் பங்கேற்றார்.

**3. உச்சநீதிமன்றத்தின் சமீபத்திய முக்கிய தீர்ப்பின்படி, கீழ்காணும் எந்த அமைப்பின் பரிந்துரை மத்திய மற்றும் மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தாது?**

**அ. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) கவுன்சில் ☑**

ஆ. நிதி ஆணையம்

இ. NITI ஆயோக்

ஈ. நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு கவுன்சில்

✓ சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) கவுன்சிலின் பரிந்துரைகள் மத்திய, மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தாது என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. கடல்வழியாக பொருட்களை இறக்குமதி செய்யும்போது ஒருங்கிணைந்த GST (IGST) விதிப்பது குறிப்பது வழக்கொன்றில் உச்சநீதிமன்றம் இவ்வாறான தீர்ப்பை அளித்தது. GST மீது சட்டமியற்ற நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கு சமமான அதிகாரங்கள் இருப்பதாகவும், GST கவுன்சில் இணக்கமான முறையில் செயல்பட வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

**4. இராஜீவ்காந்தி கொலைவழக்குக் குற்றவாளியான A G பேரறிவாளனை விடுதலை செய்ய உச்சநீதிமன்றம் எந்த அரசியல் சட்டத்தின்கீழ் ஆணையிட்டது?**

**அ. பிரிவு 142 ☑** ஆ. பிரிவு 161

இ. பிரிவு 123 ஈ. பிரிவு 260

✓ இராஜீவ்காந்தி கொலைவழக்குக் குற்றவாளி A G பேரறிவாளனை விடுதலை செய்ய உத்தரவிட, அரசியலமைப்புச் சட்டத்தின் 142ஆவது பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அசாதாரண அதிகாரத்தை உச்சநீதிமன்ற நீதிபதிகள் அமர்வு பயன்படுத்தியது. அரசியல் சாசனத்தின் 161ஆவது பிரிவின்கீழ் பேரறிவாளனுக்கு மன்னிப்பு வழங்குவதில் தமிழ்நாடு ஆளுநர் அதீத தாமதம் காட்டி முடிவெடுக்காததையும் உச்சநீதிமன்றம் அப்போது மேற்கோள் இட்டு காட்டியது.

**5. 'உலகளாவிய உணவுப்பாதுகாப்பு–வினைக்கழைப்பு' என்ற உயர்மட்ட அமைச்சர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்த நாடு எது?**

அ. இந்தியா

ஆ. சீனா

**இ. அமெரிக்கா ☑**

ஈ. ஐக்கிய இராச்சியம் (UK)



✓ நியூயார்க்கில் நடைபெற்ற, 'Global Food Security–Call to Action' குறித்த உயர்மட்ட அமைச்சர்கள் கூட்டத்திற்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் தலைமை தாங்கினார். இந்தியாவின் மத்திய வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி முரளீதரன், இக்கூட்டத்தில் உலகளாவிய உணவுப்பாதுகாப்பின்மை குறித்து கவலை தெரிவித்தார். உணவு, எரிசக்தி மற்றும் நிதி தொடர்பான உலகளாவிய நெருக்கடி பதிலளிப்புக் குழுவை நிறுவுதல் மற்றும் உணவு ஏற்றுமதி கட்டுப்பாடுகளிலிருந்து மனிதாபிமான உதவிக்காக WFPமூலம் உணவு கொள்முதலுக்கு விலக்களிக்கும் ஐநா பொதுச்செயலாளரின் முன்முயற்சியை இந்தியா வரவேற்கிறது என்றும் அவர் கூறினார்.

**6. ஐநாஇன் சமீபத்திய உலகப்பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கையின்படி, 2022–23 நிதியாண்டில், இந்தியாவின் GDP வளர்ச்சி விகிதம் என்னவாக இருக்கும்?**

அ. 8.2%

ஆ. 7.5%

இ. 6.9%

**ஈ. 6.0% ☑**



✓ ஐநா பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை அதன் 'உலகப்பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள்' அறிக்கையை வெளியிட்டது. நடப்பு 2022ஆம் ஆண்டில் இந்தியா 6.4 சதவீதமாக வளர்ச்சியடையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது; இது கடந்த ஆண்டின் 8.8 சதவீதத்தைவிட குறைவாகும். இருந்தபோதிலும் வளர்ந்துவரும் பெரிய பொருளாதாரமாகத்தான் இந்தியா உள்ளது. 2023ஆம் நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி 6 சதவீதமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் போர் உலகப்பொருளாதார வளர்ச்சியை 4 சதவீதத்திலிருந்து 3.1 சதவீதமாகக் குறைத்துள்ளதாகவும் இவ்வறிக்கை தெரிவித்துள்ளது.

**7. 'தேசிய அழிந்துவரும் உயிரினங்கள் நாளானது' மே மாதத்தில் வரும் எந்த நாளில் கடைப்பிடிக்கப்படுகிறது?**

அ. மே மாதத்தில் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமை

ஆ. மே மாதத்தில் வரும் கடைசி சனிக்கிழமை

இ. மே மாதத்தில் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமை

**ஈ. மே மாதத்தில் வரும் மூன்றாவது வெள்ளிக்கிழமை ☑**




✓ 'தேசிய அழிந்துவரும் உயிரினங்கள் நாளானது' ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தில் வரும் மூன்றாவது வெள்ளிக் கிழமையன்று கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு மே.20 அன்று இந்த நாள் கொண்டாடப்பட்டது. அழிந்துவரும் உயிரினங்கள் மற்றும் அவற்றைப் பாதுகாக்க நாம் எடுக்கக்கூடிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.

✓ 1973ஆம் ஆண்டின் அழிந்துவரும் உயிரினங்கள் சட்டம் டிசம்பர்.28 அன்று நடைமுறைக்கு வந்தது. வனவுயிரிகள் பாதுகாப்பு மற்றும் அழிந்துவரும் உயிரினங்களின் மறுவாழ்வு ஆகியவற்றின் தேவையை உயர்த்துவதை இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. இந்திய ரிசர்வ் வங்கியானது 2021-22ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு எவ்வளவு உபரி நிதியைப் பரிமாற்றஞ் செய்யவுள்ளது?**

அ. ரூ.20201 கோடி

**ஆ. ரூ.30307 கோடி ☑**

இ. ரூ.78784 கோடி

ஈ. ரூ.99500 கோடி




✓ இந்திய ரிசர்வ் வங்கியானது 2021-22ஆம் ஆண்டிற்கான உபரி நிதியாக ₹30,307 கோடியை அரசாங்கத்திற்கு பரிமாற்றஞ்செய்யவுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியத்தை அதன் இருப்பு நிலைக்குறிப்பில் 5.50 சதவீதமாக பராமரிக்க இந்திய ரிசர்வ் வங்கியின் வாரியம் முடிவு செய்துள்ளது. 2021 மார்ச்சுடன் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்கு முந்தைய நிதியாண்டில் பரிமாற்றப்பட்ட உபரியான ₹99,126 கோடியைவிடவும் இந்த ஆண்டின் நிதிப் பரிமாற்றம் குறைவாக உள்ளது.


**9. இந்தியாவில், 'தீவிரவாத எதிர்ப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஜனவரி.31

ஆ. பிப்ரவரி.28

இ. மார்ச்.31

**ஈ. மே.21 ☑**



✓ இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் மே.21 அன்று 'தீவிரவாத எதிர்ப்பு நாள்' அனுசரிக்கப்படுகிறது. 1991ஆம் ஆண்டு இதேநாளில்தான் முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டார். பொதுமக்களின் துயர்களை எடுத்துரைத்து, பயங்கரவாதம் மற்றும் வன்முறை குறித்து இளையோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது இந்த நாளின் நோக்கமாகும். இந்த ஆண்டு (2022) இராஜீவ் காந்தியின் 30ஆவது நினைவு நாளாகும். இந்த ஆண்டு, உள்துறை அமைச்சகம் 'பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழியை' முன்மொழிந்தது.

**10. 2021-22 நிதியாண்டில் இந்தியாவில் அதிக முதலீடு செய்த நாடு எது?**

அ. அமெரிக்கா

**ஆ. சிங்கப்பூர் ☑**

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. நெதர்லாந்து



✓ 2021-22 நிதியாண்டில் $83.57 பில்லியன் டாலர் என்ற அளவுக்கு மிக அதிகமான வருடாந்தர வெளிநாட்டு நேரடி முதலீட்டை இந்தியா பெற்றுள்ளது. பொருள் உற்பத்தித் துறையில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு உகந்த நாடாக இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தத் துறையில் 2020-21 நிதியாண்டுடன் ($12.09 பில்லியன் டாலர்) ஒப்பிடுகையில், 2021-22 நிதியாண்டில் 76% உயர்வு ($21.34 பில்லியன் டாலர்) இருந்தது.

✓ வெளிநாட்டு நேரடி முதலீட்டு வரவில் 2021-22 நிதியாண்டில் முதன்மை நாடாக 27 சதவீதத்துடன் சிங்கப்பூரும், 18 சதவீதத்துடன் அமெரிக்கா இரண்டாமிடத்திலும், 16 சதவீதத்துடன் மொரீஷியஸ் மூன்றாமிடத்திலும் உள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. WHO தலைமை இயக்குநரின் 'குளோபல் ஹெல்த் லீடர்ஸ்' விருததைப் பெற்ற ஆஷா பணியாளர்கள்**

'ஆஷா' எனப்படும் அங்கீகாரம் பெற்ற சமூகநல ஆர்வலர்களுக்கு உலக சுகாதார அமைப்பின் (WHO), தலைமை இயக்குநரின், 'குளோபல் ஹெல்த் லீடர்ஸ்' விருது வழங்கப்பட்டுள்ளது.

---

**2. ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் தொடக்கம்**

₹227 கோடி மதிப்பிலான கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்தத்திட்டத்தின்கீழ், அனைத்து கிராமங்களும் ஒட்டுமொத்த வளர்ச்சியடைந்து தன்னிறைவு பெற்ற கிராமங்களாக மாற வேண்டும் என்பதே நோக்கமாகும்.

2021–22ஆம் ஆண்டில் 1,997 கிராமப் பஞ்சாயத்துக்களில் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின்கீழ், தென்னங் கன்றுகள், பயறுவகை விதைகள், தெளிப்பான்கள், வீட்டுத்தோட்டம் அமைக்க காய்கறி தொகுப்புகள், தோட்டக்கலை பயிர்சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

---

**3. பாம்பின் நஞ்சுமூலம் கிடைக்கும் வருவாயில் 5% இருளர் மக்கள் நலனுக்காக செலவிடப்படும்**

பாம்பின் நஞ்சை ஐசெரா பல்லுயிர் தனியார் நிறுவனம் அணுகும் வகையில், தேசிய பல்லுயிர் ஆணையமும் தமிழ்நாடு பல்லுயிர் வாரியமும், இருளர் பாம்பு பிடிப்போர் தொழில் கூட்டுறவு சங்கத்துடன் இணைந்து ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்தின்படி, ஆண்டுதோறும் பாம்பு நஞ்சிலிருந்து கிடைக்கும் மொத்த வருமானத்தில் 5%, இருளர் மக்களின் நலனுக்காக இருளர் பாம்பு பிடிப்போர் தொழில் கூட்டுறவு சங்கத்தில் செலுத்தப்படும்.

---

**4. மியூசிக் அகாதெமி விருதுகள் அறிவிப்பு**

'சங்கீத கலாநிதி', 'சங்கீத கலா ஆச்சார்யா' உள்ளிட்ட விருதுகளுக்குத் தேர்வுசெய்யப்பட்ட கலைஞர்களின் விவரங்களை சென்னை மியூசிக் அகாதெமி வெளியிட்டது.

**சங்கீத கலாநிதி விருது:** கர்நாடக இசைக்கலைஞர் நெய்வேலி ஆர் சந்தானகோபாலன் (2020); மிருதங்க இசைக் கலைஞர் திருவாரூர் பக்தவத்சலம் (2021); வயலின் இசைக்கலைஞர்கள் லால்குடி ஜி ஜெ ஆர் கிருஷ்ணன், ஜி ஜெ ஆர் விஜயலட்சுமி (2022).

**சங்கீத கலா ஆச்சார்யா விருது:** நாகஸ்வர இசைக்கலைஞர் கீவளூர் என் ஜி கணேசன் (2020); கர்நாடக இசைக் கலைஞர் ரிதா ராஜன் (2021); வீணை இசைக்கலைஞர் ஆர் எஸ் ஜெயலட்சுமி (2022).

**டி டி கே விருது:** கர்நாடக இசைக்கலைஞர் தாமரக்காடு கோவிந்தன் நம்பூதிரி (2020); மிருதங்க–ஜலதரங்க இசைக் கலைஞர் நேமனி சோமயாஜுலு (2021), கஞ்சிரா இசைக்கலைஞர் ஏ வி ஆனந்த் (2022).

**இசைப்பேரறிஞர் விருது:** வி பிரேமலதா (2022).

**நாட்டிய விருது (நிருத்ய கலாநிதி):** பரதநாட்டியக் கலைஞர்கள் ரமா வைத்தியநாதன் (2020); நர்த்தகி நடராஜ் (2021); பிரகா பெசல் (2022).

---

**1. சமீபத்திய NCRB தரவுகளின்படி, சிறைகளில் அதிக விசாரணைக் கைதிகளைக்கொண்ட மாநிலங்கள் எவை?**

அ. உத்தரபிரதேசம் மற்றும் பீகார்

**ஆ. தில்லி மற்றும் ஜம்மு & காஷ்மீர் ☑**

இ. குஜராத் மற்றும் மத்திய பிரதேசம்

ஈ. மேற்கு வங்காளம் மற்றும் அஸ்ஸாம்



✓ கடந்த 2020ஆம் ஆண்டிற்கான தேசிய குற்ற ஆவணக்காப்பகம் (NCRB) தொகுத்துள்ள சமீபத்திய தரவுகளின்படி, மொத்தமுள்ள 4.88 இலட்சம் சிறைக்கைதிகளில், 76% அல்லது 3.71 இலட்சம் பேர் விசாரணைக் கைதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் 68% பேர் படிப்பறிவில்லாதவர்கள் அல்லது பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தியவர்கள். விசாரணைக்குட்பட்டவர்களில் சுமார் 20% பேர் இசுலாமியர்கள், 73 சதவீதம் பேர் தலித்துகள், பழங்குடியினர் அல்லது OBC–க்கள். தில்லி மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் சிறைகளில் விசாரணைக்கைதிகளின் விகிதம் அதிகபட்சமாக 91% ஆகவும், பீகார் மற்றும் பஞ்சாப் 85% ஆகவும், ஒடிஸாவில் 83% ஆகவும் உள்ளது.

**2. இந்தியப் பிரதமரின் ஆலோசகராக (2022–இல்) நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. தருண் பஜாஜ்

**ஆ. தருண் கபூர் ☑**

இ. மைக்கேல் D பத்ரா

ஈ. ஜெயதி கோஷ்



✓ மத்திய அமைச்சரவையின் நியமனக்குழுவானது தருண் கபூரை பிரதமரின் ஆலோசகராக 2 ஆண்டுகாலத்திற்கு நியமிக்க ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய பெட்ரோலியத்துறை முன்னாள் செயலாளரும், கடந்த 1987–ம் ஆண்டு இமாச்சல பிரதேச பிரிவிலிருந்து இஆப அதிகாரியுமான இவர், கடந்த 2021–இல் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் செயலாளராகப் பதவியேற்றார்.

**3. PMFME திட்டம் மற்றும் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

**அ. உணவுப்பதப்படுத்தும் தொழிலகங்கள் அமைச்சகம் ☑**

ஆ. வேளாண் அமைச்சகம்

இ. MSME அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

MOFPI
MINISTRY OF FOOD PROCESSING INDUSTRIES
GOVERNMENT OF INDIA

✓ மத்திய உணவுப்பதப்படுத்தும் தொழிலகங்கள் அமைச்சரானவர் புது தில்லியில் பிரதம மந்திரி முறைப்படுத்தப்பட்ட நுண்ணுணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களின் (PMFME) திட்டத்தின்கீழ் மூன்று 'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு' பிராண்டுகளை அறிமுகப்படுத்தினார்.

✓ PMFME திட்டத்தின், 'பிராண்டிங் மற்றும் மார்க்கெட்டிங் கூறுகளின்'கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 ODOP–களின் 10 பிராண்டுகளை உருவாக்குதற்காக உணவுப்பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகம், இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்புடன் (NAFED) ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளது.

**4. ஐந்து இலட்சம் மாணாக்கருக்கு கைக்கணினி வழங்கும் 'இ–அதிகம்' திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

அ. தமிழ்நாடு **ஆ. ஹரியானா ☑**

இ. மத்திய பிரதேசம் ஈ. கேரளா



- ✓ ஹரியானா அரசின்கீழ், 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் சுமார் ஐந்து இலட்சம் பள்ளி மாணாக்கருக்கு கைக் கணினிகள் வழங்கப்படும். இந்தச் சாதனங்கள் தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் தகவமைப்பு கற்றல் மென்பொருள் மற்றும் 2 GB இலவசத் தரவு வசதிகளுடன் முன்பே ஏற்றப்பட்ட உள்ளடக்கத்துடன் தரப்படும். ஹரியானா அரசு, பள்ளிகளின் உட்கட்டமைப்பு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் பணியாற்றுவதற்காக, கல்வித்துறைக்காக இரண்டு பணிக்குழுக்களை அமைக்கவும் முடிவு செய்துள்ளது.

### 5. 2022–இல் 24ஆவது கோடைகால காதுகேளாதோர் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நாடு எது?

அ. இந்தியா

**ஆ. பிரேசில் ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. கிரேக்கம்

- ✓ 2022 மே.1 முதல் பிரேசிலின் காக்சியாஸ் டோ சுல் நகரத்தில் 24ஆவது கோடைகால காதுகேளாதோர் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 65 விளையாட்டு வீரர்களைக் கொண்ட வலுவான இந்தியக் குழு இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கிறது. ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் போட்டியில் தனுஷ் ஸ்ரீகாந்த் தங்கமும், சௌர்யா சைனி வெண்கலமும் வென்றனர். இந்திய பாட்மிண்டன் அணி இறுதிப்போட்டியில் ஜப்பானை 3–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி தங்கம் வென்றது.

### 6. 'ஒயிட்லி கோல்ட்' விருதானது கீழ்காணும் எந்தத் துறையில் பங்களிப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது?

**அ. வனவுயிரிகள் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ☑**



ஆ. நீர்வளப் பாதுகாப்பு

இ. கனிமவளப் பாதுகாப்பு

ஈ. நிலவளங்கள் பாதுகாப்பு

- ✓ 'ஒயிட்லி கோல்ட்' விருதென்பது வனவுயிர்கள் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பில் சிறந்த பங்களிப்பைத்தரும் மாந்தர்க்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிற ஒரு விருதாகும். பனிச்சிறுத்தைகள் பாதுகாப்பாளரான சாருதத் மிஸ்ரா, பனிச் சிறுத்தைகளைப் பாதுகாப்பதற்கான அவரது முயற்சிகளுக்காக 2022–இல் 'ஒயிட்லி கோல்ட்' விருது பெற்றுள்ளார். மிஸ்ரா, பனிச்சிறுத்தை அறக்கட்டளையின் (SLT) முதல் சர்வதேச நிர்வாக இயக்குநரும் ஆவார். அவர் உலகளாவிய பனிச்சிறுத்தை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தை நிறுவவும் உதவியுள்ளார்.

### 7. 'கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுகள் – 2021'ஐ வென்ற பல்கலைக்கழகம் எது?

அ. மெட்ராஸ் பல்கலைக்கழகம்

ஆ. அண்ணா பல்கலைக்கழகம்

**இ. ஜைன் பல்கலைக்கழகம் ☑**

ஈ. பஞ்சாப் பல்கலைக்கழகம்

- ✓ 'கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுகள் – 2021'ஐ வழங்கிய பெங்களூருவைச் சேர்ந்த ஜெயின் (நிகர் நிலைப் பல்கலைக்கழகம்), 'கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுகள் (KIUG) 2021'இல் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அந்த அணி 20 தங்கம், 7 வெள்ளி மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- ✓ லவ்லி புரொபஷனல் யுனிவர்சிட்டி (LPU) மற்றும் பஞ்சாப் பல்கலைக்கழகம் முறையே முதல் இரன்னர்–அப் மற்றும் இரண்டாவது இரன்னர் அப் நிலைகளை பெற்றன. இந்தப் பதிப்பில், 2 தேசிய சாதனைகள் மற்றும் 76 முந்தைய கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுச் சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

**8. சமீபத்தில் அதிக வயதான உலக சாம்பியனான ரோனி ஓ'சுல்லிவன் சார்ந்த விளையாட்டு எது?**



அ. டென்னிஸ்

**ஆ. ஸ்னூக்கர் ☑**

இ. ஸ்குவாஷ்

ஈ. கோல்ப்

✓ தற்போதைய உலகின் முதல்நிலை வீரரான இங்கிலாந்து ஸ்னூக்கர் வீரர் ரோனி ஓ'சுல்லிவன் தனது ஏழாவது உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை ஜட் ட்ரம்பை வீழ்த்தியதன்மூலம் பெற்றார். இதன்மூலம் ஸ்டீபன் ஹென்றியின் சாதனையை அவர் சமன்செய்தார். 46 வயதான ஸ்னூக்கர் வீரரான ரோனி ஓ'சுல்லிவன், குரூசிபிள் வரலாற்றில் அதிக வயதுடைய உலகச் சாம்பியனானார். அவர் தனது முதல் தொழிற்முறை தரவரிசை நிகழ்வை 17 வயதில் வென்றார். 19 வயதில் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்ற இளைய வீரரும் இவரே. ஸ்னூக்கருக்கான சேவைகளுக்காக கடந்த 2016ஆம் ஆண்டில் ஓ'சுல்லிவனுக்கு 'ஆர்டர் ஆப் தி பிரிட்டிஷ் எம்பையர்' விருது வழங்கப்பட்டது.

**9. ஜிலின்–1 01C மற்றும் ஜிலின்–1 கா.ஃபென் சீரிஸ் செயற்கைக்கோள்கள் உட்பட எட்டு தொலையுணரி செயற்கைக் கோள்களை ஏவிய நாடு எது?**



அ. இஸ்ரேல்

**ஆ. சீனா ☑**

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. ரஷ்யா

✓ ஜிலின்–1 01C மற்றும் ஜிலின்–1 கா.ஃபென் சீரிஸ் செயற்கைக்கோள்கள் உட்பட எட்டுச் செயற்கைக்கோள்களை தாழ் புவி சுற்றுப்பாதைக்கு லாங் மார்ச் ஏவுகலத்தில் சீனா ஏவியது. இது லாங் மார்ச் ஏவுகலத்தொடரின் 419ஆவது விண் வெளிப்பயணத்தையும் குறித்தது. கடந்த வாரம், சீனாவின் தேசிய விண்வெளி நிர்வாகம் (CNSA) லாங் மார்ச் 2C ஏவுகலத்தில் 2 செயற்கைக்கோள்களை ஏவியது; அது நாட்டின் நகர்ப்புற பாதுகாப்பை அதிகரிக்கவும் சுற்றுச்சூழல் மாற்றங்களைக் கண்காணிக்கவும் ஏவப்பட்டது.

**10. ஆண்டுதோறும், 'உலக கைத் தூய்மை நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**



அ. மே.2

ஆ. மே.4

**இ. மே.5 ☑**

ஈ. மே.7

✓ உலக சுகாதார நிறுவனமானது (WHO) ஆண்டுதோறும் மே.5 அன்று 'உலக கைத் தூய்மை நாளைக்' கடைப்பிடிக்கிறது. குறித்த நேரத்தில் குறித்த தயாரிப்புகளுடன் கைகளைச் சுத்தம் செய்ய மக்களை இந்தச் சிறப்பு நாள் ஊக்குவிக்கிறது. இந்த ஆண்டு (2022) பிரச்சாரத்தின் கருப்பொருள், "A Healthcare "Quality and Safety Climate or Culture" that Values Hand Hygiene and Infection Prevention and Control" என்பதாகும். முழக்கவரியாக, "Unite for safety: clean your hands" என்பது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தோ–பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பு**

இந்தோ–பசிபிக் பிராந்தியம் முக்கியத்துவம் பெற்றுவரும் நிலையில், இந்தியா, அமெரிக்கா ஜப்பான், ஆஸ்திரேலியா உள்ளிட்ட பதிமூன்று நாடுகள் ஒருங்கிணைந்து, 'வளர்ச்சிக்கான இந்தோ–பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பை' (IPEF) ஏற்படுத்தியுள்ளன. இந்தக் கூட்டமைப்பானது, இந்தோ–பசிபிக் பிராந்தியத்தை சர்வதேச பொருளாதார வளர்ச்சிக்கான கேந்திரமாக மாற்றும் என்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்க அதிபர் பைடனால் முன்மொழியப்பட்டுள்ள இந்தக்கூட்டமைப்பு, சீனாவுக்கு பதிலடி தரும்வகையில் உள்ளதாகப் பார்க்கப்படுகிறது.

இந்தக் கூட்டமைப்பில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, புருணே, இந்தோனேசியா, தென் கொரியா, மலேசியா, நியூஸிலாந்து, பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியத்நாம் ஆகிய நாடுகள் இணைவதாகத் தெரிவித்துள்ளன.

**கூட்டமைப்பின் குறிக்கோள்:** IPEF கூட்டமைப்பில் இணைந்துள்ள 13 நாடுகளும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், "நீடித்த வளர்ச்சி, ஒருங்கிணைப்பு, பொருளாதார வளர்ச்சி, நாடுகளின் பொருளாதாரப் போட்டி உள்ளிட்டவற்றை ஆக்கபூர்வமாக மேம்படுத்தும் நோக்கில் IPEF அமைக்கப்பட்டுள்ளது. நாடுகள் தங்களுக்கு இடையேயான பொருளாதாரத் தொடர்பை வலுப்படுத்துவது தொடர்பாக IPEF பேச்சுவார்த்தையில் விரிவாக விவாதிக்கப்படும். சர்வதேச விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துதல், போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், அத்தியாவசியப் பொருள்கள் அனைத்து நாடுகளுக்கும் கிடைத்தல் உள்ளிட்டவை தொடர்பாக விரிவாக விவாதிக்கப்படவுள்ளது. தூய்மையான எரிசக்தி, கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல், தொழில்நுட்ப வசதிகளைப் பகிர்ந்துகொள்ளுதல் உள்ளிட்டவை குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**2. வாட்ஸ்ஆப் வாயிலாக அரசின் சேவைகள்**

கல்விச்சான்றிதழ், ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை எண்ம வடிவில் சேகரித்து வைப்பதற்கான மத்திய, மாநில அரசுகளின் சேவைகளை இனி வாட்ஸ்ஆப் வாயிலாகப் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு முக்கிய ஆவணங்களை எண்மவடிவில் சேகரித்து வைப்பதற்கான வசதிகளை 'டிஜிலாக்கர்' செயலி வழங்கி வருகிறது. 'மைகௌ ஹெல்ப்டெஸ்க்' வாயிலாக அச்செயலி வழங்கும் சேவைகளை இனி வாட்ஸ்ஆப் மூலமாகவே மக்கள் பெற முடியும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

அச்சேவைகளை வாட்ஸ்ஆப் வாயிலாகப் பெற 9013151515 என்ற எண்ணுக்கு தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும். இதன்மூலமாக அரசின் சேவைகளை மக்கள் எளிதில் பெற்றுவிட முடியும்.

---

**3. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்...**

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் குறித்து, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் பேசியது:

கிராமங்களில் உள்ள தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவது, நீர்வள ஆதாரங்களைப் பெருக்கி, சூரிய சக்தி பம்ப் செட்டுகளுடன் நுண்ணீர்ப்பாசன வசதி ஏற்படுத்துதல், வேளாண் விளை பொருள்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல், ஊரகவளர்ச்சித்துறையின்மூலமாக பண்ணைக்குட்டை அமைத்தல், கிராம வேளாண் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், கால்நடைகளின் நலங்காத்து, பால் உற்பத்தியைப் பெருக்குதல், வருவாய்த் துறையின்மூலம் பட்டா மாறுதல், இ–அடங்கல், சிறு–குறு உழவர்களுக்குச் சான்று வழங்குதல், கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் அதிகளவு பயிர்க்கடன்கள் வழங்குதல், பாசன நீர்வழித்தடங்களை தூர்வாருதல் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

---

**1. ஒட்டுமொத்தமாக 10 GW–க்கும் மேல் மின்னுற்பதி செய்யும் சோலார் நிறுவல்களைக் கொண்டுள்ள இந்தியாவின் முதல் மாநிலம் எது?**



அ. உத்தர பிரதேசம்

**ஆ. இராஜஸ்தான் ☑**

இ. பீகார்

ஈ. மத்திய பிரதேசம்

✓ ஒட்டுமொத்தமாக 10 GW–க்கும் மேல் மின்னுற்பத்தி செய்யும் சோலார் நிறுவல்களைக் கொண்டுள்ள இந்தியாவின் முதல் மாநிலமாக இராஜஸ்தான் ஆனது. நாட்டின் 49,346 MW சூரிய ஆற்றல் திறனில் 10,506 MW ஆற்றல் இந்த மாநிலத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. மாநிலத்தின் மொத்தத்திறனில், 9,542 MW ஆற்றல் நிலத்தில் நிறுவப்பட்ட மின்னுற்பத்தித் திட்டங்கள்மூலமும், 668 MW மேற்கூரையில் நிறுவப்பட்ட மின்னுற்பத்தித் திட்டங்கள் மூலமும் 296 MW ஆற்றல் ஆஃப்–கிரிட் மூலமும் உருவாக்கப்படுகிறது. இம்மாநிலம், மேற்கூரை சூரிய ஆற்றலின் மையமாகவும் உருவாகி வருகிறது. "இன்வெஸ்ட் இராஜஸ்தான்" பிரச்சாரத்தின்போது எரிசக்தித் துறையில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் அம்மாநிலம் கையெழுத்திட்டது.

**2. ஆண்டுதோறும் மே.9 அன்று 'வெற்றி நாளை'க் கொண்டாடுகிற நாடு எது?**



அ. பிரான்ஸ்

**ஆ. ரஷ்யா ☑**

இ. ஜெர்மனி

ஈ. இந்தியா

✓ 1945ஆம் ஆண்டு நாஜி ஜெர்மனிக்கு எதிரான சோவியத் யூனியனின் வெற்றியைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மே.9 அன்று ரஷ்யாவால் 'வெற்றி நாள்' கொண்டாடப்படுகிறது. இந்த நாளின்போது, பொதுவாக மாஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் இராணுவ அணிவகுப்பு மேற்கொள்ளப்படுகிறது. இது இரண்டாம் உலகப் போரின் தியாகங்களை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது. இரண்டாம் உலகப்போரில் இருபத்தேழு மில்லியன் சோவியத் குடிமக்கள் இறந்தனர்; இது ரஷ்யர்களால் 'பெரும் தேசபக்தி போர்' என்று அழைக்கப்பட்டது.

**3. உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திர (2022) கூட்டம் நடைபெறும் இடம் எது?**

அ. நியூயார்க்


**ஆ. தாவோஸ் ☑**

இ. ஜெனிவா

ஈ. பாரிஸ்

✓ உலகப்பொருளாதார மன்றம் (WEF) அதன் வருடாந்திரக் கூட்டத்தை 2022ஆம் ஆண்டு மே.22 முதல் 26 வரை சுவிச்சர்லாந்தின் தாவோஸ் நகரில் நடத்தவுள்ளது. WEF வருடாந்திர (2022) கூட்டத்தின் கருப்பொருள் "Working Together, Restoring Trust" என்பதாகும். விவாதிக்கப்படவேண்டிய பிரச்சினைகளுள் தொற்றுநோய்க்கு இடையில் அரசாங்கக்கொள்கைகள் & வணிக உத்திகள் மற்றும் உக்ரைனில் போர் மற்றும் புவி–பொருளாதார சவால்கள் ஆகியவை அடங்கும்.

**4. ஓர் உயிரினத்தின் DNA'ஐ மாற்றும் தொழில்நுட்பத்தின் பெயர் என்ன?**



அ. மரபணு மாற்றுரு

**ஆ. மரபணுத்தொகுதியைத் திருத்தியமைத்தல் ☑**

இ. மரபணு மாற்றம்

ஈ. மரபணு ஒழுங்குமுறை

✓ மரபணுத்தொகுதியைத் திருத்தியமைக்கப்பட்ட தாவரங்களின் பாதுகாப்பு மதிப்பீட்டிற்கான வழிகாட்டுதல்களை உயிரித்தொழில்நுட்பத்துறை அறிவித்தது. இந்த வழிகாட்டுதல்கள் மரபணுத்தொகுதியைத் திருத்தியமைப்பதற்கான தொழில்நுட்பங்களின் நிலையான பயன்பாட்டிற்கான செயல் திட்டத்தை வழங்குகின்றன. அவை பொது மற்றும் தனியார் துறை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் பொருந்தும். மரபணுத்தொகுதியைத் திருத்தியமைப்பது (Genome Editing) என்பது ஓர் உயிரினத்தின் DNA–ஐ மாற்றும் தொழில்நுட்பமாகும். இது மரபணு மாற்றப்பட்ட உயிரி (GMO) தொழில்நுட்பத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

**5. 2022 – குவாட் தலைவர்கள் உச்சிமாநாடு நடத்தப்படுகிற நாடு எது?**



**அ. ஜப்பான் ☑**

ஆ. அமெரிக்கா

இ. இந்தியா

ஈ. ஆஸ்திரேலியா

✓ இரண்டாவது குவாட் தலைவர்களின் உச்சிமாநாட்டை ஜப்பான் நடத்துகிறது. நாற்கர பாதுகாப்பு உரையாடலில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை அடங்கும். இந்தியப்பிரதமர் மோடி குவாட் தலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டார். நான்கு நாடுகளின் தலைவர்களும் குழுவின் முன்முயற்சிகளின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்கின்றனர். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் குவாட் தலைவர்கள் உச்சிமாநாட்டில் முதல் முறையாக இணைகிறார்.

**6. இந்திய கடற்படையானது அண்மையில் எந்த நாட்டுடன் இணைந்து ஒருங்கிணைந்த ரோந்துப் (CORPAT) பயிற்சியை மேற்கொண்டது?**



அ. ஜப்பான்


ஆ. பிரான்ஸ்

**இ. வங்காளதேசம் ☑**

ஈ. இலங்கை

✓ இந்திய கடற்படையும் வங்காளதேச கடற்படையும் இணைந்து ஒருங்கிணைந்த ரோந்துப் (CORPAT) பயிற்சியின் நான்காவது பதிப்பை சமீபத்தில் வடக்கு வங்காள விரிகுடாவில் தொடங்கியது. பன்னாட்டு கடல் எல்லைக்கோடு வழியாக இந்திய கடற்படையும் வங்காளதேச கடற்படையும் இணைந்து இந்த ரோந்துப்பணியை மேற்கொள்ளும். வங்காளதேச கடற்படைக் கப்பல்களுடன் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 2 கப்பல்களான INS கோரா மற்றும் INS சுமேதா ஆகியவை இப்பயிற்சியில் பங்கேற்கின்றன. இரு கடற்படைகளின் கடற்புற ரோந்து வானூர்திகளும் இந்த ரோந்துப்பணியில் பங்கேற்கும்.

**7. 'பிரம்ம சமாஜம்' என்னும் சீர்திருத்த இயக்கத்தை நிறுவியவர் யார்?**



அ. தயானந்த சரஸ்வதி

**ஆ. இராஜாராம் மோகன் இராய் ☑**

இ. இரவீந்திரநாத் தாகூர்

ஈ. அன்னி பெசன்ட்

✓ 19ஆம் நூற்றாண்டின் சமூக சீர்திருத்தவாதி ராஜாராம் மோகன் ராய் இந்து மதத்தின் சீர்திருத்த இயக்கமான 'பிரம்ம சமாஜத்தை' நிறுவினார். சமுதாயத்தில் நிலவும் மூடநம்பிக்கைகள், 'சதி'போன்ற பழக்கவழக்கங்கள், குழந்தைத் திருமணம், சாதி ஏற்றத்தாழ்வுகள்போன்ற சமூகத்தீமைகளை எதிர்த்துப் போராடுவதை இந்த இயக்கம் தனது நோக்கமாகக்கொண்டு செயல்பட்டது. அவர் 1772 மே.22 அன்று வங்காள மாகாணத்தில் பிறந்தார். கொல்கத்தாவில் இராஜாராம் மோகன் இராயின் 250ஆவது பிறந்தநாளின் ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் கலாச்சார அமைச்சகம் தொடக்க விழாவை நடத்தியது.

**8. உலக சுகாதார சபையின் 75ஆவது பதிப்பு நடைபெறும் இடம் எது?**

அ. ரோம்

ஆ. பாரிஸ்

**இ. ஜெனிவா ☑**

ஈ. நியூயார்க்



✓ உலக சுகாதார அமைப்பானது (WHO) ஜெனிவாவில் உலக சுகாதார சபையின் 75ஆம் பதிப்பை ஏற்பாடு செய்கிறது. பத்து லட்சம் ASHA (அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதார ஆர்வலர்) பணியாளர்கள் உலகளாவிய சுகாதார தலைவர்கள் விருது–2022–ஐப்பெற்றுள்ளனர். விருதுபெற்ற ஆறுள் ASHA பணியாளர்களும் ஒன்று. ஆப்கானிஸ்தானில் ஆயுதம் ஏந்திய துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எட்டுத் தன்னார்வ போலியோ தொழிலாளர்களும் இதிலடங்குவர்.

**9. எந்த நாட்டுடனான, 'முதலீட்டு ஊக்க ஒப்பந்தத்தில்' இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**

அ. ஜப்பான்

**ஆ. அமெரிக்கா ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்



✓ இந்தியாவும் அமெரிக்காவும் சமீபத்தில் டோக்கியோவில் 'முதலீட்டு ஊக்குவிப்பு ஒப்பந்தத்தில்' கையெழுத்திட்டன. US இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆனது இந்தியாவில் முதலீட்டு ஆதரவைத் தொடர்ந்து வழங்குவது சட்டப்பூர்வமான தேவையாகும். இந்த ஒப்பந்தம், டோக்கியோவில், இந்தியாவின் வெளியுறவு செயலாளர் வினய் குவாத்ரா மற்றும் DFC–இன் CEO ஸ்காட் நாதன் ஆகியோரால் கையெழுத்திடப்பட்டது.

**10. 'Child Alert' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. உலக வங்கி

ஆ. NTI ஆயோக்

**இ. UNICEF ☑**

ஈ. ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல்

✓ UNICEF ஆனது சமீபத்தில், 'Child Alert' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. 600,000 குழந்தைகள் அத்தியாவசிய சிகிச்சையை பெறமாட்டார்கள் என இந்த அறிக்கை கூறுகிறது. உணவு மற்றும் உயிர்க்காக்கும் சிகிச்சையின் விலை உயர்ந்துவருவதால், அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் இறக்கக்கூடும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் விளைவுகள் மற்றும் கொரோனா வைரஸ் தொற்றுநோயின்தாக்கம் மற்றும் காலநிலைமாற்றத்தால் தொடர்ந்து ஏற்படும் இடர் மற்றும் சேதம் ஆகியவை உலகளாவிய உணவு நெருக்கடியை ஏற்படுத்துகின்றன.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'பரம்பொருள்' சூப்பர் கம்ப்யூட்டர்: தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷனின்கீழ் திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்தின் முன்முயற்சி**

இந்திய அரசின் தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷனில் (NSM) திருச்சிராப்பள்ளியின் தேசிய தொழில்நுட்பக்கழகம் இணைந்துள்ளது. 'பரம்பொருள்' எனப் பெயரிடப்பட்டுள்ள மையத்தை, இக்கழகத்தின் இயக்குநர் திறந்து வைத்தார்.

உயர்செயல்திறன்கொண்ட கணினித் திறன்களைக் கொண்ட தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிப்பதே தேசிய கம்ப்யூட்டிங் மிஷனின் முக்கிய நோக்காகும். NSM உட்கட்டமைப்புக் குழுவிடம் தேசிய தொழில் நுட்பக்கழகம் சமர்ப்பித்த முன்மொழிவின் அடிப்படையில், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் துறை ஆகியவற்றால் ₹19 கோடி மதிப்பிலான சூப்பர் கம்ப்யூட்டர், திருச்சி தேசிய தொழில்நுட்ப கழகத்திற்கு வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

---

**2. உலக சுகாதார அமைப்பின் தலைவராக டெட்ரோஸ் அதனோம் மீண்டும் தேர்வு**

எத்தியோப்பியாவைச்சேர்ந்த முன்னாள் அமைச்சரான டெட்ரோஸ் அதனோம் உலக சுகாதார அமைப்பின் (WHO) தலைவராக இருக்கிறார். இவரது பதவிக்காலம் முடிந்த நிலையில், 2ஆம் முறையாக அவர் மீண்டும் போட்டியிட்டார். இந்நிலையில், டெட்ரோஸ் அதனோமை எதிர்த்து யாரும் போட்டியிடவில்லை என்பதால், அவர் மீண்டும் இந்த அமைப்பின் தலைவராகி உள்ளார். அடுத்த 5 ஆண்டுக்கு அவர் தலைவராக செயல்படுவார். கொரோனா வைரஸ் தொற்றின்போது பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் உலக நாடுகளின் கேள்விகளுக்கு பதிலளித்து உலக சுகாதார அமைப்பை டெட்ரோஸ் திறம்பட வழிநடத்தினார்.

---

**1. "Monitor on the World of Work" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. UNESCO

ஆ. உலகப் பொருளாதார மன்றம்

இ. UNICEF

**ஈ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு ☑**

International Labour Organization

✓ பன்னாட்டு தொழிலாளர் அமைப்பானது (ILO) Monitor on the World of Work" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, பல உலகளாவிய நெருக்கடிகள் உலகளாவிய தொழிலாளர் சந்தை மீட்சியில் சரிவை ஏற்படுத்துகிறது; அது நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையேயும் ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்து வருகிறது. 2022ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் உலகளவில் வேலைசெய்யும் மணிநேரங்களின் எண்ணிக்கை, நெருக்கடிக்கு முந்தைய சதவீதத்திலிருந்து 3.8 சதவீதமாக குறைந்துள்ளது.

**2. வங்கிகள், NBFC–கள் மற்றும் பிற ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களில் வாடிக்கையாளர் சேவையின் தரத்தை மதிப்பிடுவதற்காக உருவாக்கப்பட்ட RBI குழுவின் தலைவர் யார்?**

அ. M D பத்ரா

**ஆ. B P கனுங்கோ ☑**

இ. M K ஜெயின்

ஈ. உர்ஜித் படேல்



✓ இந்திய ரிசர்வ் வங்கியானது வங்கிகள், NBFC–கள் மற்றும் அதன்மூலம் கட்டுப்படுத்தப்படும் பிற நிறுவனங்களில் வாடிக்கையாளர் சேவையின் செயல்திறன், போதுமை மற்றும் தரம் ஆகியவற்றை மதிப்பீடு செய்ய குழுவொன்றை அமைத்துள்ளது. ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் BP கனுங்கோ தலைமையில் 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு தனது முதல் கூட்டம் நடைபெற்ற நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**3. 'MyGov ஹெல்ப் டெஸ்க்' ஆனது கீழ்காணும் எந்தச் சமூக தளத்தில் குடிமக்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றப்பட்டுள்ளது?**

அ. கீச்சகம் (Twitter)

**ஆ. புலனம் (WhatsApp) ☑**

இ. தந்தி (Telegram)

ஈ. முகநூல் (Facebook)

✓ கல்விச்சான்றிதழ், ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை எண்ம வடிவில் சேகரித்து வைப்பதற்கான மத்திய, மாநில அரசுகளின் சேவைகளை இனி வாட்ஸ்ஆப் வாயிலாகப் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு முக்கிய ஆவணங்களை எண்மவடிவில் சேகரித்து வைப்பதற்கான வசதிகளை 'டிஜிலாக்கர்' செயலி வழங்கி வருகிறது. 'மைகௌ ஹெல்ப்டெஸ்க்' வாயிலாக அச்செயலி வழங்கும் சேவைகளை இனி வாட்ஸ்ஆப் மூலமாகவே மக்கள் பெற முடியும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

**4. 'உலகளாவிய ஒத்துழைப்பு கிராமம்' என்பது எந்த அமைப்பின் புதிய முன்னெடுப்பாகும்?**

அ. ஆசிய வளர்ச்சி வங்கி

**ஆ. உலகப் பொருளாதார மன்றம் ☑**

இ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ. NITI ஆயோக்

WORLD ECONOMIC FORUM

✓ உலகப்பொருளாதார மன்றம் அதன் தாவோஸ் கூட்டத்தில் பொது–தனியார் ஒத்துழைப்பின் மெய்நிகர் எதிர்காலமாக 'உலகளாவிய ஒத்துழைப்பு கிராமத்தை' உருவாக்குவதாக அறிவித்துள்ளது. அக்செஞ்சர் மற்றும் மைக்ரோசாப்ட்

நிறுவனத்துடன் இணைந்து இம்முன்னெடுப்பு தொடங்கப்படுகிறது. உலகப்பொருளாதார மன்றமானது மெடாவெர்சை வரையறுத்து உருவாக்குவதற்கான முயற்சியைத்தொடங்கியுள்ளது.

**5. 'ஸ்வச் சர்வேக்ஷன் – எஸ்எஸ்–2023'இன் கருப்பொருள் என்ன?**

அ. ஜன் பாகிதாரி

ஆ. ஜன் அந்தோலன்

SWACHH SURVEKSHAN

**இ. வீணிலிருந்து செல்வம் (Waste to Wealth) ☑**

ஈ. சாம்பல் நீர் மேலாண்மை

✓ தூய்மை இந்தியா இயக்கம் – நகர்ப்புறம் 2.0–இன்கீழ் 'ஸ்வச் சர்வேக்ஷன் – எஸ்எஸ்–2023'இன் 8ஆவது பதிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. ஸ்வச் சர்வேக்ஷன்– 2023 ஆனது 'Waste to Wealth' என்ற கருப்பொருளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. மூன்று Rகள் குறைத்தல் (Reduce), மறுசுழற்சி செய்தல் (Recycle) மற்றும் மறுபயன்பாடு (Reuse) என்ற கொள்கைக்கும் இந்த ஆய்வு முன்னுரிமை அளிக்கும்.

**6. 2022–இல் BRICS கலாச்சார அமைச்சர்கள் கூட்டத்தை நடத்திய நாடு எது?**

அ. இந்தியா

ஆ. ரஷ்யா




**இ. சீனா ☑**

ஈ. தென்னாப்பிரிக்கா

✓ 7ஆவது BRICS கலாச்சார அமைச்சர்கள் கூட்டத்தில் கலாச்சாரம் மற்றும் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் மீனாட்சி லேகி பங்கேற்றார். அனைத்து BRICS உறுப்புநாடுகளின் பங்கேற்புடன் காணொளிக்காட்சிமூலம் சீன மக்கள் குடியரசால் இது நடத்தப்பட்டது. "Establishing a Cultural Partnership Featuring Inclusiveness and Mutual Learning among BRICS" என்ற கருப்பொருளின்கீழ் இது நடைபெற்றது. கலாச்சார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் அமைச்சர்கள் 2022–2026 BRICS செயல்திட்டத்தை ஏற்றுக்கொண்டனர்.

**7. ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கானது (ABHA) எத்தனை இலக்கங்களைக் கொண்டுள்ளது?**

அ. 10

ஆ. 12

14

**இ. 14 ☑**

ஈ. 16

✓ தேசிய சுகாதார ஆணையம் அதன் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் திட்டத்தின்கீழ் புதுப்பிக்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் சுகாதாரஅ கணக்கிற்கான (ABHA) திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. ABHA செயலியின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பில் புதிய பயனர் இடைமுகம் இடம்பெற்றுள்ளது. 14 இலக்க ABHA எண்ணுடன் இணைக்கக்கூடிய ஒரு பயனர்பெயரான ABHA முகவரியை உருவாக்கவும் இச்செயலி ஒருவருக்கு உதவுகிறது. இந்தப்புதிய செயலியில், தனிநபர்கள் தங்கள் உடல்நலப்பதிவுகளை எப்போது வேண்டுமானாலும் எங்கிருந்து வேண்டுமானாலும் அணுகலாம்.

**8. டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், எந்த நிறுவனத்தின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

அ. ILO **ஆ. WHO ☑**

இ. UNICEF ஈ. உலக வங்கி



✓ உலக சுகாதார அமைப்பின் (WHO) உறுப்புநாடுகள் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸை 2ஆவது ஐந்தாண்டு காலத்திற்கு அவ்வமைப்பின் பொது இயக்குநராக மீண்டும் தேர்ந்தெடுத்தது. ஜெனிவாவில் நடந்த 75ஆவது உலக சுகாதார சபையின்போது அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலக சுகாதார சபையின் விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி, ஒரு பொது இயக்குநரை ஒருமுறை மட்டும் மீண்டும் நியமிக்கலாம்.


**9. தேசிய சாதனை கணக்கெடுப்பு (NAS) 2021–இன்படி, இந்தியாவில் உள்ள பள்ளி மாணவர்களில் எத்தனை சதவீதம் பேர் பள்ளிகளுக்கு கால்நடையாகப் பயணஞ்செய்கிறார்கள்?**

அ. 45%

**ஆ. 48% ☑**

இ. 50%

ஈ. 52%




✓ NAS–2021இன்படி, நாடு முழுவதுமுள்ள மாணவர்களில் குறைந்தது 48% பேர் பள்ளிக்கு நடந்து செல்கிறார்கள்; அவர்களுள் 9 சதவீதம் பேர் பள்ளிப் போக்குவரத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்தக் கணக்கெடுப்பின்படி, குறைந்தபட்சம் 25% பள்ளிகள், மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் ஆதரவின்மையை எதிர்கொள்கின்றன.

**10. ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர் அந்தோனி நார்மன் அல்பானீஸ் சார்ந்த அரசியல் கட்சி எது?**

அ. ஆஸ்திரேலிய தேசிய கட்சி

ஆ. ஆஸ்திரேலிய லிபரல் கட்சி

**இ. ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சி ☑**

ஈ. ஆஸ்திரேலிய கிரீன்ஸ்

Labor

✓ 9 ஆண்டுகள் எதிர்க்கட்சியாக இருந்தபிறகு, அந்தோனி அல்பானீஸ் தலைமையிலான ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது. நாட்டில் 74.6% வாக்குகள் பதிவாகியுள்ளன; 151 உறுப்பினர்களைக்கொண்ட பிரதிநிதிகள் சபையில் அந்தோனி அல்பானீஸ் கட்சி 75 இடங்களை வென்றது; அதே சமயம் பழமைவாத லிபரல் தேசிய கூட்டணி 57 இடங்களில் வெற்றிபெற்றது. அந்தோனி நார்மன் அல்பானீஸ் ஓர் ஆஸ்திரேலிய அரசியல்வாதி ஆவார். இவர், ஆஸ்திரேலியாவின் 31ஆவது மற்றும் தற்போதைய பிரதமராவார். அவர் 2019 முதல் ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சியின் தலைவராகவும், 1996ஆம் ஆண்டு முதல் கிரெண்ட்லரின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்துவருகிறார்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ₹31,500 கோடி மதிப்பில் புதிய திட்டங்கள்: பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்**

உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் ₹31,500 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி, சென்னையில் தொடங்கி வைத்தார்.

**பிரதமர் தொடக்கி வைத்த நிறைவடைந்த திட்டங்கள்:**

₹500 கோடியில் மதுரை–தேனி இடையே அகல இரயில்பாதை, ₹590 கோடியில் சென்னை தாம்பரம்–செங்கல்பட்டு இடையேயான 3ஆவது இரயில்பாதை, ₹116 கோடியில் பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித்திட்டத்தின்கீழ், குறைந்த செலவில் சென்னையில் கட்டப்பட்ட 1,152 வீடுகளைத் தொடக்கிவைக்கப்பட்டுள்ளன.

எண்ணூர்–செங்கல்பட்டு பிரிவு மற்றும் திருவள்ளூர்–பெங்களூரு இடையே இயற்கை எரிவாயு குழாய் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களையும் பிரதமா் நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.

**அடிக்கல் நாட்டுதல்:**

₹14,870 கோடியில் 262 கிலோமீட்டர் தூர பெங்களூரு–சென்னை விரைவுச்சாலை திட்டம் கர்நாடகம்–ஆந்திரம்–தமிழ்நாடு வழியாகச்செல்கிறது.

சென்னை துறைமுகம் – மதுரவாயிலையும் இணைக்கும் 21 கிலோமீட்டர் தூர ஈரடுக்கு, நான்குவழி உயர்நிலைச் சாலை, ₹5,850 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளது.

நெரலூரு–தருமபுரி பிரிவில் 94 கிமீ தொலைவுக்கு நான்கு வழிச்சாலை, மீன்சுருட்டி–சிதம்பரம் பிரிவில் 31 கிமீ இரு வழிச்சாலை ஆகியவை ₹3,870 கோடி மற்றும் ₹720 கோடியில் அமைக்கப்படவுள்ளது. இந்தத் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

சென்னை எழும்பூர், இராமேசுவரம், மதுரை, காட்பாடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து இரயில் நிலையங்களின் மறுசீரமைப்பு பணிகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ₹1,800 கோடியில் இரயில் நிலையங்கள் மறுசீரமைப்பு செய்யப்படும். சென்னையில் ₹1,400 கோடியில் பன்மாதிரி சரக்கு போக்குவரத்துப் பூங்கா உள்ளிட்ட ₹28,500 கோடி செலவிலான திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

---

**2. இந்திய வான்படையின் முதல் பெண் போர்விமானி அபிலாஷா பாரக்**

இந்திய வான்படையின் முதல் பெண் போர்விமானியாக அபிலாஷா பாரக் நியமிக்கப்பட்டுள்ளார். நாசிக்கில் உள்ள வான்படை பயிற்சி மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 36 வான்படை விமானிகளுடன் அபிலாஷா பாரக்கிற்கு விமானி பட்டம் வழங்கப்பட்டது. இதன்மூலம் இந்தியாவின் போர்விமானத்தின் பெண் விமானி என்ற பெருமையை அபிலாஷா பாரக் பெற்றுள்ளார். ஹரியாணா மாநிலத்தைச் சேர்ந்த அபிலாஷா பாரக், கடந்த 2018, செப்டம்பர் மாதம் வான்படையில் சேர்ந்தார். இவர், ஓய்வுற்ற வான்படை அதிகாரி கர்னல் எஸ் ஓம் சிங்கின் மகள் ஆவார்.

---

**3. ஓய்வூதியதாரருக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்: 4 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு**

ஓய்வூதியதாரருக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை நான்கு ஆண்டுகளுக்கு நீட்டித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக நிதித்துறை வெளியிட்டுள்ள உத்தரவு விவரம்:

அரசுப்பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கான புதிய காப்பீட்டுத்திட்டம் வரும் ஜூன் 30–ஆம் தேதியுடன் நிறைவடைய இருந்தது. இந்தத் திட்டத்தை மேலும் நான்கு ஆண்டுகளுக்கு அதாவது 2026ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் தேதி வரை நீட்டித்து உத்தரவிடப்படுகிறது. இதற்கான தகுந்த பொதுத்துறை நிறுவனமானது ஒப்பந்தப்புள்ளிகள் கோரல் அடிப்படையில் இறுதி செய்யப்படும்.

நான்கு ஆண்டுகளில் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு நிதியுதவியின் அளவு ₹4 லட்சத்தில் இருந்து ₹5 லட்சமாக உயர்த்தப்படுகிறது. புற்றுநோய், கணையம் உள்ளிட்ட இதர உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்வோருக்கு மருத்துவ உதவித் தொகையின் அளவு ₹10 லட்சமாக அதிகரிக்கப்படுகிறது.

கரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு ₹10 லட்சம் வரையில் மருத்துவ உதவித் தொகை கிடைக்கும். ஓய்வூதியதாரர்களைச் சார்ந்து இருக்கும் நபர்களும் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்துக்குள் வருவர். காப்பீட்டு நிறுவனம் இறுதி செய்யும் மாதாந்திரத் தொகையானது ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களிடம் இருந்து பெறப்படும்.

---

**1. இந்தியாவின் மிகப்பெரிய லித்தியம் அயன் மின்கல ஆலை அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. குஜராத் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா

✓ இந்தியாவின் மிகப்பெரிய லித்தியம் அயன் மின்கல ஆலை குஜராத் மாநிலத்தில் உள்ளது. நெக்ஸ்சார்ஜ், இந்திய பேட்டரி தயாரிப்பாளரான எக்ஸைட் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் சுவிச்சர்லாந்தின் லெக்லாஞ்ச் எஸ்ஏ ஆகியவற்றின் கூட்டுமுயற்சியில் ஆலையில் பெருமளவு உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. ஆட்டோமொபைல்கள் மற்றும் ஆற்றல் சேமிப்பு பயன்பாடுகளுக்கான மின்கலங்களை உற்பத்தி செய்ய மொத்தம் 1.5 GW மணிநேரம் என்ற நிறுவப்பட்ட திறன்கொண்டதாகும் இது. நெக்ஸ்சார்ஜ் நிறுவனம் இதுவரை 2.5 பில்லியன் ரூபாயை ஆலையைக் கட்டுவதற்கும் அமைப்பதற்கும் முதலீடு செய்துள்ளது.

**2. வடகிழக்குத் திறனுருவாக்கம் (NECB) 2.0 திட்டத்தை அறிமுகப்படுத்திய அமைச்சகம்/நிறுவனம் எது?**

**அ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம்

இ. NASSCOM

ஈ. NITI ஆயோக்

✓ மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது ஐந்து தேசிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தைத் (NEILIT) தொடங்கியுள்ளது. வடகிழக்குத் திறன் உருவாக்கம் (NECB) 2.0 திட்டம் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள மக்களுக்கு டிஜிட்டல் திறன் தொகுப்புகள் மற்றும் தொழிற்துறைக்குரிய தொழில் நுட்பங்கள்பற்றிய பயிற்சிக்காக தொடங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி திமாபூரில் உள்ள தேசிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (NEILIT) நடைபெற்றது.

**3. 2022 – 'வடகிழக்கு உணவுக்கண்காட்சி'யை நடத்தும் நகரம் எது?**

அ. கௌகாத்தி

**ஆ. ஷில்லாங் ☑**

இ. திஸ்பூர்

ஈ. கோகிமா

✓ ஷில்லாங்கில் வடகிழக்கு உணவுக் கண்காட்சியை மேகாலய மாநில முதலமைச்சர் கான்ராட் கே சங்மா மற்றும் சிக்கிம் மாநில முதளமைச்சர் பிரேம் சிங் தமாங் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இவ்வுணவுக்கண்காட்சியானது, வடகிழக்கு பகுதிகளைச்சேர்ந்த தொழில்முனைவோர் மற்றும் விவசாயிகளுக்கு சர்வதேச சந்தைகளுக்கான ஒரு தளத்தை வழங்குகிறது. மேகாலயா, SIAL உணவு கண்டுபிடிப்பு நெட்வொர்க்குடன் இணைந்து, 2019–இல் இதன் முதல் நிகழ்வை ஏற்பாடு செய்தது. தற்போது இந்நிகழ்ச்சியின் இரண்டாவது பதிப்பு நடைபெறுகிறது.

**4. 2022–இல் நடைபெறவுள்ள 19ஆவது ஆசிய விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ள இடம் எது?**

அ. டோக்கியோ, ஜப்பான்

**ஆ. ஹாங்சோ, சீனா ☑**

இ. கொழும்பு, இலங்கை

ஈ. புது தில்லி, இந்தியா

- ✓ சீனாவின் ஹாங்சோவில் 2022 செப்.10 முதல் 25 வரை நடைபெறவிருந்த 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி, சீனாவில் COVID–19 பாதிப்புகள் அதிகரித்து வரும் காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆசிய ஒலிம்பிக் கழகம் இந்த விளையாட்டுப் போட்டிகளை ஒத்திவைத்துள்ளது. ஒலிம்பிக்கிற்குப் பிறகு இரண்டாவது மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வாக இது பார்க்கப்படுகிறது.

**5. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'மால்பே மிதக்கும் பாலம்' அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. கேரளா

**ஆ. கர்நாடகா ☑**

இ. மேகாலயா

ஈ. ஹிமாச்சல பிரதேசம்

- ✓ கர்நாடகாவின் முதல் மிதக்கும் பாலம் உடுப்பியில் உள்ள மால்பே கடற்கரையில் சமீபத்தில் திறக்கப்பட்டது. ஒரு பார்வையாளர் பாலத்தின்மீது நடக்கும்போது கடலலையின் அசைவை அவர் உணரும் வண்ணம் இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. இப்பாலம் 100 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்டது மற்றும் சுமார் 100 பார்வையாளர்கள் வரை இந்தப் பாலத்தில் ஒரே நேரத்தில் நடக்க முடியும். பாலம் நிரந்தரமாக இணைக்கப்படாததால், இதனை எளிதாக வேறு இடத்திற்கு மாற்றவும் முடியும்.

**6. 2022 – தேசிய கயிறு வாரிய மாநாடு ஏற்பாடு செய்யப்பட்ட நகரம் எது?**



அ. கொச்சி

**ஆ. கோயம்புத்தூர் ☑**

இ. திருநெல்வேலி

ஈ. தென்காசி

- ✓ தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில், 'அமுதப்பெருவிழாவி'ன்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட 'தேசிய கயிறு வாரிய மாநாட்டை' மத்திய MSME அமைச்சர் நாராயண் ரானே தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வின்போது, 44 தென்னை நார் மற்றும் தென்னைநார் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அலகுகளுக்கு தென்னைநார் தொழிற்சாலைகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் புவிசார் கயிறு ஜவுளி பொருட்கள், நார் மரம், நார் மெத்தை, தரை விரிப்புகள் குறித்த நான்கு புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

**7. அடல் ஓய்வூதியத் திட்டத்தில் சேருவதற்கான அதிகபட்ச வயது வரம்பு என்ன?**




அ. 35 ஆண்டுகள்

**ஆ. 40 ஆண்டுகள் ☑**

இ. 45 ஆண்டுகள்

ஈ. 50 ஆண்டுகள்

- ✓ பிரதமர் சுரக்ஷா பீமா யோஜனா (PMJJBY), பிரதமர் ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMSBY), மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டம் (APY) ஆகியவை சமூகப்பாதுகாப்பு வலையை வழங்குவதில் ஏழு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அடல் அடல் ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை நான்கு கோடிக்கும் அதிகமான நபர்கள் குழுசேர்ந்துள்ளனர். ஓய்வூதியத் திட்டத்தில் சேர, ஒருவர் 18 முதல் 40 வயதுக்கு உட்பட்டவராக இருக்கவேண்டும். மாதாந்திர தொகையைப் பொறுத்து மாதம் 1000 முதல் 5000 ரூபாய் வரை ஓய்வூதியம் பெறலாம்.

**8. 8000 மீட்டருக்கும் அதிக உயரமுடைய ஐந்து சிகரங்களை ஏறிய முதல் இந்தியப் பெண்மணி யார்?**

**அ. பிரியங்கா மோகிதே ☑**

ஆ. அருணிமா சின்ஹா

இ. ஷிவாங்கி பதக்

ஈ. தாஷி யாங்ஜோம்



✓ பிரியங்கா மோகிதே (30) என்பவர் 8000 மீட்டருக்கும் அதிக உயரமுடைய 5 சிகரங்களை ஏறிய முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார். கடல்மட்டத்திலிருந்து 8586 மீ உயரத்தில் உள்ளதும் பூமியின் 3ஆவது உயரமான மலையுமான கஞ்சஞ்சங்கா மலையில் ஏறியதுடன் அவர் இச்சாதனையைப் படைத்துள்ளார். 2013ஆம் ஆண்டில், மோகிதே உலகின் மிகவுயரமான சிகரமான எவரெஸ்ட் (8849 மீ) சிகரத்தை ஏறினார். மோகிதே, 2020ஆம் ஆண்டுக்கான 'டென்சிங் நோர்கே அட்வெஞ்சர்' விருதையும் பெற்றுள்ளார்.

**9. உலக வங்கியின் முன்னாள் பொருளாதார நிபுணர் ரோட்ரிகோ சாவ்ஸ், எந்த நாட்டின் அதிபராக பதவியேற்றார்?**

அ. ஸ்பெயின்

**ஆ. கோஸ்ட்டா ரிக்கா ☑**

இ. பிரேசில்

ஈ. பிரான்ஸ்



✓ கோஸ்டா ரிகாவின் புதிய அதிபராக ரோட்ரிகோ சாவ்ஸ் சமீபத்தில் பதவியேற்றார். உலக வங்கியின் முன்னாள் பொருளாதார நிபுணரான இவர் கடந்த மாதம் முன்னாள் அதிபர் ஜோஸ் மரியா பிகியூரஸை எதிர்த்து வென்றார். சுமார் ஐந்து மில்லியன் மக்கள்தொகைகொண்ட கோஸ்டாரிகா, மத்திய அமெரிக்காவில் அரசியல் ரீதியாக மிகவும் நிலையான நாடுகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

**10. 'ரோமைன் ரோலண்ட்' நூல் பரிசானது கீழ்காணும் எம்மொழி நூலை இந்திய மொழி/ஆங்கிலத்தில் சிறப்புற மொழிபெயர்ப்பதற்காக வழங்கப்படுகிறது?**

அ. செருமானிய மொழி

**ஆ. பிரெஞ்சு மொழி ☑**

இ. சுபானிய மொழி

ஈ. ஜப்பானிய மொழி




✓ 'ரோமைன் ரோலண்ட்' நூல் பரிசென்பது ஒரு பிரெஞ்சு நூலை இந்திய மொழி அல்லது ஆங்கிலத்தில் சிறப்புற மொழிபெயர்த்தோர்க்கு வழங்கப்படுகிற பரிசாகும். பிரெஞ்சு நாவலான "Meursault, contre–enquête" (The Meursault Investigation)–இன் பெங்காலி மொழிபெயர்ப்பு ஐந்தாவது 'ரோமைன் ரோலண்ட்' நூல் பரிசை வென்றுள்ளது. அல்ஜீரிய எழுத்தாளரும் பத்திரிகையாளருமான கமெல் தாவூதின் முதல் நாவல் இது. இவ்விருது மொழிபெயர்ப்பாளர் திரினஞ்சன் சக்ரவர்த்தி மற்றும் பதிப்பாளர் பத்ர பாரதி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சர்வதேச தடகளம்: முரளிக்கு தங்கம்**

கிரீஸில் நடைபெற்ற 12–ஆவது சர்வதேச தடகள போட்டியில் இந்தியாவின் முரளி ஸ்ரீசங்கர் நீளம் தாண்டுதலில் தங்கப்பதக்கம் வென்று அசத்தினார்.

காலிதியா நகரில் நடைபெற்ற இப்போட்டியில் முரளி, 8.31 மீட்டர் தூரம் தாண்டி முதலிடம் பிடித்தார். சுவீடன் வீரர் தோபியாஸ் மான்ட்லர் (8.27 மீ) வெள்ளியும், பிரான்ஸின் ஜூல்ஸ் போமெரி (8.17 மீட்டர்) வெண்கலமும் பெற்றனர். நீளந்தாண்டுதலில் தற்போதைய தேசிய சாதனை முரளி ஸ்ரீசங்கரிடமே உள்ளது. கடந்த மாதம் பெடரேஷன் கோப்பை போட்டியின்போது 8.36 மீட்டர் நீளம் தாண்டி சாதனை படைத்தார் முரளி.

---

**2. 2020–இல் சாலை விபத்துகளில் தமிழ்நாடு முதலிடம்**

நாடு முழுவதும் கடந்த 2020–இல் 3,66,138 சாலை விபத்துகள் நிகழ்ந்துள்ளன. இதில் 1,20,806 பேர் பலியாகினர். காயமடைந்தவர்கள் 3,48,279 பேர். இதில் அதிகப்படியாக சாலை விபத்துகளில் (45,484) தமிழ்நாடும், அதிகப் படியான உயிரிழப்பில் (19,149) உத்தர பிரதேச மாநிலமும் முதலிடத்தில் வகிக்கின்றன என்று மத்திய நெடுஞ்சாலை போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அதிகப்படியான விபத்துகள் நிகழும் மாநிலமாக நீடித்து வருகிறது.

'இந்தியாவில் 2020–இல் பதிவான சாலை விபத்துகள்' என்ற தலைப்பில் மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில், நாட்டில் கடந்த 2020–இல் 1,20,806 அபாயகரமான விபத்துகள் நடைபெற்றதாகவும் இதில் 43,412 (35.9 சதவீதம்) தேசிய நெடுஞ்சாலையிலும், 30,171 (25 சதவீதம்) மாநில நெடுஞ்சாலைகளிலும், 47,223 (39.1 சதவீதம்) பிற சாலைகளிலும் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2019–இல் பதிவான 1,37,689 விபத்துகளைக் காட்டிலும் 2020–இல் 12.23 சதவீதம் குறைவாகவே விபத்து வீதம் பதிவாகியுள்ளது. சாலை விதிகளைப் பின்பற்றாததால், 85,032 (64%) விபத்துகள் நிகழ்ந்தன என்று அந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

**2020–ஆம் ஆண்டு சாலை விபத்தில் முதல் ஐந்து மாநிலங்கள்**

**மாநிலம் விபத்துகள் (சதவீதம்) உயிரிழப்பு**

தமிழ்நாடு 45,484 (12.4%) 7,039

மத்திய பிரதேசம் 45,266(12.36%) 11,141

உத்தர பிரதேசம் 34,176 (9.3%) 19,149

கர்நாடகம் 34,176 (9.3) 9,760

கேரளம் 27,877 (7.6%) 2,979

**பலியானவர்களின் வயது**

18–45 69%

18–60 87.4%

**விபத்துகள் நிகழ்ந்த இடம்**

தேசிய நெடுஞ்சாலை 1,16,496 (31.8%)

மாநில நெடுஞ்சாலை 1,58,887 (43.4%)

பிற சாலைகள் 90,755 (24.8%)

**ஊரக பகுதி விபத்துகள்** – 68%

**நகர்ப்புற விபத்துகள்** – 32%

---

**1. "பரம் யோதா ஸ்தலம்" அமைந்துள்ள நகரம் எது?**




**அ. புது தில்லி ☑**

ஆ. லக்னோ

இ. ஜம்மு

ஈ. அமிர்தசரஸ்

- ✓ இந்திய நுழைவாயில் உள்ள அமர் ஜவான் ஜோதியின் ஒருபகுதியாக இருந்த நினைவுச்சின்னமான துப்பாக்கி மற்றும் சிப்பாயின் போர் தலைக்கவசம், 2022 மே.27 அன்று தேசிய போர் நினைவகத்திற்குக்கொண்டு செல்லப்பட்டது. இது, 1971 போரில் இறந்த வீரர்களின் நினைவுச்சின்னமாகும். இந்திய நுழைவாயில் உள்ள அமர் ஜவான் ஜோதி 2022 ஜனவரியில் தேசிய போர் நினைவகத்தில் நித்திய சுடருடன் இணைக்கப்பட்டது.
- ✓ அமர் ஜவான் ஜோதி 1971ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போரில் இறந்த இந்திய வீரர்களின் நினைவாக கட்டப்பட்டது; அப்போரில் இந்தியா வென்றது; அது வங்கதேசம் உருவாக வழிவகுத்தது. 26 ஜனவரி 1972 அன்று அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் இது திறந்து வைக்கப்பட்டது.

**2. ஆப்கானிஸ்தான் தொடர்பான 4ஆவது பிராந்திய பாதுகாப்பு பேச்சுவார்த்தை நடைபெறும் இடம் எது?**




அ. தாராஸ், கஜகஸ்தான்

ஆ. தாஷ்கண்ட், உஸ்பெகிஸ்தான்

**இ. துஷான்பே, தஜிகிஸ்தான் ☑**

ஈ. தெஹ்ரான், ஈரான்

- ✓ தஜிகிஸ்தான், இந்தியா, ரஷ்யா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஈரான், கிர்கிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் 2022 மே.26 அன்று ஆப்கானிஸ்தான் தொடர்பான 4ஆவது பிராந்திய பாதுகாப்பு பேச்சுவார்த்தைக்காக தஜிகிஸ்தானின் துஷான்பேயில் சந்தித்தனர். இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், இந்தியாவின் அணுகுமுறை தொடர்ந்து வழிநடத்தும் எனத் தெரிவித்தார்.

**3. 2022ஆம் ஆண்டுக்கான சர்வதேச புக்கர் பரிசை வென்ற ரெட்ஸ் மௌசோலியம் என்று முதலில் பெயரிடப்பட்ட "டோம்ப் ஆஃப் சாண்ட்" என்ற நாவலின் ஆசிரியர் யார்?**




அ. அனிதா தேசாய்

ஆ. அருந்ததி ராய்

**இ. கீதாஞ்சலி ஸ்ரீ ☑**

ஈ. சசி தேஷ்பாண்டே

- ✓ ரீட் கா மக்பரா என்பது புது தில்லியைச் சார்ந்த ஒரு சாதாரண இலக்கியவாதியான கீதாஞ்சலி ஸ்ரீ எழுதிய ஹிந்தி நாவல் ஆகும். இது 2022ஆம் ஆண்டுக்கான சர்வதேச புக்கர் பரிசை வென்றது; அது அமெரிக்காவில் உள்ள டெய்சி ராக்வெல் என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. முதலில் 'ரெட் கி சமதி' என்று பெயரிடப்பட்டு 2018இல் வெளியிடப்பட்ட சாண்ட் கா மக்பரா, இம்மதிப்புமிக்க அங்கீகாரத்தைப் பெற்ற ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் இந்தி படைப்பாகும். பெங்குயின் இந்தியா அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை 2022 மார்ச்சில் வெளியிட்டது. இந்த நூல், 'இங்கிலிஷ் பெயின்' விருதையும் வென்றுள்ளது.

**4. மாதவிடாய் சுகாதார நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ. 27 மே ஆ. 26 மே

இ. 25 மே **ஈ. 28 மே ☑**

- ✓ மாதவிடாய் காரணமாக உலகெங்கிலும் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் சவால்கள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் தீர்வுகளை முன்னிலைப்படுத்தவுமாக ஆண்டுதோறும் மே.28 அன்று மாதவிடாய் சுகாதார நாள் அனுசரிக்கப்படுகிறது. "Making Menstruation a Normal Fact of Life by 2030" என்பது இந்த ஆண்டு (2022) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**5. எத்தனை இந்தியர்களுக்கு 2022ஆம் ஆண்டுக்கான புலிட்சர் பரிசு வழங்கப்பட்டுள்ளது?**



அ. ஒன்று

ஆ. இரண்டு

**இ. நான்கு ☑**

ஈ. ஆறு

- ✓ பத்திரிகை, நூல்கள், நாடகம் மற்றும் இசை ஆகியவற்றில் புலிட்சர் பரிசு (2022) வென்றவர்கள் அண்மையில் அறிவிக்கப்பட்டனர். அதில் நான்கு விருதுகளை இந்தியா பெற்றுள்ளது. பிரபல நிழற்படக்கலைஞரான டேனிஷ் சித்திக் (இறப்பிற்குப்பின்) சிறப்பு நிழற்படமெடுத்தல் பிரிவில் புலிட்சர் விருது பெற்றார். மற்ற இந்திய வெற்றியாளர்கள்: அட்னான் அபிடி, சன்னா இர்ஷாத் மட்டூ மற்றும் அமித் டேவ். நான்கு பேருக்கும் இந்தியாவில் COVID தாக்கங்குறித்த அவர்களின் நிழற்படங்களுக்காக மதிப்புமிக்க புலிட்சர் பரிசு வழங்கப்படுகிறது.


**6. உலக லூபஸ் நாளானது ஆண்டுதோறும் மே.10 அன்று அனுசரிக்கப்படுகிறது. 'லூபஸ்' என்றால் என்ன?**

அ. அழிந்துவரும் ஒரு மீனினம்

**ஆ. ஒரு நோய் ☑**

இ. ஒரு சிறுபான்மை இனம்

ஈ. ஒரு மொழி




- ✓ உடலின் எந்தப்பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நாள்பட்ட தன்னுடல் தாக்க நோயான 'லூபஸ்' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் மே.10 அன்று 'உலக லூபஸ் நாள்' அனுசரிக்கப்படுகிறது. இவ்வகை நோயில், நோயெதிர்ப்பு அமைப்பு செயலிழந்து, நோய்க்கிருமிகளுக்கும் ஆரோக்கியமான திசுக்களுக்கும் இடையில் வேறுபடுத்திப் பார்க்க முடியாமல், நலமான திசுக்களை அழிக்கும் ஆன்டிபாடிகளை உருவாக்குகிறது. லூபஸ் நோயின் மிகவும் பொதுவான அறிகுறிகளாக இடைவிடாத காய்ச்சல், வாய்ப்புண்கள், மூட்டு மற்றும் தசை வலி மற்றும் தீவிர சோர்வு ஆகியவை காணப்படுகிறது.

**7. பிளாஸ்டிண்டியா 2023 – 11ஆவது சர்வதேச நெகிழிக் கண்காட்சி மற்றும் மாநாட்டை நடத்தும் நகரம் எது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. சென்னை

இ. திருவனந்தபுரம்

ஈ. வாரணாசி

PLASTINDIA 2023
11th International Plastics Exhibition, Conference & Convention
Feb. 1- 5, 2023, Pragati Maidan, New Delhi, India.

- ✓ மத்திய வேதி & உரங்கள் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா பிளாஸ்டிண்டியா 2023 – 11ஆவது சர்வதேச நெகிழிக் கண்காட்சி மற்றும் மாநாட்டை தொடங்கி வைத்தார்.
- ✓ பிளாஸ்டிண்டியா அறக்கட்டளையானது 11ஆவது சர்வதேச நெகிழிக் கண்காட்சி மற்றும் மாநாட்டை 2023 பிப்.1–5 வரை புது தில்லியில் அமைந்துள்ள ITPO பிரகதி மைதானத்தில் நடத்தவுள்ளது. இந்திய இரசாயனப்பொருட்களின் ஏற்றுமதி 2013–14–ஐவிட 2021–22–இல் 106% வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**8. NATO'இன் இணையவெளிப் பாதுகாப்புக் குழுவில் இணைந்த முதல் ஆசிய நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. தென் கொரியா ☑**

இ. இலங்கை

ஈ. வங்காளதேசம்



✓ தென் கொரியாவின் தேசிய புலனாய்வு சேவை NATO–இன் இணையவெளிப் பாதுகாப்புக் குழுவில் இணைந்த ஆசியாவின் முதல் நாடு ஆனது. தென் கொரியாவானது சீனா மற்றும் வட கொரியாவின் சைபர் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டுள்ளது. நேட்டோவின் கூட்டுறவு சைபர் டிபென்ஸ் சென்டர் ஆப் எக்ஸலன்ஸ் (CCDCOE)–க்கு பங்களிக்கும் பங்கேற்பாளராக NIS ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது 2008–இல் எஸ்டோனியாவில் நிறுவப்பட்ட இணைய பாதுகாப்பு மையமாக இருந்தது மற்றும் இணைய பாதுகாப்பு ஆராய்ச்சி, பயிற்சிகளில் இது கவனஞ்செலுத்துகிறது.

**9. 'Gaudi2' மற்றும் 'Greco' என்ற புதிய செயற்கை நுண்ணறிவு சில்லுகளை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

அ. என்விடியா

**ஆ. இன்டெல் ☑**

இ. குவால்காம்

ஈ. சாம்சங்

✓ உலகளாவிய சில்லு உற்பத்தியாளரான இன்டெல் கார்ப், செயற்கை நுண்ணறிவு கணினியலில் கவனஞ்செலுத்தும் 'Gaudi2' என்ற புதிய சில்லை அறிமுகப்படுத்தியது. இன்டெல் ஆனது 'Greco' என்ற புதிய சில்லை அனுமானிக்கும் வேலைக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. அது AI நெறிமுறை ஒன்றை எடுத்து அதனை கணிப்பது அல்லது ஒரு பொருளை அடையாளங்காணுதல் ஆகிய பணிகளைச் செய்கிறது. AI சில்லு சந்தையில் தற்போது என்விடிய கார்ப் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

**10. 'இன்டர்சோலார் ஐரோப்பா – 2022' நிகழ்வை நடத்தும் நகரம் எது?**

அ. புது தில்லி

**ஆ. முனிச் ☑**

இ. டாக்கா

ஈ. லண்டன்

✓ 'இன்டர்சோலார் ஐரோப்பா – 2022' ஆனது முனிச்சில் உள்ள இந்தோ–ஜெர்மன் ஆற்றல் மன்றத்தால் (IGEF) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது சூரிய மின்னுற்பத்தி தொழிற்துறை மற்றும் அதன் கூட்டாளர்களுக்கான உலகின் முன்னணி கண்காட்சித் தொடராகும். நமது ஆற்றல் விநியோகத்தில் சூரிய ஆற்றலின் பங்கை அதிகரிப்பதே இந்தக் கண்காட்சியின் நோக்கமாகும். இது பல நாடுகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் முக்கிய பன்னாட்டு நிறுவனங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படும். மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் இணையமைச்சர் ஸ்ரீ பகவந்த் குபா இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மே.28 – உலக இரத்தப் புற்றுநோய் விழிப்புணர்வு நாள்**

**2. அரசு மருத்துவமனை பிரசவங்களை 75%-ஆக உயர்த்த இலக்கு: அமைச்சர் மா சுப்பிரமணியன்**

அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை 75 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மாநில சுகாதாரத்துறை அதிகாரிகளுடனான ஆலோசனைக்கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அப்போது, கர்ப்பிணிகளுக்கான 'பிக்மி 2.0' இணையதளத்தில், பேறுகாலத்தை சுயமாகப் பதிவு செய்து, பதிவெண் பெறும் திட்டத்தை அமைச்சர் மா சுப்பிரமணியன் தொடக்கி வைத்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பச்சிளம் குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கு 11 வகை தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன. குறிப்பாக, மஞ்சள் காமாலை, தட்டம்மை, போலியோ, ரூபெல்லா, கக்குவான் இருமல், காசநோய், தொண்டை அடைப்பான், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட நோய்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன.

முழுமையாக தடுப்பூசி பெற்ற குழந்தைகளின் சதவீதம் 76.1–ஆக இருந்து, 90.4 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு 9.31 இலட்சம் பச்சிளங்குழந்தைகளுக்கும், 10.21 இலட்சம் கர்ப்பிணிகளுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. கரோனா தடுப்பூசியுடன், இவ்வகை தடுப்பூசிகளும் தொடர்ந்து செலுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் மாதந்தோறும் 75,000 முதல் 81,000 பிரசவங்கள் நடைபெறுகின்றன. இதில், 60 சதவீத பிரசவங்கள் மட்டுமே, அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. அடுத்த ஈராண்டுகளில், அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை 75 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் நடைபெறும் ஆயிரம் பிரசவங்களில் 15 குழந்தைகள் இறக்கும் நிலை இருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை 13–ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. பிரசவ உயிரிழப்பு குறைவாக உள்ள மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. கேரளம் முதலிடம் பெற்றுள்ளது. விரைவில், அந்தப் பட்டியலில், தமிழ்நாடு முதலிடம் பெறவேண்டும் என்பதே அரசின் இலக்கு என்றார் அவர்.

---

**3. ஆண்டுக்கு ஆறு கிராம சபைக் கூட்டங்கள்: தமிழக அரசு உத்தரவு**

ஆண்டுக்கு ஆறு நாள்கள் கிராம சபைக் கூட்டங்களை நடத்துவதற்கான உத்தரவை தமிழ்நாடு அரசு வெளியிட்டது.

**இதுகுறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வெளியிட்ட உத்தரவு:**

தமிழகத்தில் குடியரசு நாள், உழைப்பாளர் நாள், சுதந்திர நாள், காந்தி ஜெயந்தி என ஆண்டுக்கு நான்கு நாள்கள் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், ஆண்டுக்கு ஆறு கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும் என சட்டப்பேரவை விதி 110–இன்கீழ் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், உத்தரவு வெளியிடப்படுகிறது.

ஆண்டுதோறும் மார்ச்.22–ஆம் தேதி உலக தண்ணீர் நாளாகவும், நவ.1–ஆம் தேதி உள்ளாட்சிகள் நாளாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக, இவ்விரு தினங்களிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும். மார்ச் 22–ஆம் தேதி நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில், தண்ணீரின் தேவை, சிக்கனத்தை மனதில் வைத்துச் செயல்பட அறிவுறுத்தும் வகையில் உறுதி ஏற்கப்படும். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, உயிர்போல் காப்போம் என்ற உறுதிமொழியை அனைவர் மனதில் ஏற்று அதனை நிறைவேற்ற உறுதிமொழி எடுத்தல் போன்ற நடவடிக்கைகள் கிராம சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

நவ.1–ஆம் தேதி உள்ளாட்சிகள் நாளையொட்டி, ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து முழுமையாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இந்தக் கூட்டங்களில் ஏதேனும் ஓர் ஊராட்சியில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் கூட்டம் கூட்டப்பட்டு, நலத்திட்ட உதவிகள் பல்வேறு துறை பயனாளிகளுக்கு வழங்கப்படவேண்டும்.

---

**4. 2035–க்குள் நிலக்கரி பயன்பாட்டை ஒழிக்க ஜி7 நாடுகள் உறுதி**

எரிசக்தித் துறையில் நிலக்கரி பயன்பாட்டை 2035ஆம் ஆண்டுக்குள் முடிவுக்குக் கொண்டுவர ஜி7 நாடுகள் உறுதி ஏற்றுள்ளன. பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கனடா ஆகிய நாடுகள் ஜி7 கூட்டமைப்பில் உள்ளன. அந்தக் கூட்டமைப்பின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு ஜெர்மனியின் எல்மா நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் ஜி7 நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டம் ஜெர்மனி தலைநகர் பெர்லின் நகரில் நடைபெற்றது. அதில், 2035ஆம் ஆண்டுக்குள் எரிசக்தித் துறையில் நிலக்கரியின் பயன்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உறுதி ஏற்கப்பட்டது.

கரியமிலவாயு வெளியேற்றமில்லாத சாலைப் போக்குவரத்தை 2030–ஆம் ஆண்டுக்குள் ஏற்படுத்தவும் கூட்டத்தில் உறுதியேற்கப்பட்டது. இதன்மூலமாக நடப்பு தசாப்தத்தின் இறுதிவாக்கில் பசுமை எரிசக்தியில் இயங்கும் வாகனங்களே பெரும்பாலும் விற்பனையில் இருக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

---

**5. புக்கர் பரிசு வென்றார் இந்திய எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீ**

இலக்கியத்திற்காக வழங்கப்படும் புகழ்பெற்ற 'புக்கர்' பரிசு இந்தாண்டு இந்தியாவைச்சேர்ந்த ஹிந்தி நாவலாசிரியை கீதாஞ்சலி ஸ்ரீ–க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கியத் துறையில் சிறந்த ஆக்கங்கள் எனக் கருதப்படும் புத்தகங்கள் ஆண்டுதோறும் 'புக்கர்' பரிசுப்போட்டிக்கு அனுப்பப்படுகின்றன. அந்த வகையில் கடந்த ஆண்டு தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த எழுத்தாளர் டாமன் கல்கட் எழுதிய 'தி பிராமிஸ்' என்னும் நாவலுக்கு புக்கர் பரிசு வழங்கப்பட்டது.

தற்போது, நடப்பாண்டிற்கான (2022) புக்கர் பரிசுப்போட்டியில் உலகம் முழுவதிலிருந்தும் 135 புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன. இதில் இந்தியாவைச் சேர்ந்த தில்லியில் வசிக்கும் எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீ (64) ஹிந்தியில் எழுதிய 'ரெட் சமாதி' நாவல் 'டோம்ப் ஆப் சாண்ட்' (Tomb of Sand) என்னும் பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுக் கவனத்தை ஈர்த்ததால் இந்த முறை 'புக்கர்' போட்டிக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில், இறுதிச்சுற்றில் பங்குபெற்ற ஆறு புத்தகங்களில் ஒன்றான, 'டோம்ப் ஆப் சாண்ட்' நடுவர்களால் சிறந்த புத்தகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 'புக்கர்' பரிசை வென்றுள்ளது.

'புக்கர்' பரிசுத்தொகையான ₹50 இலட்சத்தை கீதாஞ்சலி ஸ்ரீ–உம் புத்தகத்தை ஹிந்தியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்த டெய்சி ராக்வெல்லும் பகிர்ந்துகொள்வார்கள். மேலும், இந்திய மொழியொன்றில் எழுதப்பட்ட புத்தகம் 'புக்கர்' பரிசு பெறுவது இதுவே முதல்முறையாகும்.

---

**6. கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழாவில் இந்திய ஆவணப்படத்துக்கு விருது**

பிரான்ஸின் கேன்ஸ் நகரில் நடைபெற்ற 75ஆவது சர்வதேச திரைப்பட விழாவில், இந்திய இயக்குநர் ஷௌனக் சென் இயக்கிய, 'ஆல் தேட் பிரீத்ஸ்' ஆவணப்படத்துக்கு 'தங்கக்கண் விருது' வழங்கப்பட்டது.

தில்லியைச் சேர்ந்த நதீம், சவூத் ஆகிய இரு சகோதரர்கள் புலம்பெயர்ந்து வரும் பருந்து உள்ளிட்ட பறவைகளை காற்று மாசுபாட்டிலிருந்து பாதுகாப்பதை கருவாகக் கொண்டது இந்தப்படம். கேன்ஸ் திரைப்பட விழாவில், சிறப்புக் காட்சியின்போது, 'ஆல் தேட் பிரீத்ஸ்' படம் திரையிடப்பட்டு, அனைவரது கவனத்தையும் ஈர்த்து தங்கக்கண் விருதை வென்றுள்ளது.

கேன்ஸ் விழாவில் கடந்த 2 ஆண்டுகளில் இது இந்தியாவுக்கான இரண்டாவது விருதாகும். கடந்த ஆண்டில் பாயல் கபாடியாவின், 'ஏ நைட் ஆப் நோயிங் நத்திங்' என்ற ஆவணப்படத்துக்கு இதே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

---

**1. PRIME (Program for Researchers for Innovation, Market Readiness and Entrepreneurship) என்பது கீழ்காணும் எந்த நிறுவனத்தின் முன்னெடுப்பாகும்?**

அ. திறன் இந்தியா இயக்கம்

**ஆ. NITI ஆயோக் ☑**

இ. NASSCOM

ஈ. NCERT

✓ மத்திய சுகாதாரம் & குடும்ப நலத்துறை இணையமைச்சரானவர் அடல் புத்தாக்க இயக்கம் – PRIME (புதுமை, சந்தை தயார்நிலை மற்றும் தொழில்முனைவுக்கான ஆராய்ச்சியாளர்களுக்கான திட்டம்) பிளேபுக் மற்றும் ஸ்டார்ட்–அப் கண்காட்சியை புது தில்லியில் தொடங்கினார். நாட்டில் உள்ள அனைத்து முக்கியமான துறைகளிலும் வலுவான உள்நாட்டு உற்பத்தித் திறன்களை உருவாக்குவதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**2. 1ஆவது செசபிள் சன்வே பார்மென்டெரா–2022 போட்டியை வென்றதை அடுத்து ஹாட்ரிக் பட்டங்களை வென்ற இந்திய கிராண்ட்மாஸ்டர் யார்?**

**அ. D குகேஷ் ☑**

ஆ. R பிரக்ஞானந்தா

இ. அதிபன் பாஸ்கரன்

ஈ. P ஹரிகிருஷ்ணா



✓ இந்திய கிராண்ட்மாஸ்டர் D குகேஷ் 1ஆவது செசபிள் சன்வே பார்மென்டெரா ஓப்பன் – 2022 செஸ் போட்டியில் சாம்பியனானார். இதற்குமுன்பு அண்மைய வாரங்களில் நடந்த லா ரோடா போட்டி மற்றும் மெனோர்கா ஓப்பனை வென்றதால் இது அவருக்கு ஹாட்ரிக் பட்டமாக அமைந்தது. 15 வயதான குகேஷ் 9 சுற்றுகளிலும் ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்த வெற்றியின்மூலம் உலகத் தரவரிசையில் 64ஆவது இடத்திற்கு முன்னேறினார்.

**3. மார்கோஸ் ஜூனியர் என்பார் எந்த நாட்டின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

**அ. பிலிப்பைன்ஸ் ☑**

ஆ. இந்தோனேசியா

இ. மியான்மர்

ஈ. நேபாளம்



✓ மறைந்த பிலிப்பைன்ஸ் சர்வாதிகாரி பெர்டினாண்ட் மார்கோஸின் மகன் மார்கோஸ் ஜூனியர் அதிபர் தேர்தலில் அமோக வெற்றிபெற்றார். மார்கோஸ் ஜூனியர் 30 மில்லியனுக்கும் அதிகமான வாக்குகளைப்பெற்றார்; இந்த எண்ணிக்கை அவருக்கு எதிராக போட்டியிட்ட தாராளவாத வேட்பாளரான லெனி ராப்ரெடோவின் எண்ணிக்கை –யைவிட இரண்டு மடங்கு அதிகமாகும். 1986–இல், மார்கோஸ் சீனியரும் அவரது குடும்பத்தினரும் நாட்டில் மக்கள் சக்தி புரட்சியால் நாடுகடத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**4. 17ஆவது மும்பை சர்வதேச திரைப்பட விழாவில் சிறப்புக்கவனம் பெறும் நாடு எது?**

அ. பூட்டான்

ஆ. இலங்கை

**இ. வங்காளதேசம் ☑**

ஈ. நேபாளம்



✓ ஆவணப்படம், குறும்படங்கள் மற்றும் அனிமேஷன் படங்களுக்கான மும்பை சர்வதேச திரைப்பட விழாவின் 17ஆம் பதிப்பு (MIFF–2022) 2022 மே.29 முதல் ஜூன் 4 வரை மும்பையிலுள்ள திரைப்படப்பிரிவு வளாகத்தில் நடக்கிறது. உலகெங்கிலும் உள்ள ஆவணப்படங்கள், குறும்படங்கள் மற்றும் அனிமேஷன் திரைப்படங்களை உள்ளடக்கிய இவ்விழாவில் வங்காளதேசம், 'சிறப்புக்கவனம் பெறும் நாடாக' உள்ளது.

**5. கீழ்காணும் எந்த மாநிலத்தில், நானோ யூரியா (திரவ) ஆலையை பிரதமர் சமீபத்தில் திறந்து வைத்தார்?**

**அ. குஜராத் ☑**

ஆ. மத்திய பிரதேசம்

இ. இராஜஸ்தான்

ஈ. மகாராஷ்டிரா




✓ 2022 மே.28 அன்று, IFFCO, கலோலில் (குஜராத்) நிறுவப்பட்ட நானோ யூரியா (திரவ) ஆலையை பிரதமர் மோடி திறந்து வைத்தார். காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திரில், 'சகாகர் சே பிராஸ்பரிட்டி' குறித்து பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களிடம் அவர் உரையாற்றினார். தோராயமாக ₹175 கோடி மதிப்பிலான நானோ யூரியா (திரவ) ஆலையானது வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், உழவரின் வருவாயை அதிகரிக்கவும் உதவும். இந்த ஆலை ஒரு நாளைக்கு 500 மில்லி கொள்ளளவுகொண்ட 1.5 இலட்சம் பாட்டில்களை உற்பத்தி செய்யும்.

**6. இந்திய ஆயுதப்படைகளில் 34 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு சமீபத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட INS கோமதி என்பது ஓர் ______?**

அ. இலகுரக விமானந்தாங்கிக்கப்பல்

**ஆ. ஏவுகணை போர்க்கப்பல் ☑**

இ. வேகமான போர்க்கப்பல்

ஈ. தாக்கும் நீர்மூழ்கிக் கப்பல்



✓ INS கோமதி (வழிசெலுத்தப்பட்ட ஏவுகணை போர்க்கப்பல்) தனது 34 ஆண்டு சேவைக்குப்பின் 2022 மே.28 அன்று மும்பையிலுள்ள கடற்படை கப்பல் தளத்தில் சூரிய அஸ்தமனத்தின்போது பணிநீக்கஞ்செய்யப்பட்டது. கோமதி ஆற்றின் பெயரால் அழைக்கப்படும் INS கோமதி, 1988 ஏப்.16 அன்று அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் கே சி பந்த் அவர்களால் பம்பாயில் உள்ள மசகான் டாக் லிட் நிறுவனத்தில் பணிக்குச் சேர்க்கப்பட்டது.

**7. திராவிட அரசியல் தலைவரும் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் இருந்த காலஞ்சென்ற 'கலைஞர்' மு கருணாநிதியின் 16 அடி உயர வெண்கலச்சிலை, கீழ்காணும் எவ்விடத்தில் திறக்கப்பட்டது?**

**அ. சென்னை ☑**

ஆ. திருவாரூர்

இ. மதுரை

ஈ. சேலம்



✓ திராவிட அரசியல் தலைவரும், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் இருந்த மறைந்த 'கலைஞர்' மு கருணாநிதி அவர்களின் 16 அடி உயர வெண்கலச்சிலையை (14 அடி உயர பீடத்தில் நிற்கும்) துணைக்குடியரசுத் தலைவர் வெங்கையா சென்னையில் 2022 மே.28 அன்று திறந்து வைத்தார்.

**8. சேவைகளை மேம்படுத்துவதற்காக தேசிய தரவு ஆளுமை கட்டமைப்பை வெளியிட்டுள்ள அமைச்சகம் எது?**

அ. தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம் ஆ. அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

இ. வணிகம் & தொழில் அமைச்சகம் **ஈ. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

✓ பொது மற்றும் தனியார் நிறுவனங்களால் சேவைகளை மேம்படுத்துவதற்காக குடிமக்களின் தனிப்பட்ட தரவுகளை திரட்டுவதற்கான வரைவு தேசிய தரவு ஆளுகை கட்டமைப்பை மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இந்த வரைவுக்கொள்கையானது தனிப்பட்ட தரவு அடிப்படையிலான இந்திய தரவுத்தொகுப்புத் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்மொழிகிறது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் தனிப்பட்ட மற்றும் அநாமதேய தரவுகள் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் அமைப்பால் பாதுகாப்பாக அணுகப்படுவதை உறுதிசெய்வதற்கான முறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் குறிப்பிடுகிறது.

**9. கூகுள் டிரான்ஸ்லேட் என்னும் மொழிபெயர்ப்புக் கருவியில் அண்மையில் எத்தனை புதிய இந்திய மொழிகள் சேர்க்கப்பட்டன?**

அ. 2

ஆ. 4

இ. 6

ஈ. 8 ☑

✓ கூகுள் சமீபத்தில் அஸ்ஸாமி, போஜ்புரி, சமற்கிருதம், டோக்ரி, கொங்கனி, மெய்ட்டீலோன் (மணிப்பூரி), மிசோ மற்றும் மைதிலி உள்ளிட்ட 8 இந்திய மொழிகளை அதன் கூகுள் டிரான்ஸ்லேட் மொழிபெயர்ப்புக் கருவியில் சேர்த்துள்ளது. உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் மொத்தம் 133 மொழிகளை உள்ளடக்கிய கூகுள் டிரான்ஸ்லேட் மொழி பெயர்ப்புக்கருவியில் கூகுள் மேலும் 24 மொழிகளைச்சேர்த்துள்ளது. கூகுள் கெச்சுவா (பெரு, பொலிவியா, ஈக்வடார்), குரானி (பராகுவே மற்றும் பொலிவியா, பிரேசில் மற்றும் அர்ஜென்டினா), மற்றும் ஐமாரா (பொலிவியா, பெரு மற்றும் சிலி) ஆகியவற்றை முதன்முறையாக சேர்க்கிறது.

**10. அண்மையில் $18.8 மில்லியன் டாலர்களுக்கு ஏலம்போன, 'தி ராக்' என்பதொரு _____?**

அ. ஓவியம்

**ஆ. வைரம் ☑**

இ. பிரம்மாண்ட படகு

ஈ. சிற்பம்



✓ இதுவரை ஏலம் விடப்பட்டதிலேயே மிகப்பெரிய வெண் வைரமான 'தி ராக்' 18.6 மில்லியன் சுவிஸ் பிராங்குகளுக்கு ($18.8 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) விற்கப்பட்டது. கோல்ப் பந்தைக் காட்டிலும் சற்று பெரியதாக இருந்த 228.31 காரட் கல், ஜெனிவாவில் கிறிஸ்டியின் ஏல நிறுவனத்தால் விற்கப்பட்டது. $33.7 மில்லியன் டாலர் மதிப்புள்ள வெண் வைரத்தின் உலக சாதனையை, 'தி ராக்' முறியடிக்கும் என்று அதிகம் நம்பப்பட்டது. இப்பெரிய வைரமானது 2000–களின் முற்பகுதியில் தென்னாப்பிரிக்காவில் உள்ள ஒரு சுரங்கத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது. ஜெனிவாவில் அதன் திட்டமிடப்பட்ட விற்பனைக்கு முன் துபாய், தைபே மற்றும் நியூயார்க்கில் அது காட்சிப்படுத்தப்பட்டது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முதன்முறையாக டிரோன்மூலம் பார்சல் விநியோகம்: குஜராத்தில் அஞ்சல்துறை முயற்சி வெற்றி**

நாட்டிலேயே முதன்முறையாக ஆளில்லா விமானம் (டிரோன்)மூலம் இந்திய அஞ்சல் துறை, மருந்து பார்சலை விநியோகம் செய்துள்ளது. குஜராத் மாநிலம், கட்ச் மாவட்டத்தில் இந்தச் சோதனை முயற்சி வெற்றிபெற்றுள்ளது.

---

**2. ஒரே வலைதளத்தில் மத்திய அரசின் சேவைகள்**

பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் சேவைகளை ஒரே இடத்தில் பெறுவதற்கு வழிவகுக்கும். 'ஜன் சமர்த்' என்ற வலைதளத்தை மத்திய அரசு விரைவில் பயன்பாட்டுக்குக் கொண்டுவரவுள்ளது. மத்திய அரசு செயல்படுத்தி வரும் 15 கடன்சார்ந்த திட்டங்களை முதல்கட்டமாக வலைதளத்தில் ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அரசின் சேவைகளை மக்கள் எளிதில் பெறும் நோக்கில் இந்த வலைதளம் செயல்படுத்தப்படவுள்ளது.

---

**1. அஞ்சல்துறையானது எந்த மாநிலத்தில் முதன்முறையாக டிரோனைப் பயன்படுத்தி அஞ்சல்களை வழங்கியது?**



அ. கேரளா

ஆ. தெலுங்கானா

**இ. குஜராத் ☑**

ஈ. ஒடிஸா

✓ முதன்முறையாக குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் சோதனைத் திட்டத்தின் ஒருபகுதியாக டிரோனைப் பயன்படுத்தி அஞ்சல்துறை அஞ்சலை அனுப்பியது. மத்திய தகவல் தொடர்பு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்கீழ் அஞ்சல் துறையின்மூலம் புஜ் தாலுகாவில் இருந்து கட்ச் மாவட்டத்தின் பச்சாவ் தாலுகா வரையிலான 46 கிமீ தூரத்தை 25 நிமிடங்களில் டிரோன் கடந்தது. இந்தச் சோதனைத் திட்டம் டிரோன்கள்மூலம் அஞ்சல் அனுப்புவதற்கான செலவு மற்றும் இரண்டு மையங்களுக்கு இடையேயான புவியியல் இருப்பிடம் ஆகியவற்றை ஆய்வுசெய்தது.

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பந்தன் எக்ஸ்பிரஸ் மற்றும் மைத்ரீ எக்ஸ்பிரஸ் ஆகியவை இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே ஓடுகின்றன?**



அ. நேபாளம்


ஆ. இலங்கை

**இ. வங்காளதேசம் ☑**

ஈ. மியான்மர்

✓ COVID தொற்றுப்பரவல் காரணமாக நிறுத்தப்பட்ட இந்தியா மற்றும் வங்காளதேசம் இடையே இயங்கும் பந்தன் எக்ஸ்பிரஸ், 2 ஆண்டுகளுக்குப்பிறகு சமீபத்தில் மீண்டும் தனது சேவையைத் தொடங்கியது. மைத்ரீ எக்ஸ்பிரஸ் 2 ஆண்டுகளுக்கும் மேலான நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் தனது சேவையைத்தொடங்கியது. கொல்கத்தா மற்றும் குல்னா இடையே பந்தன் எக்ஸ்பிரஸ் வாரத்தில் இரண்டு நாட்கள் இயக்கப்படுகிறது; மைத்ரீ எக்ஸ்பிரஸ் கொல்கத்தாவை டாக்காவுடன் இணைக்கிறது.

**3. 2022 – ஐநாஇன் அமைதிகாக்கும் படையினர் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




**அ. People Peace Progress: The Power of Partnerships ☑**

ஆ. Peace for All

இ. Planet Peace Partnerships

ஈ. Tribute to Peacekeepers

✓ சீருடை அணிந்த மற்றும் சிவிலியன் பணியாளர்களின் பங்களிப்பை போற்றும் வகையில் ஆண்டுதோறும் மே.29 அன்று ஐநாஇன் அமைதிகாக்கும் படையினருக்கான சர்வதேச நாள் கொண்டாடப்படுகிறது. 1948ஆம் ஆண்டு முதல் ஐநா–இன்கீழ் பணியாற்றிய சுமார் 4,200 அமைதிகாக்கும் படையினரை கௌரவிப்பதை இந்நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆண்டு (2022), "People Peace Progress: The Power of Partnerships" என்ற கருப்பொருளின் கீழ் இந்த நாள் அனுசரிக்கப்பட்டது.

**4. அண்மையில் வெளியிடப்பட்ட, 'இந்தியாவில் சாலை விபத்துகள் – 2020' என்ற அறிக்கையின்படி, 2020–இல் எந்த மாநிலம்/UT–இல் அதிக விபத்துத்தீவிரம் பதிவாகியுள்ளது?**



அ. கேரளா **ஆ. மிசோரம் ☑**

இ. அஸ்ஸாம் ஈ. ஹிமாச்சல பிரதேசம்

✓ 'இந்தியாவில் சாலை விபத்துகள் – 2020' என்ற தலைப்பிலான அறிக்கையின்படி, 2000ஆம் ஆண்டுக்குப்பிறகு மிகக்குறைந்த எண்ணிக்கையிலான சாலை விபத்துகளும், 2009–க்குப் பிறகு குறைந்த எண்ணிக்கையிலான இறப்புகளும், 2020ஆம் ஆண்டில் நிகழ்ந்துள்ளன.

✓ 100 விபத்துகளில் இறந்தவர்களின் எண்ணிக்கையைக்கொண்டு 'சாலை விபத்து தீவிரம்' வரையறுக்கப்படுகிறது. 2020–இல் 36 என இந்த எண்ணிக்கை உள்ளது; இது 2000–க்குப் பிறகு உயர்ந்துள்ளது. மிசோரம் (79) அதிக விபத்துத்தீவிரத்தை பதிவுசெய்துள்ளது. அதைத்தொடர்ந்து பீகார் (78) மற்றும் பஞ்சாப் (75) உள்ளது.

**5. தேசிய பூங்காவிற்குள் சமூக வன வளத்தை அங்கீகரிக்கும் இரண்டாவது மாநிலம் எது?**



அ. குஜராத்

ஆ. மத்திய பிரதேசம்

**இ. சத்தீஸ்கர் ☑**

ஈ. மகாராஷ்டிரா

✓ சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள கங்கேர்காட்டி தேசிய பூங்காவில் உள்ள குடியாபதர் மற்றும் நாகல்சர் கிராமங்களின் சமூக வன வள உரிமைகோரல்களுக்கு மாநில அரசு ஒப்புதலளித்துள்ளது. இதன்மூலம், ஒடிசாவிற்கு அடுத்தபடியாக தேசிய பூங்காவிற்குள் சமூக வன வளத்தை அங்கீகரித்த இரண்டாவது மாநிலமாக சத்தீஸ்கர் ஆனது. இந்த உரிமைகள் வனவாசிகளுக்கு பல்வேறு அரசாங்கத் திட்டங்களின்கீழ் கிடைக்கும் நிதியைப் பெற முடிவெடுக்கும் மற்றும் வன நிர்வாகத்தில் அதிகாரமளிக்கின்றன.

**6. எந்த நாட்டின் செவ்வாய் தரையிறங்கி, சமீபத்தில் மற்றொரு கிரகத்தில் காணப்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கத்தைக் கண்டறிந்தது?**



அ. ஐக்கிய அரபு அமீரகம்

**ஆ. அமெரிக்கா ☑**

இ. சீனா

ஈ. இஸ்ரேல்

✓ NASAஇன் இன்சைட் செவ்வாய் தரையிறங்கியாயனது வேறொரு கிரகத்தில் இதுவரை கண்டிராத மிகப்பெரிய நிலநடுக்கத்தை கண்டறிந்துள்ளது. இந்த ஊர்தி 2018 நவம்பரில் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது. இதுவரை 1,313 நிலநடுக்கங்களை அது கேட்டுள்ளது. அவற்றுள் மிகப்பெரியதான 'மார்ஸ்கக்' 2021 ஆகஸ்ட் மாதத்தில் கண்டறியப்பட்டது. பூமியில் நிலநடுக்கங்கள் டெக்டோனிக் திட்டுகளில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படுகின்றன, ஆனால் செவ்வாய் கிரகத்தில் டெக்டோனிக் தட்டுகள் ஏதுமில்லை.

**7. 'Fostering Effective Energy Transition' என்ற அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ. உலக வங்கி

**ஆ. உலகப் பொருளாதார மன்றம் ☑**

இ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ. பன்னாட்டு எரிசக்தி நிறுவனம்

✓ உலகப் பொருளாதார மன்றம் (WEF) சமீபத்தில் 'Fostering Effective Energy Transition' அறிக்கையை வெளியிட்டது. இந்த ஆய்வின்படி, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் தாங்குமை திறன் ஆகியவற்றுக்கான சவால்களை எதிர்கொள்ள, ஒரு மீளாற்றல் மாற்றத்தை உறுதிசெய்ய தனியார் மற்றும் பொதுத்துறைகளின் அவசர நடவடிக்கை தேவை. அக்சென்ச்சர் நிறுவனத்துடன் இணைந்து வெளியிடப்பட்ட சிறப்புப் பதிப்பு அறிக்கை, ஆற்றல் மாற்றத்தை முன்னேற்றுவதற்கு அரசாங்கங்கள், நிறுவனங்கள், நுகர்வோர்களுக்கான பரிந்துரைகளை இந்த அறிக்கை பட்டியலிட்டுள்ளது.

**8. $250,000 மதிப்புள்ள குளோபல் நர்சிங் விருது – 2022 வென்ற அன்னா கபாலே துபா சார்ந்த நாடு எது?**



**அ. கென்யா ☑**

ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

இ. நைஜீரியா

ஈ. தென்னாப்பிரிக்கா

✓ கென்யா நாட்டைச் சேர்ந்த அன்னா கபாலே துபா 'ஆஸ்டர் கார்டியன்ஸ் குளோபல் நர்சிங் விருது – 2022'இன் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இது சுகாதாரத் துறையில் $250,000 டாலர்கள் மதிப்புடைய சிறந்த விருதுகளுள் ஒன்றாகும். கபாலே துபா அறக்கட்டளையின்கீழ், அவர் தனது கிராமத்தில் ஒரு பள்ளியைக்கட்டினார். அங்கு குழந்தைகள் காலையில் படிக்கலாம் மற்றும் பெரியவர்கள் மதியம் படிக்கலாம். அவர் தனது சமூகத்தில் பாலின சமத்துவம் மற்றும் கல்விக்காக வாதிடுபவராக உள்ளார்.

**9. எந்த நாட்டு அறிவியலாளர்கள் நிலவின் மண்ணில் முதன்முறையாக தாவரங்களை வளர்த்துள்ளனர்?**



**அ. அமெரிக்கா ☑**

ஆ. இந்தியா

இ. ஜப்பான்

ஈ. சீனா

✓ அமெரிக்காவில் உள்ள புளோரிடா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் நிலவின் மண்ணில் தாவரங்கள் வெற்றிகரமாக முளைத்து வளரமுடியும் என்பதை நிரூபித்துள்ளனர். தாவரங்கள் வளர்க்கப்பட்ட நிலவின் மண் 'சந்திர ரெகோலித்' என்று அழைக்கப்படுகிறது. அப்பல்லோ பயணங்களில் விண்வெளி வீரர்களால் பூமிக்கு அது கொண்டுவரப்பட்டது. அரபிடோப்சிஸ் தாவரம் அதன் மரபணு குறியீடு முழுமையாக வரைபடமாக்கப்பட்டுள்ளதால் ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படுகிறது. இது எதிர்கால விண்வெளி பயணங்களின்போது நிலவில் உணவு மற்றும் ஆக்ஸிஜனை உற்பத்தி செய்வதற்கான ஒருபடியாக பார்க்கப்படுகிறது.

**10. எந்த இந்திய மாநிலத்தின் புதிய முதலமைச்சராக மாணிக் சாஹா பதவியேற்றார்?**



அ. அஸ்ஸாம்

**ஆ. திரிபுரா ☑**

இ. மேகாலயா

ஈ. மணிப்பூர்

✓ திரிபுரா மாநிலத்தில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முதல்வர் பிப்லப் குமார் தேப் தனது பதவியை ராஜினாமா செய்தார். மாநிலங்களவை உறுப்பினரும் மாநில கட்சித்தலைவருமான மாணிக் சாஹா புதிய அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். திரிபுராவின் புதிய முதல்வராக மாணிக் சாஹா பதவியேற்றார்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. குரங்கு அம்மை: நைஜீரியாவில் முதல் உயிரிழப்பு**

குரங்கு அம்மை நோய்த்தொற்றுக்கு நிகழாண்டு முதல்முறையாக நைஜீரியாவில் ஒருவர் உயிரிழந்தார். பெரியம்மை வகையைச் சேர்ந்த குரங்கு அம்மை வைரஸ் ஆப்பிரிக்க நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் பரவி வருகிறது. மே

26–ஆம் தேதி வரையிலான நிலவரப்படி 23 நாடுகளில் சுமார் 257 பேருக்கு இந்த நோய்த்தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தது. 2017–ஆம் ஆண்டு குரங்கு அம்மை நோய்த்தொற்று நைஜீரியாவில் முதலில் கண்டறியப்பட்டது. நிகழாண்டில் இதுவரை 21 பேருக்கு குரங்கு அம்மை பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

---

**2. ₹9.27 இலட்சம் கோடி வர்த்தகம்: சீனாவை பின்னுக்குத் தள்ளி இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியான அமெரிக்கா**

கடந்த நிதியாண்டில் இந்தியா–அமெரிக்கா இடையிலான வர்த்தக மதிப்பு 119.42 பில்லியன் டாலர்களை (சுமார் ₹9.27 இலட்சம் கோடி) எட்டியது. இதன்மூலம் சீனாவை பின்னுக்குத்தள்ளி இந்தியாவின் மிகப்பெரிய கூட்டாளியாகியுள்ளது அமெரிக்கா.

இந்தப் புள்ளிவிவரத்தை மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ளது. அந்தப் புள்ளிவிவரத்தின்படி, கடந்த 2013–14 முதல் 2017–18–ஆம் நிதியாண்டு வரையும், 2020–21–ஆம் நிதியாண்டிலும் இந்தியாவின் முதன்மை வர்த்தகக் கூட்டாளியாக சீனா திகழ்ந்துள்ளது. இந்நிலையில், கடந்த நிதியாண்டில் சீனாவை பின்னுக்குத்தள்ளி இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாகியுள்ளது அமெரிக்கா.

**அமெரிக்காவுடன் உபரி, சீனாவுடன் பற்றாக்குறை:** இந்தியா–சீனா இடையே வர்த்தகப்பற்றாக்குறை நிலவுகிறது. கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 44 பில்லியன் டாலர்களாக (₹3.41 இலட்சம் கோடி) இருந்தது. இது கடந்த நிதியாண்டில் 72.91 பில்லியன் டாலர்களாக (₹5.66 இலட்சம் கோடி) அதிகரித்தது. அதேவேளையில், இந்தியா–அமெரிக்கா இடையே வர்த்தக உபரி நிலவுகிறது. கடந்த நிதியாண்டில் அமெரிக்காவுடனான இந்தியாவின் வர்த்தக உபரி 32.8 பில்லியன் டாலர்களாக (₹2.54 இலட்சம் கோடியாக) இருந்தது.

---